முகப்பு:
மதுரைக், கூடலழகர் திருக்கோயில்
அருள்மிகு
வேணுகோபால சுவாமி

# திருக்கோயில்

மாலை : 20 | பிங்கள ஆண்டு—மார்கழித் திங்கள் டிசம்பர்—1977 | மணி : 3

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள் :

''ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15/- உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1/- வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9.60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20/-ல் இருந்து ரூ. 25/- ஆக ஜனவரி 78 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



R. RAJU
Dy Commissioner H.Qrs.
HR&CE Administration Dept

## பொருளடக்கம்

திருவருட்பிரகாச வள்ளலார்
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,

இந்தியப் பெருந் தத்துவ ஞானிகள்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

தொல்காப்பியச் சிறப்பு
—ஆசிரியர்

கந்தபுராணக் காப்பியநலம்
—திரு. சு. த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.லிட்.

அருட்பெருஞ்சோதி அகவல்
—தவத்திரு குருகுலம் அழகரடிகள்

சென்னையில் சிவாஜி தரிசித்த சென்னப்பன்
—திரு. பண்டித நடேசனார், பி.ஏ.,

பேதையும் மேதையுமான சீதை
—திரு. சு. முருகேச முதலியார்

தொல்காப்பியம் விளக்கும் சமய தத்துவ ஞானக் கருத்துக்கள்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ. எம்.ஓ.எல்.

சௌந்தரிய லகரி (மூலம்)
—வீரைக் கவிராச பண்டிதர்



ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

# திருவருட்பிரகாச வள்ளலார்*



திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
ஆணையாளர், அறநிலையத் துறை, சென்னை.

## முன்னுரை :

உலகில் தீமை பெருகி, நன்மை நலியும் போதெல்லாம், இறைவன் திருஅவதாரம் செய்கின்றான்; அல்லது தனது அருள்பெற்ற அடியவர்களை அனுப்பி வைக்கின்றான் எனப் பெரியோர்கள் கூறுவர். அம்முறையில் அவ்வப்போது நம் தமிழகத்தில், அருட் சான்றோர்கள் பலர் தோன்றி வந்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவராக அண்மைக்காலத்தில் தோன்றியருளியவர், திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் நமது இராமலிங்க அடிகளார் ஆவார்.

இராமலிங்க அடிகள், ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன்'' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டு இருத்தல் காணலாம். உலகத்தைத் திருத்தி உய்விப்பதற்காக, அந்தந்த யுகம் அல்லது காலத்தில் இறைவன், தன் அருளுலகினின்று அனுப்பி வைக்கும் சான்றோர்களை ''யுக புருஷர்'' என்பர். அம்முறையில் ஆராய்ந்தால், இந்த யுகம் அல்லது காலச் சூழ்நிலைக்கு ஏற்ப, உலகத்தைத் திருத்தி, உய்யும் நெறி காட்டி யருள்வதற்காக, இறைவனால் அனுப்பப் பெற்ற அருட்பெருஞ் சான்றோர், இராமலிங்க அடிகளார் ஆவர் என நாம் துணிந்து கூறலாம். இவ்வுண்மையினை இராமலிங்க அடிகளாரே, தமது திருவருட்பாப் பாடல் ஒன்றில் இனிது எடுத்து மொழிந்திருத்தல் காணலாம்.

''அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த வுலக ரனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திட,அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுதற் கென்றே, எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க
வுற்றேன் அருளைப் பெற்றேனே''

எனவரும் திருவருட்பாப் பாடலில், இக்கருத்தை இராமலிங்க அடிகளார், மிகவும் தெளிவுற எடுத்துக் கூறியிருக்கக் காண்கின்றோம்.

இப்பாடலில் ''உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட, எனை இந்த யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்'' என்று மிகத் தெளிவாக அடிகளார் அறிவுறுத்தியிருத்தல், நாம் பொன்னினும் மணியினும் போற்றத் தக்கதாகும்.

## பலதிறச் சிறப்புக்கள் :

திருவருட்பிரகாச வள்ளலார் ஒருசிறந்த பக்தர் (Devotee), ஓர் உயர்ந்த ஞானி (Saint), ஒரு பெரும் யோகசித்தர் ( Mystic ), என்று மட்டும் நாம் அனைவரும் பொதுவாக அறிவோம். ஆனால், வள்ளலார் இன்னும் எத்தனை எத்தனையோ நிலைகளில் தலைசிறந்தவர் ஆவார்!

அடிகளார் ஒரு சிறந்த சொற்பொழிவாளர் ( Orator ), பெரும் புலமையாளர் (Scholar), ஒப்பற்ற பெருங் கவிஞர் ( Poet ), சிறந்த உரையாசிரியர் ( Commentator ), அழகிய இனிய உரைநடையாளர் ( Prose-writer ), ஆற்றல் மிக்க ஒரு பதிப்பாசிரியர் (Editor), சமய நெறிப் பெருந்தலைவர் (Religious Leader), திறமை மிக்க அமைப்பாளர் (Organiser and Originator) என்று போற்றத் தக்க நிலையில், பல்வேறு துறைகளிலும் தலைசிறந்து திகழ்ந்திருந்தார்.

(1) சென்னை இலிங்கிச் செட்டித் தெருவில் அன்பர் ஒருவரின் இல்லத்தில், தன் தமையனாருக்குப் பதிலாக மிக இளம் பருவத்திலேயே, வள்ளலார் ஆற்றிய பெரியபுராணச் சொற்பொழிவு, அவர்தம் சொல்வன்மைத் திறனை விளக்கும்.

(2) தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார், பொன்னேரி சுந்தரம்பிள்ளை முதலிய பற்பல பெரும்புலவர்கள், அடிகளார்பால் பாடம்கேட்டு மாணவர்களாக விளங்கி, அதன்மூலமாகவே புலமையும் புகழும் பெற்றுத் திகழ்ந்தார்கள்.

(3) அடிகளார் எத்தகைய பெருங்கவிஞர் என்பதனைக் கல்லையும் கரைத்து உருக்கிக் கனி

* பொள்ளாச்சி திரு என். மகாலிங்கம் அவர்கள், திருமயிலை இராசேசுவரி கல்யாண மண்டபத்தில் நிகழ்த்திய ''வள்ளலார் விழா''வுக்குத் தலைமை தாங்கி, அறநிலைய ஆணையர் அவர்கள் நிகழ்த்திய தலைமையுரை இங்கு வெளியிடப்பெறுகின்றது.
—ஆசிரியர்.

விக்கும் திருவருட்பாப் பாடல்களின் மூலம், நாம் தெளிவுற அறிகின்றோம்.

*(4)* சென்ற நூற்றாண்டு வரையில், நம் தமிழில் எல்லா நூல்களும் பெரிதும் செய்யுள்களிலேயே அமைந்திருந்தன. உரைநடை போதிய அளவு வளராமலேயே இருந்து வந்தது. அந்நிலையில் அடிகளார் எழுதிய மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் இருபெரு நூல்களும், வள்ளலார் எத்தகைய அழகிய இனிய உரைநடை எழுதும் வல்லமை மிக்கவர் என்பதற்குச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

*(5)* வள்ளலார் ஓர் ஆற்றல்மிக்க, திறமைவாய்ந்த பதிப்பாசிரியர் என்பது, இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னரே ஒழிவில் ஒடுக்கம்-தொண்டமண்டல சதகம்-சின்மயதீபிகை என்னும் நூல்களை, அவர்கள் ஆராய்ந்து பதிப்பித்துள்ள அருமைப் பாட்டால் நாம் தெளியலாம்.

*(6)* ஒழிவில் ஒடுக்கம் சிறப்புப் பாயிரத்திற்கும், தொண்டமண்டல சதகத்தின் காப்புச் செய்யுளுக்கும், அடிகளார் எழுதிச் சேர்த்திருக்கும் விரிவுரை, அவரது உரை எழுதும் திறனை உணர்த்துகின்றது.

*(7)* வள்ளலார் நிறுவிய சத்திய தருமச் சாலை, சத்திய ஞானசபை, சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்னும் நிறுவனங்கள், அவர் எத்தகைய அமைப்பாண்மைத் திறன் (Organising Capacity) வாய்ந்தவர் என்பதனைப் புலப்படுத்தும்.

''திருவளர் திருச்சிற் றம்பலம் ஓங்கும்
சிதம்பரம் எனும்பெருங் கோயில்,
உருவளர் மறையும் ஆகமக் கலையும்
உரைத்தவாறு இயல்பெறப் புதுக்கி,
மருவளர் மலரின் விளக்கி, நின் மேனி
வண்ணங்கண்டு உளம்களித் திடவும்,
கருவளர் உலகில் திருவிழாக் காட்சி
காணவும், இச்சைகாண் எந்தாய்!''

''தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும், சங்கம்
சார்திருக் கோயில் கண்டிடவும்,
துங்கமே பெறும்சற் சங்கம் நீடூழி
துலங்கவும், சங்கத்தில் அடியேன்
அங்கம் குளிர நினைப் பாடி
ஆடவும், இச்சைகாண் எந்தாய்''

## (1) திருவள்ளுவர் :

உலகப் புகழ்பெற்ற தமிழ்ப் பெருஞ் சான்றோராகிய திருவள்ளுவரைப் போலவே, நமது திருவருட் பிரகாச வள்ளலாரும், பல வகைகளில் சிறந்து விளங்குகின்றார். திருவள்ளுவரின் திருக்குறள், உலக மக்கள் அனைவராலும் போற்றப்படும் சிறப்புடையதாதல் போலவே, நம் வள்ளலாரின் திருவருட்பாவும் சிறப்புமிக்கு விளங்குகின்றது.

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

என்று, திருவள்ளுவர் புலால் மறுத்தலைப் பெரிதும் வற்புறுத்தினார். அவ்வாறே நம் வள்ளலாரும், ''உயிர்க்கொலையும், புலைப்பசிப்பும், உடையரெலாம் புறவினத்தார்'' என்று சொல்லி, ஜீவகாருண்ய ஒழுக்கத்தைப் பெரிதும் உபதேசித்தார்.

''அற்றார் அழிபசி தீர்த்தல், அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

என்று, திருவள்ளுவர் ஏழை மக்களின் வயிற்றுப் பசிப்பிணியைப் போக்கி உதவி புரிதலை மிகவும் வற்புறுத்தினார். அச்செயலையே இராமலிங்க அடிகளும், பெரிதும் உபதேசித்து, இடையறாது அன்னதானம் நிகழும் சத்திய தருமச் சாலை என்னும் அறச்சாலையை, சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னரே நிறுவியருளினார்.

''மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்கு
இல்லையென்றார் மேலோர்; நானும்
பொய்விளக்கே விளக்கெனஉட் பொங்கிவழி
கின்றேனோர் புதுமையன்றே!
செய்விளக்கும் புகழுடைய சென்னைநகர்
நண்பர்களே! செப்பக்கேளீர்!
நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கும்
எரிந்தது சந்நிதியின் முன்னே''

என்னும் திருவருட்பாப் பாடலில் இராமலிங்க அடிகளார், ''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு'' என்னும் திருக்குறளை எடுத்தாண்டிருத்தல் காணலாம். இவ்வாறே 'நெஞ்சறிவுறுத்தல்'' என்னும் கலிவெண்பாவிலும் வள்ளலார் பல திருக்குறட் பாடல்களை எடுத்துப் போற்றியிருத்தல், திருக்குறளில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினையும், திருவள்ளுவர்பால் அவர் பாராட்டிய பெரு மதிப்பினையும் இனிதுணர்த்துகின்றது.

## (2) பட்டினத்தார் :

''பார் அனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல், ஆரும் துறத்தல் அரிது அரிது'' என்று புகழ்ந்து போற்றப் பெறும் பட்டினத்தடிகளாரைப் போலவே, நம் வள்ளலாரும் மண் பெண் பொன் என்னும் மூவாசைகளையும் முற்றத் துறந்து, பற்றற்ற பெரு ஞானியாக விளங்கினார்.

''பணத்திலே சிறிதும் ஆசை ஒன்றில்லை;
நான் படைத்த பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன்; குளத்திலும் எறிந்தேன்;
கேணியில் எறிந்தனன் எந்தாய்''

என்பன போன்றுவரும் பாடல்களால், வள்ளலாரின் பற்றற்ற உள்ளத்தினை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

பட்டினத்தார் வழிபட்டு, சமாதிக்கோயிலும் கொண்ட, திருவொற்றியூர்த் தலத்தின்பால், வள்ளலாரும் மிகுந்த பக்தியும் பற்றும்

கொண்டு வழிபட்டு வந்தார். திருவொற்றியூர்த் தியாகேசப் பெருமான்மீது இங்கிதமாலை என்னும் நூலும், அங்குள்ள அம்பிகையின்மீது வடிவுடை மாணிக்கமாலை என்னும் நூலும் பாடியருளியிருக்கின்ருர்.

## (3) மகாவீரர் :

ஜீவகாருண்ய நெறியையும், ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையினையுமே, தம் வாழ்க்கையாலும் பாடல்களாலும் வற்புறுத்தி இருப்பதனுல், வள்ளலார் மகாவீரரைப் போலச் சிறந்து விளங்குகின்ருர்.

''கருணையே வடிவாய், பிறர்களுக்கு அடுத்த
கடுந்துயர் அச்சம் ஆதிகளைத்
தருணநின் அருளால் தவிர்த்து, அவர்க்குஇன்பம்
தரவும்; வன்புலை கொலைஇரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உஞற்றவும்; அம்பலம் தனிலே
மருவிய புகழை வழுத்தவும்; நின்னை
வாழ்த்தவும்; இச்சைகாண் எந்தாய்''

''மண்ணுலகு அதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறிது எனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்;
எண்ணுறும் எனக்கே, நின்அருள் வளத்தால்
இசைத்தபோது இசைத்தபோது எல்லாம்
நண்ணும்அவ் வருத்தம் தவிர்க்க, நல் வரந்தான்
நல்குதல், எனக்கு இச்சை எந்தாய்''

## (4) திருமூலர் :

நம் தமிழ்நாட்டில், யோக நெறியில் ஒப்புயர்வற்று விளங்கியவர் திருமூலர். அவர் அருளிச் செய்த அரும்பெரும் நூல், திருமந்திரம்! வள்ளலார் திருமந்திரத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்.

''தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்;
சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம்''

என்பது வள்ளலார் அருளிய தெளிவுரை.

''திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்,
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்,
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்,
மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும்
வண்ண மும் திருவுளம் அறியும்''

என்னும் திருவருட்பாப் பாடலில், இராமலிங்கர் இறைவன் தமக்குத் திருமந்திரப் பொருளை விளக்கியருளியதாகக் குறிப்பிட்டிருத்தல், ஓர்ந்து உணரற்பாலது. திருமூலரைப்போலவே, நம் வள்ளலாரும் யோகசித்தி நெறிகளில் சிறந்து திகழ்ந்திருந்தார். அதனுலேயே, வள்ளலார் பிரணவதேகம் என்னும் ஒளியுருவம் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு என்னும் வீடுபேற்று நிலை எய்தினர்.

''காற்றுலே புவியாலே ககனம் அதனுலே
கனலாலே புனலாலே கதிர்ஆதியாலே
கூற்றுலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க
ளாலே
வேற்றுலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யெனக்கு வேண்டும் என்றேன்;
விரைந்தளித்தான் எனக்கே;
ஏற்றுலே இழிவைநீர் நினையாதீர்! உலகீர்!
எந்தை அருட் பெருஞ் சோதி இறைவனைச்
சார்வீரே''

## (5) நால்வர்கள் :

வள்ளலார் ஓதாது இளமையிலேயே யாவும் உணர்ந்தமையால் சம்பந்தரையும்; தொண்டு நெறியின் சிறப்பினுல் அப்பரையும்; சகமார்க்கம் என்னும் யோக சித்தி நெறி கடைப்பிடித்து ஒழுகியதனுல் சுந்தரரையும்; கருங்கல் மனமும் கரைந்து உருகும்படி திருவருட்பாப் பாடல் பாடிய திறனுல் மாணிக்கவாசகரையும் போன்ற சிறப்பு வாய்ந்து திகழ்கின்ருர். நால்வர் பெரு மக்களிடத்தில், இராமலிங்கர் கொண்டிருந்த பெருமதிப்புக்கும் பக்திக்கும் எல்லையேயில்லை.

''சேல்வரும் கண்ணி இடத்தோய்! நின்
சீர்த்தியைச் சேர்த்தி,அந்த
நால்வரும் செய் தமிழ்கேட்டுப்
புறத்தில் நடக்கச், சற்றே
கால்வரும் ஆயினும், இன்புருவாகிக்
கனிமனம்அப்
பால்வருமோ? அதன்பாற் பெண்களை
விட்டுப் பார்க்கினுமே''

என்று அருளிச் செய்திருத்தலால், இராமலிங்கருக்குச் சைவசமய ஆசிரியர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்பெருமக்களிடத்தில், எத்தகையவர் அன்பும் பக்தியும் ஈடுபாடும் இருந்திருந்தன என்பது விளங்கும்.

''வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவை
கலந்து, என்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

''வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்,இங்கு நானடைதல் வியப்
பன்றே.''

என்பனபோன்ற பாடல்களால், இராமலிங்க அடிகளார் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தினைத் தம் உயிரினும் இனிய விழுமிய நூலாகப் பெரிதும் போற்றி ஓதியதனை, நாம் உணரப்பெறுகின்ருேம். திருவருட்பிரகாச வள்ளலாரின் சிறப்பியற் பண்புநலங்களையெல்லாம் தெரிந்து தெளிந்து கொள்ளுவதற்கு, இத்தகைய திருப்பாடல்கள் பலவும் நமக்குப் பெருந்துணை புரிகின்றன

## வள்ளலார் நெறி

இராமலிங்க அடிகளார் தோன்றிய காலத்தில், மக்கள் பல்வேறு வகைகளில், தமக்குள் பிளவுபட்டுச் சிதறிக் கிடந்தனர். மக்களிடையே பூசலும் கலாமும் போரும் பிணக்கமும் மிகுந்திருந்தன. அன்பினுல் ஒன்று பட்டு இன்புற்று நலன் அடைவதற்குரிய மக்கள், இவ்வாறு தம்முள் ஒருவரோடு ஒருவர் இகலிப் பகைத்துக் கலாய்த்து இடர்ப்படுதல் கண்டு, இராமலிங்க வள்ளலார் அளவிலாத் துயரம் கொண்டார். மக்களையெல்லாம் எவ்வகையாலேனும் ஒற்றுமைப்படுத்தி உய்விக்கத் திருவுள்ளம் பற்றினுர். தவருன தீய துன்மார்க்க நெறிகளில் சென்று கெடுபவர்களைத், தூய நல்ல சன்மார்க்க நெறியில் செலுத்தித் திருத்தி, இறையருளைப் பெறுவிக்கப் பெரிதும் முயன்ருர்.

உலகத்தில் தீய துன்மார்க்கங்கள் கெட்டு, தூய சன்மார்க்க ஒழுக்கம் ஓங்கி வளர்தல் வேண்டும் என்று, வள்ளலார் பெரிதும் பாடுபட்டருளினுர். மக்களின் மனத்தே நன்கு இனிது பதியும்வண்ணம் பற்பல அறிவுரைகளையும் அருளுரைகளையும் வழங்கினுர். அவர்தம் பாடல்கள் ஒவ்வொன்றும், மக்களின் குற்றங்குறைகளை எடுத்துக்காட்டி, அவர்களைப் புன்நெறியில் போகவொட்டாமல் தடுத்து, நன்னெறிக்கே உய்க்கும் நலம் நிரம்பித் திகழ்கின்றது.

மக்களிடையில் எத்தகைய பேதமும் இருத்தல் கூடாது; அவர்கள் அனைவரும் பேதமின்றி அன்பினுல் ஒன்றுபட்டு இன்புறுதல் வேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு நேர்தல் கூடாது. எல்லா உயிர்களும் துன்பமின்றி இன்பமுற்று வாழ்தல் வேண்டும். எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி, மக்கள் சீவகாருண்யம் என்னும் செந்தண்மை நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். கொலையும் புலையுமாகிய குற்றங்களைச் செய்யாமல், மக்கள் அனைவரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை உணர்வு உடையவர்களாய், ஜீவகாருண்யம் என்னும் செந்தண்மை நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். இரக்கம் மேலோங்க நல்வாழ்வு நடத்துதல் வேண்டும். உலகியற் களியாட்டங்களில் மயங்கி மாய்ந்து போகாமல், இறையருள் உணர்வோடு மக்களெல்லோரும் ஒத்த உரிமையுடையவர்களாய் உவந்து வாழ்தல் வேண்டும் என்று, இராமலிங்க வள்ளலார், தமது பாடல்களிலெல்லாம் இடைவிடாது அறிவுறுத்தியுள்ளார். இதன் பொருட்டே அவர், சமரச சன்மார்க்கம் என்னும் சான்ருண்மை நன்நெறி இயக்கத்தைத் தகவுறத் தோற்றுவித்தருளினுர்.

எத்துணையும் பேதமுருது, எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி, உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்ருர்
யாவர்; அவர்உளம் தான், சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான் தேர்ந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கு ஏவல் புரிந்திட,என்
சிந்தைமிக விழைந்த தாலோ!

## முடிவுரை :

இராமலிங்க வள்ளலார், நம் தமிழகத்தில் தோன்றியருளிய ஓர் இணையற்ற பெரும் சான்ருேராவர். தமிழ் மொழிக்கே உரிய இனிமை, எளிமை, உருக்கம், தெளிவு, தெய்விகம் என்னும் சிறப்பியல்புகள், அவர் அருளிய திருவருட்பா என்னும் செந்தமிழ்க் கலைப்பெரும் கருவூலத்தில் ஒருங்கு கலந்து நிரம்பித் திகழ்கின்றன. இறையருட் புகழ்த் துதி நூல்களில், உலக இலக்கியங்களில் தலைசிறந்த ஒன்ருகத் திருவருட்பாவும் திகழ்கின்றது என நாம் துணிந்து கூறலாம். இஃது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. ஆதலின், திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் வடலூர் இராமலிங்க அடிகளாரையும், அவர் அருளிச் செய்துள்ள திருவருட்பா என்னும் செந்தமிழ்த் தெய்விகப் பாடல்களையும், நாம் நயந்தினிது போற்றி உய்ய முயலுவோமாக!

# திருத்தணிகைத் திருப்படி விழா

திருத்தணிகையில் வழக்கம்போல் இவ்வாண்டும், 1977 டிசம்பர் 31-ஆம் தேதியிலும், 1978 ஜனவரி முதல் தேதியிலும், பல லட்சக்கணக்கில் ''திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும்'' திருத்தணிகைத் திருப்படி விழா, மிகவும் சிறப்புற நடைபெற உள்ளது. பக்தர்கள் பல லட்சக் கணக்கில் வழக்கம்போல் திரண்டுவந்து, திருப்படி விழாவில் கலந்துகொண்டு, எல்லாம் வல்ல நம் திருத்தணிகை முருகப்பெருமானின் திருவருளைப் பெற்று உய்ந்து, இன்புற்று மகிழ வேண்டிக் கொள்ளப்பெறுகின்றனர்.

எஸ். சோமசுந்தரம்,
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி,
அருள்மிகு சிப்பிரமணியசுவாமி திருக்கோயில்
திருத்தணி-631209.

# இந்தியப் பெருந் தத்துவ ஞானிகள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

## முன்னுரை :

நமது இந்திய நாடு, பழமையும் பெருமையும் நிறைந்தது ; நாகரிகமும் கலைவளமும் பண்பாடும் செறிந்தது ; ஞானத்திலும் பரமோனத்திலும் சிறந்தது. பிற துறைகளில் எவ்வாறு இருப்பினும், சமய அனுபவத்திலும், தத்துவ உணர்விலும் தலைசிறந்து விளங்கி, ஏனைய பிற நாடுகளுக்கெல்லாம் இனிய நல்ல வழி காட்டியாகத் திகழ்தற்குரியது, நமது இந்திய நாடேயாகும் (1). தொன்று தொட்டே நமது இந்திய நாட்டில், சமயப் பெருஞ் சான்றோர்களும், தத்துவ ஞானிகளும் மிகப் பலர், வாழையடி வாழையாகத் தோன்றி வந்துள்ளனர். அவர்களுள், மிகவும் முதன்மை வாய்ந்தொளிரும் தத்துவ ஞானிகள் ஒரு சிலரைப் பற்றிய குறிப்புக்களை மட்டும், ஈண்டுக் காண்போம்.

## சங்கரர் (கி.பி. 788-820):

மலையாள நாட்டில், ஆல்வாய்ப்புழை என்னும் நதிக் கரையில், காலடி என்ற இடத்தில், ஆத்திரேய கோத்திரத்தில், சிவ குரு என்னும் தந்தைக்கும், ஆர்யாம்பிகை என்னும் தாயார்க்கும், திருச்சூர் விருஷபாசலேசுவரர் அருளால் தோன்றினர். நருமதை நதிக்கரையில் தவம் புரிந்து கொண்டு இருந்தவரும், கௌடபாதர் என்பவரின் மாணவரும் ஆகிய, கோவிந்த யோகீந்திரர் என்னும் குருவை யடைந்து, அவர் பால் அருளுபதேசம் பெற்றார். பாரத நாடு முழுவதும் யாத்திரை செய்து, பல செயற்கருஞ் செயல்கள் புரிந்தார். காசியில் வியாச தரிசனம் பெற்றார். பதரிகாசிரமத்தில் ஒரு விஷ்ணுகோயில் எடுப்பித்தார். ஸ்ரீ நகரில் 'விஷ்ணு சகஸ்ரநாம பாஷ்யம்' செய்தார். பிரயாகைத் திரிவேணி சங்கமத்தில் நீராடினர். குமாரில பட்டர் என்பவரைச் சந்தித்தார். அவர் கூறியபடி மாகிஷ்மதி நகரத்தில், மண்டனமிச்ரர் என்பவரைக் கண்டார். சரசவாணி என்னும் அவர்தம் மனைவியார் நடுவராக விளங்க, மண்டன மிச்ரருடன் வாதம் புரிந்து வென்றார். வாதில் தோற்ற மண்டன மிச்ரர், சுரேசுவராசார்யர் என்னும் பெயர் பூண்டு, இவருக்கு மாணவராயினர். பிரயாகையில் ஒருவருக்குத் தொழுநோய் தீர்த்து, உதங்கர் என்ற மாணவராக ஏற்றார். கௌசாம்பியில் இறந்த சிறுவன் ஒருவனை உயிருடன் எழுப்பினர். அமர சிம்மன் என்னும் சமண மன்னன் இயற்றிய அமரகோசம் என்னும் வடமொழி நிகண்டு நூலை, அழியாமற் காத்துப் பரவச் செய்தார். ஸ்ரீசைலத்தில் உக்கிர பைரவன் என்னும் காபாலிகனை வென்றி கண்டார்.

யாகம் முதலிய கருமங்களைப் புரிவதே முக்கியம் என்னும் மீமாஞ்சகரின் கொள்கையைக் கண்டித்தார். ஞானமே வீடு பேற்றுக்குரிய சாதனம் என்று நிறுவினர். பௌத்த சமண சமயங்களின் தவறான கொள்கைகளைக் கடிந்தார். இந்து மதத்தின் சீர்கேடுகளைப் போக்கி, ஆலய வழிபாட்டு முறைகளைத் திருத்தி அமைத்தார். சிருங்கேரி பூரி துவாரகை பத்ரிநாத் காஞ்சி என்னும் இடங்களில் ஆசாரிய பீடங்களை ஏற்படுத்தினர். சுரேசுவரர் பத்மபாதர் அஸ்த்தாமலகர் தோடகர் முதலியவர்கள், இவர்தம் மாணவர்கள் ஆவர்.

பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, உபநிஷதங்கள் ஆகியவற்றுக்கு உரைகள் இயற்றினர். மனீஷா பஞ்சகம், கனகதாரா ஸ்தவம், தச சுலோகி, விவேக சூடாமணி, பிரமோத கீதா சாரம், ஆத்மபோதம், பஜகோவிந்தம், சுப்பிரமணிய புஜங்கம், சௌந்தரிய லகரி, சிவானந்த லகரி, விஷ்ணு சகஸ்ரநாம பாஷ்யம் முதலிய பல நூல்கள், இவரால் இயற்றப் பெற்றுள்ளன.

பிரமம் என்பது இரண்டற்ற பரம்பொருள். அதற்கு வேறாகத் தோன்றும் உலகம், மாயையின் காரியம். பலவாகக் காணும் உயிர்த்

---

(1) "In an address delivered at Edinburgh University in 1952, Arnold Toynbee predicted that in 50 years the world would be under the hegemony of the United States but in the 21st century, as religion captures the place of technology it is possible that **India the conquered will conquer its conquerers.**"

—**Huston Smith,**
The Religions of Man.

(2) "Study the history of the whole world, and you will see that every high ideal you meet with anywhere had its origin, in India. From time immemorial India has been the mine of precious ideas to human societies; giving birth to high ideas herself, she has freely distributed them, broadcast over the whole world. This is the land where like the tidal waves, spirituality and philosphy have again and and again rushed out and deluged the world, and this is the land whence once more such tides must proceed in order to bring life and vigour into the decaying races of mankind. The debt which the world owes to our motherland, India, is immense."

—**Swami Vivekananda.**

தொகுதிகள், உண்மையிற் பிரமத்தின் வேறு னவை யல்ல. பிரமமும் ஆன்மாவும் ஒன்றே. இந்த ஞானத்தை அடைந்தால் பிறப்பு இறப்புக் களில் இருந்து விடுபடலாம் என்பது சங்கரர் கொள்கை. இது அத்வைதம், கேவலாத்வை தம், வேதாந்தம் என்னும் பெயர்களால் வழங்கப்படும்.

## இராமாநுசர் (கி.பி. 1017-1137):

தமிழ் நாட்டில் சென்னைக்கு அருகேயுள்ள ஸ்ரீபெரும்பூதூரில், ஆசூரி கேசவப் பெருமாள் என்னும் தந்தையாருக்கும், பூமிப் பிராட்டியார் என்னும் தாயாருக்கும் மைந்தராகத் தோன்றி னார். பெரிய திருமலை நம்பிகள், இவருக்கு இளையாழ்வான் என்னும் திருப்பெயர் இட்டார். காஞ்சிபுரத்திற்கு அணித்தேயுள்ள திருப்புட் குழி என்னும் தலத்தில் இருந்த யாதவப் பிரகா சர் என்னும் வேதாந்த ஆசிரியர்பால், இவர் சில காலம் பாடம் கேட்டார். பின்னர்த் தமது தாயாரின் கருத்தின்படி காஞ்சியில் இருந்த திருக்கச்சி நம்பிகள் என்பவரை அடைந்து, அவர்பாற் பக்தியுடன் பழகி ஒழுகி வந்தார். மதுராந்தகத்தில், ஏரி காத்த இராமபிரான் சந்நிதியில் பஞ்ச சம்ஸ்காரங்கள் செய்யப் பெற்றார். இல்லற வாழ்வில் உவர்ப்புற்றுத் துறவு நெறியினை மேற்கொண்டார். அப்போது இவருக்கு இராமாநுசர் என்றும், யதிராசர் என்றும் பெயர்கள் வழங்கப் பெறலாயின. திருக்கோட்டியூர் நம்பிகள் பக்கல் 18 முறை திருவரங்கத்தினின்று நடந்து சென்று, திரு வெட்டெழுத்து மந்திரமும், சரமசுலோக நுண் பொருளும் அறிவுறுக்கப் பெற்றார். திருமலை யாண்டான் என்பவரிடம் திருவாய் மொழிப் பொருள் கேட்டுணர்ந்தார் ; திருமலை நம்பிகள் பால் இராமாயண நுண்பொருள்களைச் செவி மடுத்தார் ; திருவரங்கப் பெருமாளரையர், இவருக்குத் திருவாய்மொழியும் தோத்திரங் களும் நல்வார்த்தைகளும் அருளிச் செய்தார்.

ஆளவந்தார் (கி.பி. 918—1037) என்னும் வைஷ்ணவப் பெருஞ் சான்றோருக்குப் பின்னர், திருவரங்கப் பெருமாள் அரையர் என்பவர் இவரைக் காஞ்சிபுரத்தினின்று அழைத்துச் சென்று, திருவரங்கம் சேர்த்தார். அங்குப் பெரிய பெருமாள் பணித்தபடி ''உடையவர்'' என்னும் பெயர் பெற்றுத் 'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்து' நாள் விழா —பட்ச விழா—மாத விழா—ஆண்டு விழா என்னும் பலதிற விழாக்களும், செவ்வியின் நிகழும்படி இராமாநுசர் இனிய ஒழுங்குமுறை களை ஏற்படுத்தி வைத்தார். திருவேங்கடம், திருநாராயணபுரம் கோயில்களிலும், பலசிறந்த ஒழுங்கு முறைகள் இவரால் வகுக்கப் பெற்றன.

போதாயன விருத்தியைத் தழுவிப் பிரம சூத்திரத்திற்கு, இவர் வகுத்த உரையின் மாட்சி மையைக் கண்டு வியந்து மகிழ்ந்த கலைமகள், இவருக்குப் ''பாஷ்யகாரர்'' என்னும் சிறப்புப் பெயரை வழங்கியருளினள் என்பர். தான் பாடியிருந்தபடி, திருமாலிருஞ்சோலைப் பெரு மாளுக்கு நூறு தடா வெண்ணெயும், அக்கார அடிசிலும் சமர்ப்பித்ததனால், ஆண்டாள் நாச்சி யார் இவரைக் ''கோயில் அண்ணர்'' என்று சிறப்பித்தார். திருக்கோட்டியூர் நம்பிகள் இவரை ''எம்பெருமானர்'' என்று புகழ்ந்து போற்றிப் பாராட்டினார்.

முதலியாண்டான், கூரத்தாழ்வான், எம் பார், அருளாளப் பெருமாள் எம்பெருமானர் முதலிய பலர், இவர் தம் மாணவர்கள் ஆவர். வைஷ்ணவ குரு பீடங்களாக 74 சிம்மாசனங் கள், இவரால் ஏற்படுத்தப் பெற்றன என்பர்.

ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க பாஷ்யம், ஸ்ரீவை குண்ட கத்யம், நித்தியம் என்னும் நூல்கள் இவரால் இயற்றப் பெற்றுள்ளன.

சித்து அசித்து ஈசுவரன் என்று மூன்று பொருள்கள் உள்ளன. சித்து எனப்படுவது ஆன்மா. அசித்து என்பது பிரகிருதியாகிய உலகம். ஈசுவரன் திருமால், ஆன்மா சேதனம், அறிவுடைய உயிர்ப் பொருள். உலகம் அசேத னம், அறிவற்ற உயிரில் பொருள். ''உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துளன்'' என்னும் நம்மாழ்வார் திருவாய்மொழியின்படி, சேதன அசேதனப் பொருள்களைத் தனக்கு உடலாகக் கொண்டு அவற்றிற்கு உயிராய் அவற்றின் வேறன்றி நிற்பவன் ஈசுவரன் என் பது இராமாநுசர் கொள்கை. இது விசிஷ்டாத் வைதம் என வழங்கும். விசிஷ்டாத்வைதம் என்பது விசிஷ்டஸ்ய அத்வைதம் என விரியும். உயிர்ப் பொருள் உயிரில் பொருள் ஆகிய இரண் டையும், தனக்கு உடலாகக் கொண்ட பரம் பொருள் இரண்டில்லை, ஒன்றேயாகும் என்பது விசிஷ்டாத்வைதக் கொள்கை.

## வேதாந்த தேசிகர் (கி.பி. 1268-1368) :

காஞ்சிபுரத்தில் திருத்தண்கா எனவழங்கப் பெறும் விளக்கொளி எம்பெருமான் சந்நிதியின் சூழலில் தோன்றியருளினர். தந்தையார் அநந்த சோமயாஜி. தாயார் தோத்திரியம்மை. ஆசிரியர், மாதுலரான கிடாம்பியப்புள்ளார் என்னும் இராமாநுசப் பிள்ளான். ஸ்ரீவேங்கட நாதசர்மா என்பது, இவர் தம் இயற்பெயர். வேதாந்தாசார்யர், கவிதார்க்கிக கேசரி, சர்வ தந்த்ர சுவதந்த்ரர், சமஸ்யா சகஸ்ரீ என்பன, பின்னர் இவருக்குப் பட்டப் பெயர்களாக வழங்கப் பெற்றன. திருவகீந்திரபுரத்தில் தெய்வ நாயகன் சந்நிதியில் பெரிய திருவடியி னல் அயக்ரீவ மந்திரம் உபதேசிக்கப் பெற் றார். அதனை இடையறாது நெடுநாள் செபித்து அயக்ரீவ மூர்த்தியின் அருளும் தரிசனமும் கிடைக்கப் பெற்றார்.

அயக்ரீவ தோத்திரம், கருட பஞ்சாசத், தேவநாயக பஞ்சாசத், அச்சுத சதகம், கோபால விம்சதி, ரகுவீர கத்யம், தேகளீச ஸ்துதி, அஷ்டபுஜாஷ்டகம்,வேகாசேது ஸ்தோத் திரம், சரணாகதி தீபிகை, காமாசிகாஷ்டகம், பரமார்த்த ஸ்துதி, ஸ்ரீஸ்துதி, வரதராஜ பஞ்சாசத், வைராக்ய பஞ்சகம், அபீதிஸ்தவம், சங்கல்ப சூர்யோதயம், பாதுகா சகஸ்ரம்,

என்னும் வடமொழி நூல்களும்; அடைக்கலப் பத்து, அர்த்த பஞ்சகம், ஸ்ரீ வைஷ்ணவ தின சரி, பன்னிரு நாமம், திருச்சின்ன மாலே, அத்தி கிரி மகாத்மியம் முதலிய பல தமிழ்ப் பனுவல் களும் ; வேதாந்த தேசிகரால் இயற்றப்பெற் றுள்ளன.

''சந்தமிகு தமிழ் மறையோன்' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும் வேதாந்த தேசிகர், தமிழ் வேதமாகிய திருவாய்மொழி யைத் தெளிய ஓதினல், தெளியாதமறைகளான வடமொழி வேதங்களின் பொருளேயும் ஐயம் அறத் தெரிந்து தெளிந்து கொள்ளலாம் என்று கூறியருள்கின்ருர். இராமாநுசரின் விசிஷ்டாத் வைதக் கொள்கையினைத் தமது வடமொழி, தென்மொழி நூல்களாற் பெரிதும் விளக்கி யருளிய பெருந்தகையாளர் இவர்! இவர் தம் 600ஆம் ஆண்டு விழா, அண்மையில் எங்கும் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

## மத்வாசாரியார் (1169-1278):

இந்தியாவின் மேற்குக் கரையில் உள்ள தென் கன்னட நாட்டில், உடுப்பிக்கு அருகில் கல்யாணபுரம் என்னும் ஊரில் தோன்றினர். தந்தை மத்திகேச பட்டர் ; துளுமொழி பேசும் அந்தணர். இவர் தம் இயற்பெயர் வாசு தேவர் என்பது. அச்சுதப் பிரேட்சர் என்னும் வைணவத் துறவியிடம், துறவு நிலே பெற்ருர். அவர் இவரை வேதாந்தப் புலமைக்கு அரசராக முடி சூட்டினர். பூரணமும் சுதந்திரமும் உடை யதாக இருப்பதால், சாந்திக்கு உறைவிடமாக உள்ள பிரமம் ஆகிய ஆனந்தத்தை, அடையு மாறு செய்யும் வேதப் பொருளே விளக்கிய தால், இவருக்குப் பூர்ணபிரக்ஞர், சர்வ தந்த்ர சுவதந்த்ரர், ஆனந்த தீர்த்தர் என்னும் பெயர்கள் வழங்கலாயின. பிரமத்தை அறியும் அவாவுடையவர் (பிரமஜிஞ்ஞாசு) என்பதனே விளக்கும் வகையில், இவர் தம் வாழ்க்கை அமைந்தது. பல புலவர்களே வாதத்தில் வென் றமையால் அநுமான தீர்த்தர், சர்வஞ்ஞர் முதலிய பெயர்களும் இவருக்கு வழங்கும். இவரை வாயுதேவனின் கூறு என்பர். ஆதலின் மாத்துவ நெறியில், ஆஞ்சநேயர் வழிபாடும் சிறப்பாக உண்டு.

பிரம்ம சூத்திரத்திற்கு 4 பேருரைகள், 10 உபநிடதங்களுக்கு விரிவுரைகள், பகவத் கீதைக்கு 2 விளக்க நூல்கள், மூலராமாயணம், பாரதம், பாகவதம் ஆகியவற்றுக்கு உரைகள் முதலாக 37 நூல்களே இவர் இயற்றினர் என்பர். பழமையான கிருஷ்ண வடிவம் ஒன்றை உடுப்பியில் நிறுவினர். அதையே தமது வைணவ நெறியின் நடுநாயகமாக்கினர். ஜலாலுதீன் போன்ற முஸ்லிம் மன்னர்களும் இவரை மதித்துப் போற்றினர்.

'தேருங்கால் தேவன் ஒருவனே' என்பதும், அவன் 'ஸ்ரீமத் நாராயணனே' என்பதும் மத்து வரின் கொள்கை. நான் பரம்பொருள் (அகம் பிரம்மோஸ்மி) என்ற அத்வைதக் கொள்கைக்கு எதிரிடையாக, நான் தொண்டன் (அகம் தாஸ் யோஸ்மி) என்னும் கொள்கையை, இவர் வற் புறுத்தினர். பரம்பொருள் உயிர்ப்பொருள் ஆகிய இரண்டும் தனித் தனியே இயங்கும் வேறுபட்ட நிலேயான இரு பொருள்கள் என்று இவர் தெளிவுபடுத்தினர். ஆதலின் இவரது கொள்கை துவைதம் எனப் பெறும். அது நீ ஆகின்ருய் (தத்துவமசி) என்பதனே மறுத்து, அது நீ ஆகமாட்டாய் (அதத்துவமசி) என்று பொருள் கூறி வற்புறுத்தினர். இறைவனே தலேவன், நாம் அவனுக்கு அடிமைகள் என்று உணர்ந்து, பணிவுடனும் அன்புடனும்வழிபட்டு வருவதனல் வீடுபேறு எய்தலாம் என்பது மத்வர் கொள்கை.

இவர்தம் கொள்கையை மேலும் வலி யுறுத்திப் பரப்பும் வகையில் விசயேந்திரர், விசயராசர், செயதீர்த்தர், சீனிவாச தீர்த்தர், வாதிராசர் முதலியோர், பல்வேறு சிறந்த நூல் களே இயற்றியுள்ளனர்.

## இராமாநந்தர் (கி.பி. 1299-1410):

பிரயாகையிற் பிராம்மண குலத்திற் பிறந் தவர். தந்தை புண்ணியசதர். தாய் சுசீலா. இராகவானந்தர் என்பரின் மாணவர். தாய் மொழியிலேயே சமய நூல்கள் இருக்க வேண் டும். அப்போதுதான் பாமர மக்களும் சமயத் தைப்பற்றி அறிந்து கொண்டு பயன் பெற இயலும் என்ருர். சாதி உயர்வு தாழ்வுகளே அறவே வெறுத்துக் கடிந்தவர். கபீர்தாசர் துளசிதாசர் ஆகிய இருவரும் இவருடைய சீடரே யாவர். இராமபிரானேயே முழு முதற் கடவுளாகப் போற்றி வழிபட்டார். இராமா நுசரின் விசிட்டாத்வைத தத்துவக் கொள்கை, இவர் மூலமாகவே வட இந்தியாவிற் பெரிதும் பரவிற்று என்பர். இவருடைய பாடல்கள் அடங்கிய இந்தி மொழி நூல் 'ஆதி கிரந்தம்' என வழங்கப்படுகின்றது.

## கபீர்தாசர் (1440-1518) :

காசியில் வாழ்ந்த நீரு என்னும் முகம்மதிய நெசவாளியின் மனேவி நீமா என்பவளால், ஒரு குளக்கரையில் கண்டெடுத்து வளர்க்கப் பெற் ருர். பெரியவர் எனப் பொருள்படும் கபீர் என்னும் பெயர், திருக்குரானில்கண்டெடுத்து இவருக்கு வழங்கப்பெற்றது. திருவள்ளுவரைப் போல இவரும் ஒரு நெசவாளராக வாழ்ந்து வந்தார். இராமாநந்தரைக் குருவாக அடைந் தார். இராமனும் ரகீமும் ஒன்றே ; அரியும் அல்லாவும் வேறல்ல என்ற சமரச ஞானத்தைப் பரப்பினர். இவருடைய பாடல்களில் இந்து மதத்தின் அத்வைத வுணர்வையும்,இசுலாமியத் துச் சூஃபிகளின் சமய அனுபவத்தையும் காண லாம். கடவுளேப் பற்றிய இவர் தம் பாடல் களில் 'நாயக நாயகி பாவம்' பெரிதும்அமைந்து காணப்படுகின்றது. இவர் கடவுளே இராமன் அரி கோவிந்தன் அல்லா என்னும் பெயர்களால் வழுத்தினராயினும், கடவுள் பல பிறவிகள் எடுத்தார் எனக் கூறுவது அடாதென்றும், இறைவனேக் கல் செம்பு வடிவங்களில் வைத்து வணங்குவது பொருத்தமன்று என்றும், சமயக்

கிரியைகளும் சடங்குகளும் பொருளற்ற புன்செயல்களாகும் என்றும், மிகவும் கடுமையாக மறுத்துப் பாடியுள்ளார். இந்தி மொழியின் ஒரு பிரிவான 'அவதி' மொழியில் இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. தாம் இயற்றிய 'விப்ரமதீசி' என்னும் செய்யுள் நூலிற் கபீர் தாசர் பொருளற்ற வெறும் சடங்குகளை மிகக் கடுமையாகத் தாக்கி மறுத்துள்ளார். இவர் பாடல்களைத் தர்மாசர் என்னும்சீடர்தொகுத்து வைத்துப் பரப்பினார். சீக்கிய மத குரு வாகிய குரு நானக் என்பவர், இவருடைய சீடரே யாவர். கபீர் தாசரின் முக்கியமான பாடல்களை 'பீஜக்' என்னும் நூல்களிற் காணலாம். இரவீந்திரநாத தாகூர், இவருடைய நூறு பாடல்களை வங்காளத்தில் மொழிபெயர்த்தார். ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. இவரது கொள்கையைப் பின்பற்றுவோர் 'கபீர் பந்திகள்' எனப்படுவர்.

## சைதன்னியர் (1486-1534) :

வங்காளத்திலுள்ள நவத்வீபம் (நடியா) நகரத்தில், மாயாப்பூர் பகுதியில், ஏழை வைதிகக் குடும்பத்தில் உதித்தவர். தந்தை ஜகந்நாத மிச்ரர், தாய் சசி தேவி, இவரே கடைசி பத்தாவது புதல்வர். 15ஆம் வயதில் வல்லபாசாரியர் என்பவரின்மகளான இலட்சுமி தேவியை மணந்தார். 17ஆம் வயதில் கேசவ மிச்ரர் என்னும் புலவரை வென்றார். பாம்புக் கடியால் முதல் மனைவி இறந்தார். பின்னர் விஷ்ணுப்பிரியை என்பவளை இரண்டாம் மனைவியாக மணந்தார். கயை என்னும் புனிதத் தலத்திற்குச்சென்று,ஈசுவரபுரிஎன்னும்வைணவ சந்நியாசியிடம் தீக்கை பெற்றார். தர்க்க வாதம் புரிதலைக் கைவிட்டார். சமயப் பிரசாரகர் ஆனார். கீர்த்தனை மண்டபம் ஒன்று கட்டி, பக்தி மார்க்கம் பற்றிப் போதிக்கத்.தொடங்கினார். கீர்த்தனங்களை இசையுடன் பாடும்போது, தம்மை மறந்த நிலையில் நடனமும் ஆடுவார். 24ஆம் வயதில், குட்வா என்னும் நகரில் துறவு நிலையை மேற்கொண்டார். பூரியில் வசித்தார். தென்னகத்திற்குத் தல யாத்திரை வந்து திரும்பும்போது, பண்டரிபுரம் சென்றார். துக்காராம் இவருடைய பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டார். தமது 48ஆம் வயதில் கோயிலில் பாடிக் கொண்டே மறைந்து விட்டார் என்பது வரலாறு.

கடவுளை ஞானத்தால் அறிய முடியாது. பக்தியினால்தான் அறிய முடியும். கடவுளின் அருள் மூலம் சான்றோர் அறிந்து கூறிய அருளுரைகளே வேதங்கள் ஆகும். வேதப்பொருளை விளக்குவனவே புராணங்கள். ஆதலின் வேதங்கள் புராணங்கள் ஆகிய இரண்டுமே ஆன்மிக வாழ்விற்குத் தேவையான பிரமாண நூல்களாகும். பக்தியே முக்தியடைவதற்குரிய நேரிய வழி. கிருஷ்ண பிரேமையே ஆன்ம லட்சியம். உண்மையான நல்ல வைஷ்ணவனின் தொடர்பினால், சத்சங்கம், பக்தி சிரத்தை முதலியன அடைந்து, பகவானுக்குச் சேவை செய்யும் இன்பமும், தோழமையும் அடையலாம். இந்நிலையே வீடுபேறு என்பது, இவருடைய கொள்கை. சைதன்யரின் மதம், அசிந்திய பேதாபேதம் எனப்படும்.

## வல்லபாசாரியர் (1440-1518) :

ஆந்திர நாட்டைச் சேர்ந்த தைத்ரீய மத வகுப்பில், தைலிங்கப் பிராம்மண குடும்பத்தில், மத்தியப் பிரதேசத்தில் ரெய்ப்பூர் என்னும் நகரத்திற்கு அருகில், கம்பாரணியம் என்னும் ஊரில் அவதரித்தார். காசிக்குச் சென்று கல்வி பயின்றார். பாரத நாடு முழுவதும் மூன்று முறை யாத்திரை புரிந்தார். விசய நகர அரசரின் பேரவையில் விருதுகள் பெற்றார். அலகாபாத்துக்கு அருகில் உள்ள ஆடெல் என்னும் கிராமத்திலேயே பெரிதும் வாழ்ந்தார். இவரது கொள்கை உத்திரப் பிரதேசம், இராசபுதனம், சவுராட்டிரம், கூர்ச்சரம் முதலிய மாநிலங்களிற் பெரிதும் பரவியுள்ளது.

இறைவன் 'ஏகம்' என இருக்கும் நிலையை விடுத்து, 'அனந்தம்' ஆக விரும்பினார். அதனால் அவர் விகாரப்படாமலே, பிரபஞ்சத்தைத் தம்மிடம் இருந்து தோற்றுவித்தார். தீயினின்று பொறிகள் உண்டாவது போல, கடவுளினின்று ஆன்மாக்கள் உண்டாயின. கடவுளின் 'சத்து' என்னும் கூற்றில் இருந்து உலகமும், 'சித்து' என்னும் கூற்றில் இருந்து ஆன்மாவும் தோன்றின. சித்து, ஆனந்தம் என்பன, பிரபஞ்சத்தில் மறைந்து கிடக்கின்றன. ஆன்மாவிடம் 'ஆனந்தம்' என்னும் இயல்பு மறைந்துள்ளது. பிரபஞ்சம் மாயையன்று ; உண்மையாகவே உலகம் உள்ளது. அது பிரமத்தின் பரிணாமமே யாகும். பிரமத்தினுடைய லீலா விநோதங்களின் விளைவே பிரபஞ்சம். அறியாமையினாலேயே உலக வாழ்வாகிய பந்தம் ஏற்படுகின்றது. ஆன்மாக்கள் நித்தியப் பொருள்கள், ஆனால் அணு பரிமாணம் உள்ளவை. வினைப் பயன்களே நமது உயர்வு தாழ்வு, இன்ப துன்பங்களுக்குக் காரணம். கடவுளின் அருள் பெற்றால், தெய்விக உடல் பெற்றுப் பிரமத்தின் இராச லீலையாகிய தெய்விக இன்பத்தைத் துய்க்கலாம். பிரமஞானம் பெற்றுப் பிரமத்தை வழிபடுவோர் புருஷோத்தமன் ஆக விளங்கும் இறைவன்பாற் கலந்து விடுவர். இதுவே முத்தி நிலையின் சிகரம். 'என்னால் ஆவதொன்று இல்லை. எல்லாம் அவன் செயலே' என்று தெளிந்து கடவுளிடம் அன்பு செலுத்துவது 'புஷ்டி பக்தி' எனப்படும்.

இராமானுசரும் மத்துவரும் கூறும் பக்திக்கு அறிவு அடிநிலை ; வல்லபாசாரியர் கூறும் பக்திக்கு உணர்ச்சி அடிநிலை. சங்கரின் கொள்கை, வேதாந்தம் அல்லது மாயாவாதம் என்று வழங்கப்பெறும். வல்லபாசாரியரின் கொள்கை, சுத்தாத்வைத வேதாந்தம் எனப்படும்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

—தொடரும்

# தொல்காப்பியச் சிறப்பு *

தொல்காப்பியம் என்னும் தொன்மைப் பெருநூலின்
ஒல்காப் பெருஞ்சிறப்பை உய்த்துணரின்,—அல்கா
தறிதோ றறியாமல் ஆழ்ந்தகன் றோங்கித்
தொடுவானம் போற்செல்லும் சூழ்ந்து. (1)

பழமை பெருமைநூற் பண்பனைத்தும் வாய்ந்து,
விழுமியர்கள் எல்லாம் வியப்ப,—முழுமணியாய்ச்
செந்தமிழ்க்கே ஓர்சிறந்த தெய்விகநூ லாய்விளங்கும்,
நந்தம்அருந் தொல்காப் பியம்! (2)

மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு!
ஒழிவில் இலக்கணமும் உண்டு!—வழிமுறையே
என்றாலும், தொல்காப் பியம்போல் இலக்கணநூல்
ஒன்றேனும், இவ்வுலகத் தில்! (3)

வழுத்துபெரு மாண்புடைய மற்றை மொழிகள்
எழுத்தொடு சொல்லின் இயல்பே,—முழுத்தும்
எடுத்துரைக்க மாட்டா திளைப்பப், பொருளும்
தொடுத்துரைக்கும் தொல்காப் பியம்! (4)

எழுத்தொடுநற் சொல்லியல் பெல்லாம், இனிதே
முழுத்தும் விளக்கி மொழிந்து,—விழுப்பமிகத்
தள்ளாப் பொருளியல்பும் சாற்றியதொல் காப்பியம்போல்,
எள்ளாச்சீர் நூல்,யாண்டும் இல். (5)

உயர்திணை அஃறிணை என்றிவ் வுலகை
மயர்வில் அறிவின் வளத்தால்,—செயிர்அற
நன்று பிரித்ததொடு, நல்ல அகம்புறம்
என்றும்இரு கூறுகண்டார் யார்? (6)

களவுநெறி கற்புநெறி கட்டுரைத்துள் ளத்தே
உளவாம்மெய்ப் பாடுவமை ஓர்வித்(து),—அளவையிலாச்
செய்யுளியல் நன்மரபும் தேற்றினர்,தொல் காப்பியனர்
வையமெங்கும் இல்லா வகை! (7)

முதலும் கருவும் உரியுமென மூன்று
வகையால் உலகை வகுத்துத்,—தகைமைமிகத்
தெய்வமுணு மாமரம் புள்பறையாழ் செய்திமக்கள்
மெய்யியல்யும் தேற்றினர்யார் வேறு? (8)

புலநெறி நல்வழக்காற், காதல் பொருந்தும்
தலைமக்கள் வாழுநெறி சாற்றி,—உலகியலில்
இன்பம் பொருள்அறன்கள் என்பவெலாம் எய்துமுறை
மன்பதைக்குச் சொல்லினர்யார் மற்று? (9)

---

* திருச்சிராப்பள்ளியில், தமிழகப் புலவர் குழுவின் சார்பில், "முத்தமிழ்க் காவலர்" திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் முயற்சியிலும், ஆதரவிலும் நடைபெற்ற "தொல்காப்பியர் விழா"வில், பேராசிரியர் டாக்டர் திரு. வ. சுப. மாணிக்கம், M.A., Ph.D., அவர்களின் தலைமையில் படித்து விளக்கப் பெற்ற கவிதை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. (23—10—1977) —ஆசிரியர்.

இறைஉயிர் அன்றி, உல கின்னியலும், நல்ல
துறவியலும், மற்றுமெலாம் சொல்லும்—முறையால்,
இலக்கணநூல் நுட்பம் இறைநூற்கோள் வாய்ப்பக்
கலக்கமறச் சொற்ருயர்யார்? காட்டு! (10)

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்'' என்னும்—குறள்மொழியால்,
வள்ளுவரும் தொல்காப் பியம்போற்றும் வாய்மையினைத்
தெள்ளிதிற் காணலாம் தேர்ந்து. (11)

''உயிரிற் சிறந்தன்று நாணே, அந் நாணிற்
செயிர்தீர்காட் சிக்கற்புச் சீர்த்தென்''—மயல்தீரும்
தொல்காப் பியநூற்பாச் சூழ்ந்து, மணிமொழியார்
நல்காத லிற்போற்றி ஞர் ! (12)

''வாழ்கநல் அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்கபுனல் வேந்தனும்மிக் கோங்கு''கெனும்—ஆழ்பொருட்பா,
ஞானசம் பந்தருமே, நன்றுதொல் காப்பியநூல்
ஊனமின்றிப் போற்றலுணர்த் தும்! (13)

தேக்கு பெரும்புலமைச் செம்மலாம் நம்அருமைச்
சேக்கிழார் பெம்மான், தம் தெய்வஅருள்—வாக்கினல்,
நன்றே அருந்தமிழ்நூல் என்று நனிபுகழ்ந்த
தொன்றே, இதன்திறம்சாற் றும்! (14)

பாணினியார் நூற்செறிவும், பண்பார் பதஞ்சலியார்
காணினிய திட்பக் கருத்தியலும்,—சேணினராம்
சீர்அரித்தாட் டில்சொற் றெளிவும், அளவையுஞ்சால்
பேரெழிற்றும் தொல்காப் பியம். (15)

முந்துபல ஆயிரமாம் ஆண்டுகட்கு முன்னரே,
செந்தமிழில் அன்றிச் சிறந்துமிகும்—இந்தவகை
நாகரிகத் தெய்வநல நல்லறிவு நூல்களொன்றுண்
டாக, நினைப்பவும்யார்க் காம்? (16)

—ஆசிரியர்.


## மதுரை அருள்மிகு
## மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

ஆலயக்கலே அரும்பொருளகம்

வரலாற்றுக்கு வழிகாட்டியாக நிற்கும், சிற்பங்கள், சித்திரங்கள், வண்ண ஓவியங்கள், கைவினைப் பொருட்கள் யாவும் கண்டு களிக்க, அன்பர்கள் வருகை தரவும்.

தீபாவளி, பொங்கல் நாட்கள் தவிர, ஆண்டு முழுவதும் காலே 6 மணியிலிருந்து மாலே 8 மணி வரை, இந்த ஆலயக்கலே அரும்பொருளகம் திறந்திருக்கும்.

நபர் 1-க்கு நுழைவுக் கட்டணம் — 50 பைசா

**ஆர். திருவேங்கடசுவாமி,**
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி,
அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

# அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்



## இராமேசுவரம்

## வருக! வருக!! இராமேசுவரத்திற்கு இனிதே வருக!!!

இராமாயணம் என்ற இதிகாசம் கண்ட இனிய தீவு இராமேசுவரம். வரலாற்றுச் சிறப்புடைய மிகப் பெரிய கோயிலைக் கொண்டது. இந்தியாவிலேயே பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்று இராமேசுவரம். இந்தியாவின் தேசிய ஒருமைப் பாட்டின் சின்னமாய் விளங்குவது இத்திருக்கோயில். மேலும் பழங்காலச் சிற்பக் கலையின் சீர்மைக்கு, உலகப் புகழ் வாய்ந்த மிகப் பெரிய மூன்றும் பிராகாரமும், அதன் சிற்பச் சிறப்பும் உள்ள இத்திருக்கோயில் ஒரு கருவூலம் ஆக விளங்குகின்றது.

பிரயாணிகள் தங்குவதற்கான நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகளைத் தேவஸ் தானம் அளித்து வருகிறது.

**சிறப்பு வழிபாட்டிற்கான கட்டண விவரங்கள் :—**

| | | |
|---|---|---|
| வெள்ளி ரத ஊர்வலம் .... .... .... | ரூ. | 500—00 |
| தங்கப் பல்லக்கு .... .... .... | ரூ. | 200—00 |
| தங்க ரிஷப வாகனத்தில் சுவாமி புறப்பாடு .... | ரூ. | 300—00 |
| சகஸ்ரகலச அபிஷேகம் .... .... .... | ரூ. | 1000—00 |
| ருத்ராபிஷேகம் .... .... .... | ரூ. | 125—00 |
| கங்காபிஷேகம் .... .... .... | ரூ. | 5—00 |
| கங்காபிஷேகம் (கங்கைநீர் உள்பட) .... | ரூ. | 7—00 |

யாத்ரீகர்கள், புனிதமான கோடித் தீர்த்தம், தெய்வத் திரு உருவப்படங்கள், பிரசாதங்கள் இவற்றைத் திருக்கோயில் விற்பனை நிலையங்களில் மட்டும், வாங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஸ்ரீ இராமநாத சுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும், தனித் தனியே ரூ. 10.00 செலுத்திச் சகஸ்ர நாம அர்ச்சனை செய்யலாம். பூஜை செய்து பிரசாதம் அஞ்சல் வழியில் அனுப்பப்பெறும்.


**நிரந்தரக் கட்டளைகள் :—**

ரூ. 1,500-00 செலுத்தினால், ஒவ்வொரு ஆண்டிலும், குறிப்பிட்ட தினத்தில் ருத்ராபிஷேகம் ஸ்ரீ ராமநாத சுவாமிக்குச் செய்து அருட்பிரசாதம் அனுப்பப்படும். அவ்வாறே ரூ. 100-00 செலுத்தினால் ஸ்ரீ ராமநாத சுவாமிக்குக் குறிப்பிட்ட தினத்தில் கங்காபிஷேகம் செய்து அருட் பிரசாதம் அனுப்பப்படும். ரூ. 500-00 செலுத்தினால் ஒரு கால பூஜை ஸ்ரீ இராமநாத சுவாமிக்கு நடத்திப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

கோயில் திருப்பணிக்கு நன்கொடை அளிக்கும் தொகைக்கு வருமான வரி விலக்கு உண்டு.

இனிய வழிபாடு செய்வதற்கும், நலமுறத் தங்குவதற்கும், ஸ்ரீ இராமநாத சுவாமி தேவஸ்தான நிர்வாக அலுவலரை அணுகுக.

தா. வேணுகோபால், B. A.,
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி.
அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்.



# கந்தபுராணக் காப்பியம்

"திருக்குறள்மணி"


திரு. க. த. திருநாவுக்கரசு, M.A

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,



R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.


களும்கண்ட
ராணங்களுக்கு
இருக்க இயலும்
தேவை இல்லை.
an Filliozat )
யம் எனப்படும்
ல் புராணமும்,
ற்றுள்ள சிவ
க் கந்தபுரா
தென்னாட்டி
யெற்றப்பட்ட
பல காரா

**கந்த புராணம் :**

தமிழ் இலக்கியத்துள் தவழும் முருகனின் புன்முறுவலைக் கண்டு, மேற்கு நாட்டு அறிஞர் வியந்து, முருகனைப் போற்றும் காலம் இது! அப்போற்றுதலுக்கு நிலைக்களனுக அமைவது முருகனின் வரலாற்றைக் கூறும் கந்தபுராணம் என்னும் காப்பியமாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில், சிறப்புமிக்கதொரு திருப்பு மையமாகக் கந்தபுராணம் விளங்குகின்றது.

**காலச் சூழலும், எண்ணப் போக்கும் :**

பெரிதும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகிய மலர்களைக்கொண்டு, தொடுக்கப்பட்டபாடலே, சங்க இலக்கியம். அக்காலக் கட்டத்தில், முப்பால் எனும் நீதி இலக்கியம், தனி மனித சிந்தனைத் திறத்தின் உரை கல்லாகவும், தமிழினச் சிந்தனை முதிர்ச்சியின் முடிமணியாகவும் சிறப்புறலாயிற்று. இவற்றை அடுத்து, கதை பொதி பாட்டான பொருள் தொடர் நிலைச் செய்யுள்கள் தோன்றின. அக்காலத்தை ஒட்டியே ஒழுக்கநெறியை வரையறுத்துக் கூறும் நீதி நூல்களும் இயற்றப்பட்டன. பக்தி வெள்ளம் கரை புரண்டு ஓடத் தொடங்கிய நிலையில், ஆழ்வார்களும் நாயன்மார்களும் "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும்" அருட்பாடல்களைப் படைத்து, இறைவனைப் போற்றி வழிபட்டனர். இதை அடுத்து ஒரு புறம், பொருள் தொடர்நிலைச் செய்யுள்கள் விருத்தப்பாவின் மலர்ந்த காப்பியங்களாகப் பெரு வாழ்வு பெறலாயின. மற்றொரு புறம், சிந்தைக்கினிய சிற்றிலக்கியங்களான அந்தாதி, உலா, கலம்பகம், தூது, பிள்ளைத் தமிழ், கோவை, பரணி போன்றவை பல்கிப் பெருகின.

காப்பிய மரபு முதிர்ந்து, அதிலிருந்து புத்தம் புதிய துறைகள் தோன்றத் தொடங்கின. அயல் நெறிகளின் தாக்கமும், பேரரசு எழுச்சியுற்றதனுல் உண்டான புதியதொரு புத்துணர்ச்சியும், சமய மலர்ச்சியும், தத்துவ ஆராய்ச்சியினுல் தமிழரின் சிந்தனைத் திறத்தை வெளிப்படுத்திய சித்தாந்த சாத்திரங்களும், தமிழ் இலக்கியத்தின் நோக்கையும், போக்கையும் பெரிதும் மாற்றமுறச் செய்தன. நாடெங்கும் ஆகம நெறிப்பட்ட திருக்கோயில்கள், மனித வாழ்க்கையின் சிறப்பு மிகு குறிக்கோளினை நினைவூட்டும் வகையில் வானுற ஓங்கி உயர்ந்து நின்றன.

மாபெரும் வேந்தர்கள் எடுப் பே சிவன் கோயில்களில் எல்லாம் சக்திக்கும், 'குன்றின் நெஞ்சுபக எறிந்த அம்சுடர் நெடுவேற் சேவலங்கொடியேனுக்கு'ம் தனியே 'குமரகோட்டமும்' சிறப்புடன் அமைக்கப்பட்டன. ஆழ்வார்களின் அருளிச் செயல்களோடு தத்துவத் திரையங்களும் தனிச் சிறப்புப் பெற்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்ட பாஞ்சராத்திர ஆகம வழிபாட்டு நெறி தமிழகத்தில் திருக்கோயில்களில் சிறப்புறலாயின. நாயன்மார்களின் திருமுறைகளையும் சமயாசாரியர்களின் சித்தாந்த சாத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டும், சைவ ஆகமங்கள், கௌமார (குமார) தாந்திரிகம், சக்தி தாந்திரிக நூல்கள் போன்றவற்றைத் துணையாகக் கொண்டும் சிவ வழிபாட்டு நெறி தழைத்தோங்கியது.

யோக நெறியோடு இணைந்த முருக வழிபாடும், சக்தி வழிபாடும் தனித்த நெறிகளாக விரைவான வளர்ச்சியைப் பெற்றன. இந்நிலையில், இறை (சி)வனே முழு முதற் கடவுள்: அவனுடைய பேரறிவும் பேராற்றலுமே முருகப் பெருமானுக வெளிப்பட்டன எனும் கருத்தை வலியுறுத்த வேண்டிய நிலை, இந்நாட்டுச் சைவ சமயத்தவரிடையே உண்டாயிற்று. இவ்வரும் பணியை, இலக்கியவுலகில் செம்மையாகச் செய்தவர் கச்சியப்ப சிவாசாரியாராவார்.

இலக்கியம் என்பது காலந்தோறும் மாறி வரும் மக்கள் உணர்ச்சிகளையும், பயன் மதிப்புகளையும் படம்பிடித்துக் காட்டுவதாகும். வேறுபட்ட சமூகங்களில் உண்டாகும் மாற்றங்களின் இயல்புகளைச் சுட்டுவது இலக்கியம். மற்றும், தனிமனிதர், எவ்வாறு சமுதாய மாற்றத்திற்கேற்பவும், புதிய அனுபவங்களுக்குத் தக்கவாறும் தங்கள் உணர்வுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகின்றனர் என்பதையும் இலக்கியம் புலப்படுத்தத் தவறுவதில்லை. அது, மனிதனுடைய ஆவல்களையும், நம்பிக்கைகளையும் விண்ழவார்ந்த குறிக்கோள்களையும் எதிரொளிப்பதால், இவ்வரும் பணியைத் தவருமல் செய்து வருகிறது. ஆகவே, சமூக சக்திகளின் தாக்கத்தால், மனிதன் எவ்வாறு செயல்படுகிறுன் என்பதைக் கணித்துக் கூறும் ஆற்றல்மிகு சமுதாய 'பாராமீட்டர்' (Sociological Barometers) என இலக்கியத்தைக் கூறுவது பொருத்தமுடையதாகும்.

எனும் கருத்து, மேற்கண்ட எண்ணப்போக்கிற்கு, அரண் செய்வதாக அமைகிறது.

**கால நினைவுப் பதிவேடு :**

இ ... பழம் பெரும் நாகரிக நாடுகளி ...ழமைப் பற்று நெடுங்காலமாக ...றது. இந்தப் பழம் பெரும் ...ளில், சீனா ஒன்றுதான் மண்ணகத் ...துப் பகுதியில் இருப்பது. மற் ... நிலவுலகில் தன் பகுதியிலேயே ... நாடுகளிலும் வடக்குப் பகுதி ... தெற்குப் பகுதி மக்களே பெரி ...ப பற்றாளர்களாக இருந்து வருவ ...கின்றோம். மிகமிகப் பழமையான ...ங் காலத்திலேயே தென்பகுதி மக... ...ன்றியவர்களாதலின், அங்ஙனம் பழமை... ...றாளர்களாக இருந்து வருகின்றனர் போலும்!

நிலவுலகின் தென் மண்டலப் பகுதிகளிலேயே ஆதி மனிதர்கள் தோன்றினார்கள். இதனால், தங்கள் தொன்மைச் சிறப்பை மறவாமல் அவர்கள் நினைவு கூர்ந்து வருகின்றனர் எனும் விளக்கம் தரப்படுகிறது. இந்தத் தொல் பழங்கால நினைவுப் பதிவேடுகளாக விளங்குவது 'தொன்மை' ( Myths ) எனப்படும் பழங் கதைக் கூறுகளாகும். 'தொன்மைகள்' பலவற்றின் அமைப்பையும் இயல்பையும் விரித்துரைப்பது 'தொன்மையம்' ( Mythology ) ஆகும். இப்பழங் கதைக் கூறுகளுக்கு நயமிகு கலைவடிவம் கொடுப்பதே புராணங்கள் (Legends) ஆகும். 'புராணம்' என்னும் வட மொழிச் சொல்லிற்குப் 'பழமை, பழங்கதை, வியாசரால் சொல்லப்பட்ட புனித நூல்கள்'! எனும் பொருள்கள் தமிழில் வழங்கி வருகின்றன. பெரிதும், இப்பொருளிலேயே வட மொழிவாணரும் இச்சொல்லை வழங்கிவருகின்றனர்! இக்காலத்திய ஆய்வாளர், 'பழைய மரபினை, பழைய வரலாற்றினைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்திக் கதைகள்வாயிலாகத் தெரிவிப்பது புராணம்' என்று விளக்கம் தந்துள்ளனர்? இவ்விளக்கத்தினைக் கருத்தில் கொண்டு, நாம் கந்த புராணத்தைப் பார்ப்போம்.

புராணங்களில் 'தொன்மை' மூன்று வகையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வாய்மொழி வாயிலாகத் தொல் பழங்கால நிகழ்ச்சிகளைப் புனைந்துரைத்துப் போற்றி வருவதை நம்புவோர் அல்லது அதையறிய விரும்புவோர் ஒன்றாகக் கூடி, எழுத்தில் வடிக்கும் இலக்கியம் ஒரு வகை. பழைய மூலத் தொன்மையைப், பிற்காலப் புலவர் ஒருவர், காப்பிய நலங்கனிய விரித்துரைப்பது, இரண்டாவது வகையாகும். கதைக் கருவை மட்டும் எடுத்துக் கொண்டு, அதைக் கலையழகுமிக்க (மெய்ம்மையைப்பற்றிக் கவலையுறாமல்) புதுமைப் படைப்பாகப் படைப்பது மூன்றாம் வகையைச் சேர்ந்ததாகும். இம் மூவகைத் தொன்மைப் பயன்பாட்டு இலக்கியங்களுள் கந்தபுராணம் இரண்டாம் வகையைச் சேர்ந்ததாகும்.

**தமிழில் புராண நூல்களின் தோற்றம் :**

இன்றைக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களில், கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய புராணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. மணிவாசகருடைய திருவாசகத்துள் முதலிடம் பெற்றுள்ள 'வாழ்த்துத் திருவகவலைச் 'சிவபுராணம்' எனச் சுட்டுவது மரபாக இருந்து வருகிறது. 'சிவ புராணம்' என்பதற்குச் 'சிவனது அநாதி முறைமையான பழமை—சிவனது அருவ நிலைமை கூறுதல்'? என்று நம் பெரியோர்கள் விளக்கம் கூறியுள்ளனர். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில், சேக்கிழாரால் இயற்றப்பட்ட சைவ நாயன்மார்களின் வரலாறு, 'திருத் தொண்டர் புராணம்' என வழங்கப்பெறுகிறது. இப் பெயரில் உள்ளம் 'புராணம்' எனும் சொல், பழைய கதையைக் கட்டும் அளவோடு அமைந்துவிடுகிறது. வடமொழிவாணர் கூறும் புராணத்திற்குரிய ஐந்திலக்கணங்கள் பெரிய புராணத்திற்குப் பொருந்தவில்லை. எனவே, திருத்தொண்டர் புராணத்தையும் ஒருவகைத் தமிழ்க் காப்பியமாகவே அறிஞர் போற்றுவர்.

இதையடுத்துப் பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடிய பழைய திருவிளையாடல் புராணம் தோன்றியது. இது சிவபெருமான் தமிழ்நாட்டில் செய்ததாக நம்பப்படும் திருவிளையாடல்களைக் கூறுகிறது.

இவற்றிற்குப் பின்னர் 'புராணம்' எனும் பெயரால், சிறப்புற்று விளங்குவன கந்த புராணம், கோயிற் புராணம், ஆதிபுராணம், மேருமந்தர புராணம் என்பன. இவை யாவும் ஏறக்குறைய ஒரே நூற்றாண்டில்—பதினான்காம் நூற்றாண்டில் முன்பின் தோன்றியனவாகும்.

**புராணங்களின் இலக்கணம் :**

புராணங்களின் இலக்கணத்தைத் தமிழ் நிகண்டுகளோ, பாட்டியல் நூல்களோ கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் கூறவில்லை. இதனால், வடமொழிவாணர் கூறும் இலக்கணத்தையே, நாம் நாட வேண்டியவர்களாக உள்ளோம். அண்டத்தின் தோற்றம் (சருக்கம்), அதன் அழிவும் புதுப்பித்தலும் (பிரதி சருக்கம்), தெய்வ மரபும், முனிவர் குலமும் (வமிசம்), மனுக்களின் ஆட்சி (மன்வந்தரம்), சூரிய, சந்திர அரச குலங்களின் தோற்றம் (வமிசானு சரிதம்) எனும் ' ஐந்தையும் புராணங்கள் விளக்கிக் கூற வேண்டும் என்பர்? இவ்விலக்கணத்திற்கு வடமொழியில் உள்ள பதினெண் புராணங்களில் ஒன்றுகூட முற்றிலும் பொருந்தி வரவில்லை என்பது ஆராய்ச்சியாளர்களின் துணிவாகும்.

**புராணங்களின் கரு முதல் :**

இவ்வாறு கூறுகின்றபொழுது, 'இந்தியப் புராணங்கள் அனைத்தும் முதன்முதல் வட மொழியில்தான் இயற்றப்பட்டனவா?' எனும் ஐயம் எழுவது இயற்கை. வடமொழி இலக்கிய வல்லுநர்கள், 'வேத மொழியில் (Vedic Language) புராணங்கள் இல்லை' என்பதைக் கருத்து வேறுபாடின்றி ஒப்புக்கொள்ளுகின்றனர். சிந்து முதல் கங்கை வரையில் ஆரியப் பண்பாடு பரவிய பின்னர், அங்கு வாழ்ந்த

பழங்குடி மக்களின் பழக்க வழக்கங்களும், வழிபாட்டு நெறிமுறைகளும் அதில் ஊடுருவலாயிற்று. அதனுல், இந்தியப் 'பண்பாட்டுக் கொப்பரை'யில், திராவிட, ஆரிய நாகரிகக் கூறுகளும் இயல்புகளும், சமண பௌத்த சமயப் பண்புகளும் முட்டியும் மோதியும், கலந்தும் குழைந்தும், இணைந்தும் புதிய வடிவம் பெறத் தொடங்கின. அக்காலத்தில்தான், வேதகால சமய நெறியிலிருந்து வேறுபட்ட, புதுமை இயல்புகள் கொண்ட, இன்றைய 'வைதிக சமயம்' தோன்றியது. இதனை, இக்காலத்தில், வேறு தக்க கலைச்சொல் கிடைக்காமையால், இந்து சமயம் எனச் சுட்டி வருகிறோம். அக்காலத்தை, இந்திய வரலாற்றில் குப்தர்களின் 'பொற்காலம்' எனப் போற்றுவர். கி.பி. நான்காம் நூற்றுண்டிற்கும் கி.பி. ஆறும் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலமே குப்தர்களின் ஆட்சிக் காலமாகும். இந்த முந்நூறு ஆண்டுக் காலத்தில்தான் வடமொழியில் புராணங்கள் பல எழுந்தன.

ஆனுல், அவற்றின் கருமுதல்கள், அன்று, இந்தியாவில் வழங்கிய பிராகிருத மொழிகளில் பரவலாக வழங்கி வந்தன. சாதவாகனர் ஆட்சிக் காலத்தில், இத்தகைய புராணங்கள் பல வழக்கில் இருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் சில கிடைத்துள்ளன. அப்பிராகிருத மொழிப் பழங்கதைகளைத் திரட்டி, அவற்றோடு தங்கள் கற்பனை வண்ணத்தையும் குழைத்து, புதியதாக எழுச்சியுற்று வரும் சம்ஸ்கிருத மொழியில் கவர்ச்சி மிகு நூல்களாக, வடமொழிவாணர்கள் புராணங்களைப் படைத்துள்ளனர் என்பது, மேற்கு நாட்டு அறிஞர்களும், நம் நாட்டு ஆராய்ச்சியாளர்களும்கண்ட முடிவாகும்.

எனவே, தமிழில் உள்ள புராணங்களுக்கு மூலம் எவ்வாறு வடமொழியில் இருக்க இயலும் என ஐயுறவோ—வியப்புறவோ தேவை இல்லை. டாக்டர் பிலியோசா ( Jean Filliozat ) அவர்கள், ஹாலாசிய மகாத்மியம் எனப்படும் வடமொழித் திருவிளையாடல் புராணமும், சங்கர சங்கிதையில் இடம் பெற்றுள்ள சிவ ரகசிய காண்டம் எனும் வடமொழிக் கந்தபுராணமும் தென்னுட்டு மக்களால், இத்தென்னுட்டிலேயே, சம்ஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டு இருத்தல் வேண்டும் என்பதற்குப் பல காரணங்களைக் காட்டியுள்ளார். இதைப் போன்றே வட மொழிப் பாகவத புராணமும் காவிரிக் கரையில் தோன்றி, கங்கைக் கரையில் வளர்ந்து சிறந்தது என்பர்'

வட மொழியில் உள்ள சிறப்பு மிகு புராணங்கள் பதினெட்டாகும். அவைகள் யாவும், காலந்தோறும் விரிந்தும், வளர்ந்தும் வந்துள்ளதாகக் கூறுவர். இவ்வாறு கந்தபுராணமும் வளர்ந்து வந்துள்ளதைக் காணுகின்றோம். இதன் இறுதியில் உள்ள உபதேச காண்டம், பத்தாம் நூற்றுண்டை யொட்டியே இன்றைய வடிவத்தைப் பெற்றது எனவும், இதற்கு முற்பட்ட ஆறு காண்டங்களும் ஏழாம் நூற்றுண்டிற்கும் ஒன்பதாம் நூற்றுண்டிற்கும் இடையே உருவாக்கப்பட்டவை எனவும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

தொடரும்

# அன்பர்கள் கவனிக்க

நமது ''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தா ஆண்டு, ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலமாகக் கணக்கிடப் பெறுகின்றது. ஆதலின், திருக்கோயில் இதழின் புதிய சந்தாதாரராகச் சேர்ந்து, *1978* ஜனவரி மாதம் முதல் *1978* டிசம்பர் மாதம் வரைக்குரிய 12 இதழ்களையும் தவருமல் முறையே பெற விரும்புபவர்கள், *1977* டிசம்பர் மாத இறுதிக்குள், முன்னதாகவே சந்தாத் தொகையை விரைந்து அனுப்பி, தங்கள் பெயரைச் சந்தாப் பட்டியலில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர். இடையில் சேர்ந்தால் முன்னைய மாத இதழ்கள் பல, பெற முடியாமல் போய்விடும்.

**ஆதலின், 1978-ஆம் ஆண்டுக்குரிய சந்தாத் தொகையை, 1977-ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதிக்குள் அனுப்பி வைத்து, சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளும்படி, அன்பர்கள் வேண்டிக் கொள்ளப்பெறுகின்றனர்.**

### 1978—ஆம் ஆண்டு முதல் சந்தா விபரம்

உள்நாடு — ரூ. **15–00**

வெளிநாடு — ரூ. **25–00**

சந்தாத் தொகை அனுப்புபவர்கள் ''திருக்கோயில் இதழின் (பழைய, புதிய சந்தா எண்) சந்தாத்தொகை'' என்று மறவாமல் குறிப்பிட்டு,

''உயர்திரு ஆணையர் அவர்கள்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034''

என்னும் முகவரிக்குப் பணவிடை (M. O.) மூலம் அனுப்புதல் வேண்டும். பணவிடைத் தாளின்கீழ், தமது (1) முழுப்பெயர், (2) வீட்டின் எண் (3) தெருவின்பெயர், (4) ஊர் அல்லது நகரத்தின் பெயர், (5) வட்டம், மற்றும் (6) மாவட்டத்தின் பெயர் (7) அஞ்சலக எண் ( Pincode ) ஆகிய முழு விபரங்களையும் தெளிவாகக் குறித்து அனுப்புதல் வேண்டும். அப்போதுதான் இதழ்கள் தவருமல் மாதாமாதம் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

—**ஆசிரியர்.**

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

## திருத்தணி

செங்கற்பட்டு மாவட்டம் : : தமிழ்நாடு

தணிகையம்பதி, முருகப்பெருமானுக்கு உகந்த மிகப் பழமையான திருத்தலம். முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆறுபடை வீடுகளில் இத்தலம் ஐந்தாவது படைவீடெனப் போற்றப்படுகிறது.

இத்தலத்தில் யாத்ரீகர்கள் தங்குவதற்கு, இத்திருக்கோயிலில் நவீன வசதிகளுடன் பொருந்திய குடில்கள், அறைகள் கட்டப்பட்டுள்ளன. மலைக்கு ஊர்திகள் சென்றுவர மலைப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் காலை 6—00 மணி முதல் இரவு 9—00 மணி வரையில் திறந்து இருக்கும்.

**உபய கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | தங்கத்தேர் உற்சவம் .... | ரூ. 303—00 |
| 2. | கல்யாண உற்சவம் .... | ரூ. 250—00 |
| 3. | வெள்ளிமயில் வாகன உற்சவம்.... | ரூ. 250—00 |
| 4. | கேடய உற்சவம் .... .... | ரூ. 101—00 |

பக்தர்களின் சௌகரியத்தை முன்னிட்டு, இத்திருக்கோயிலின் தகவல் தொடர்பு நிலையம் ஒன்று மதுரையிலும், ஒன்று திருப்பதியிலும் இயங்கி வருகின்றது.

பக்தர்கள் அனைவரும் வருகை தந்து, இயன்ற காணிக்கைகளைச் செலுத்தி முருகப்பெருமானின் திருவருள் பெற வேண்டுகின்றோம்.

**எஸ். சோமசுந்தரம்**, பி.ஏ., பி.எல்.

உதவி ஆணையாளர்/நிர்வாக அதிகாரி.

# அருட்பெருஞ்சோதி அகவல்


*'திருக்குறள்பீடம்'*

தவத்திரு குருகுலம் அழகரடிகள், மதுராந்தகம்.



R. RAJU,
Dy. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept


**அகவல் முழக்கம் :**

'சோதி' என்பது ஒளியைக் குறிக்கும் ; பார்வைக்குத் தெரியும் ஒளிப்பிழம்பையோ அல்லது மனத்திற் கருதும் ஒளியையோ இச் சொல் உணர்த்தாது.

பார்வை, புலன்களில் ஒன்று ; மனம், அகக் கருவிகளில் ஒன்று ; புற அகக் கருவிகள் கடந்த அருள் விளக்கத்தை வள்ளலார் குறிக்கின்ருர். கற்பனை கடந்த சோதி என்ருர் சேக்கிழாரும்!

அகவலில் வருகின்ற 'சோதி' பக்குவமிக்க உயிர்களின் உணர்வில், 'தெளிவு' எனத் திகழும். இது ஐயந் திரிபுகளற்ற மெய்யுணர்வு! திருச்சிற்றம்பலப் பேரொளி! இது, சிறப்பு நிலை! அறிவற்ற பொருள்களிடத்தில் தோன்றும் ஒளிகளெல்லாம் பொது நிலைகள்! இவை, உணர்வு மிக்க இறையொளியின் நேர் ஒளி அல்ல; இறைவன் மறைவில் இருந்துகொண்டு, மேன்மேலும் விளக்கி வரும் பண்டங்களின் ஒளிகள்! 'பொது நடம்' என்று சேக்கிழார் பெருமான் இதனைத் தெரிவிப்பார். உயிர்களிடத்துத் தோன்றும் உணர்வுத் தெளிவைப் 'பொற்புறு நடம்' என்று அவர் போற்றுவார்.

முறையே இவையிரண்டும் 'பேரம்பலம்' 'சிற்றம்பலம்' எனப்படும். பேரம்பலம், பருமனை பொருளம்பலம்; சிற்றம்பலம், நுட்பமான உணர்வு அம்பலம்; 'பொற்சபை', 'சிற்சபை' என்றும் இவை சொல்லப்படும். சிறப்பு இறையொளி, ஏனைய எல்லா ஒளிகளுக்கும் பெரிய ஒளியாதலில், 'பெரும்சோதி' எனவும், கருணை மிக்கதாதலின், 'அருட்சோதி' எனவும் வந்தது!

பொது நடமேயாயினும், சிறப்பு நடமேயாயினும், எல்லாம் கடந்த முழுமுதற் சோதியின் திருநடனமே யாதலாலும், உயிர்களை நல்வழிப்படுத்தும் உறுதிப் பொருள்களான 'அறம்' 'பொருள்', 'இன்பம்', 'வீடு' என்னும் நான்மறை உண்மைகளை விளங்கச் செய்யும் இறையியக்கமாதலாலும், வள்ளலார் 'அருட்பெருஞ்சோதி' முழக்கத்தை அகவல் முதலில் நான்கு முறை முழக்கினுர். இம்முழக்கத்தை வள்ளற் பெருமான், புதிய தொடராக அருளிச் செய்து வழக்கப்படுத்தினமை, அருள் துறையில் அவர் செய்த ஒரு தெளிவுப் புரட்சியைக்காட்டுகிறது!

**முதலும் முடிவும் :**

'சோதி யகவ'லின் முதலில், உயிரெழுத்துக்களை முதலெழுத்துக்களாகத் தொடங்கும் பன்னிரண்டு அடிகள் வருகின்றன ; இரண்டு இரண்டு வரிகள் ஒரு தொடராக இங்கேகாணப்படுகின்றன. அகவல் முழுதும் பெரும்பாலும் இம்முறைமையே காணலாம். அரிதாகச் சில இடங்களில் பல வரிகள் ஒரு தொடராகவும் அமைந்துள்ளன ; இந்நலம் தோன்ற அவற்றை அங்கங்கும் இடம் விட்டு அச்சிடுதலும், நீண்ட அகவலாதலின், உள் தலைப்புக்களிட்டுப் பதிப்பிடுதலும் தெளிவுக்கு உதவியாயிருக்கும்.

'அருட்சிவ நெறிசார்' என்னும் முதலடி அகரத்தில் தொடங்குகிறது. சோதியகவலின் முதலடியாக அதனையே கருதலாம் ; கருதி, அதற்கே முதல் எண் கொடுக்கலாம். 'அருட் பெருஞ்சோதி', 'அருட் பெருஞ்சோதி' என்பது, அகவலின் முதலிலும் கடைசியிலும் வருகின்ற தனி முழக்கங்கள்! அகவலின் கடைசி அடி, 'போற்றி நின் பேரருள்' 'போற்றி நின் பெருஞ்சீர்', 'ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் சோதி' என்பதாகவே முடிகின்றது. இத் தொடரே முடிக்குந் தொடர் என்பது, வள்ளலார் இதனையே நான்கு முறை கடைசியாகக் கூறியிருப்பது கொண்டும் துணிதல் கூடும்.

**உயிரெழுத்து வரிசை :**

மேலும், வள்ளலார், உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் முதலில் வரிசைப்படுத்தியிருப்பது கொண்டு, அகவலை அவர் முதன்மையாகக் கருதினுரென்பதும், உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் உயிர்களின் சன்மார்க்க வளர்ச்சிக்கு ஏற்றவையாயிருத்தலின் அதனை மேற்கொண்டார் என்பதும் கண்டுகொள்ளப்படும். தமிழெழுத்துக்கள் உயிரெழுத்தும்உடம்பெழுத்துமாய் நெடுங்கணக்கில் வருகின்றன ; நூல்களில் அவை முதன்மை கொள்ளுதல், தமிழ் மறையாகிய திருக்குறள்,'அ' கரத்தில்தொடங்கி 'ன' கரத்தில் முடிவது கொண்டு தெளியலாம். தமிழ் எழுத்துக்கள் உயிர்களின் வளர்ச்சிக்காகவே அமைந்தவை.

'அ'—அவன்; அப்பொருள் என்னுங் கடவுளின் உண்மை உணர்த்துகிறது ; 'ஆ' —ஆவல் ; ஆவலை உண்டாக்கும் மனத்தின் இருப்பை அறிவிக்கின்றது ; 'இ'—இவன் ;

இப்பொருள் என்னும்படி உயிர்கள்உண்டெனத் தெரிவிக்கின்றது ; இம்மூன்று எழுத்துக்களும் முப்பொருளின் உண்மை தேற்றுவன.

'ஈ'—இழிவு; உயிர்களின் சிறுமையியல்பைக் குறிக்கின்றது ; 'உ'—உப்பக்கம் ; எதிர்த்துக்கொண்டு நிற்பது ; எதிர்த்து வரும் மலங்களின் இயல்புகளை எடுத்துக் காட்டுகிறது; 'ஊ'—ஊக்கம் ; உயர்வுக்குரிய இறையின் இயல்புகளை நிறுவுகிறது. இம் மூன்று எழுத்துக்களும் முப்பொருள் இலக்கணம் உணர்த்துவன.

'எ'—எழுச்சி ; தளைகளைத் தகர்க்கும் எழுச்சியில் உயிர்கள் பக்குவங் கொள்ளுதலை நினைவூட்டுகிறது ; 'ஏ'—ஏவல் ; ஏவியபடி ஒழுகும் பக்குவத்தாற் குருவருள் கூடுதலைத் தெளிவிக்கிறது ; 'ஐ'—ஐயா ; ஐயந் திரிபுகள் நீங்கிய தெளிவில் ஐயனுய் உயர்தலை விளக்குகிறது ; இம் மூன்றும், பயிற்சி நிலைகளைக் காட்டுவன.

'ஒ' —ஒருமை ; ஒருமையுடன் இறையருளில் இரண்டற ஒன்றுதலால் மலநீக்கம் பெறுதலையும்; 'ஓ'—ஓய்வு ; பிறவி ஓய்ந்து சிவப்பேறு பெற்றுச் சிவத்தின் ஆதரவில் ஒளி பெற்றிருத்தலையும், 'ஔ'—அவ்வை ; எல்லா உயிர்களிடத்தும் தாய் போல் இரக்கங்கொண்டு சிவநுகர்விலும் சேவையிலும் அழுந்தி அணைந்திருத்தலையும் புலப்படுத்துவன ; இம்மூன்றும் பயன் தெருட்டுகின்றன.

எழுத்துக்களில் உயிரெழுத்துக்களே இயக்கத்துக்குரியவை ; வளர்ந்து பயின்று பயன் காண்பவை ; அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தின் வளர்ச்சியைக் காட்டுவன ; அவற்றின் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ நீட்டங்கள் ; ஐ, ஔ என்னும் இரு வகை நெடில்கள், வளர்ந்து முன்னேறிய பக்குவ உயிர்களைக் குறிப்பவையாதலின், தனியாக நின்றன. அவற்றில் ஐ முன்னேறியபக்குவ உயிரையும், ஔ சிவத்தோடு அணைந்து சேவையில் திகழும் வீட்டின்ப உயிரையும் உணர்த்தும்.

இவ்வாறு, அ, ஆ, இ—முப்பொருள் உண்மையும், ஈ, உ, ஊ—முப்பொருள் இலக்கணமும், எ, ஏ, ஐ—முப்பொருள்களில் உயிர்களின் பயிற்சி முறைமையும், ஒ, ஓ, ஔ—பயன் வகையும் தெரிவித்தல் காணலாம்.

'இ'—உயிரின் உண்மையைக் குறித்து வருகின்றது; 'ஈ' அதன் வளர்ச்சியே யாதலின் மேன்மேலும் உயிரைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வகையில் உயிரின்இலக்கணங்கள் அறிதலைக் குறிப்பதாயிற்று.

ஊ—பதி இலக்கணம் குறிப்பது ; பதி, இயல்பாகவே பெரிய நிலையில் உள்ள தாதலால், அதைக் குறிக்க நெட்டெழுத்தே வந்தது.

பதிக்கு வேறு வளர்ச்சி என்பது இல்லாமையால், அடுத்து எழுத்து வேறு கருத்துக்குரியதாய்க் குற்றெழுத்தாக வந்தது ; அது உயிரின் பக்குவ எழுச்சியைக் கூறத் தொடங்கியது.

'ஐ' எழுச்சியுற்றுக் குருவருள் கூடி ஐயந் திரிபுகளற்றுத் தக்க வளர்ச்சியை அடைந்து விட்ட தெளிந்த உயிர் ; அதனுல் 'ஔ'வுடன் நில்லாமல் இடையில் இங்கு அமைந்தது.

உயிர் வளர்ச்சி 'ஐ' வரையில் வந்தமையின், அடுத்துப் பயன்வகை குறிக்கும் எழுத்துக்கள் தொடங்கின.

'ஔ' அணைந்தோரியல்பு உணர்த்தலின் கடைசியில் நின்றது.

'சிவஞானபோதம்' தன் பன்னிரண்டுநூற் பாக்களில் இங்ஙனம் உயிரின் வளர்ச்சியை எடுத்துக் காட்டும்; திருமுறைகள் பன்னிரண்டாய் அமைந்ததும் இக்கருத்துக்குரியன.

**திருமுறைகள் :**

திருஞானசம்பந்தர் வாக்குகள் முதல் மூன்று திருமுறைகள் எனப்படும்; அவர் 'சிவம்' என்னும் முழுமுதற் கடவுளின் நெறியை நிறுவ எழுந்தவர் ; கடவுளுண்மையைத் தலந்தோறும் நிறுவிப் பரவச் செய்தார். அந்நிலையில், மலத் தடை தவிர்த்தற்கு முதல்வன் துணை இன்றியமையாததென்று அங்கங்கும் தெரிவித்து வந்தார். அதனுல் மலங்களின் உண்மை தெரிந்தது; மலங்களால் நேரும் பிறவித் துயர் நீங்கினுல் உயிர்கள் பேரின்பப் பேறு அடைய வாய்ப்பாயிருக்கும் என்று, விளக்க வேண்டிய கட்டாயம் எழுந்து, உயிர்களின் உண்மையும் தெரிந்தது. இங்ஙனம் திருஞானசம்பந்தரின் திருமுறை வாக்குகளால் முப்பொருளுண்மைகளும் சிறப்புறுகின்றன. மற்றத் திருமுறை வாக்குகளும் இக்கருத்துடையவேயாயினும், திருஞானசம்பந்தரைப் போல், அப்பர் முதலியோர் சிவநெறி நிறுவ வேண்டும் என்னும் நோக்கத்தில் தோன்றினவரல்லர்.

அப்பர் பெருமான் அருளிய தேவாரங்கள், அடுத்த மூன்று திருமுறைகளாகத் திகழ்கின்றன. அவர் சமண சமயம் புகுந்து சாத்திர ஆராய்ச்சிகள் மேற்கொண்டமையால், சமண சமய இலக்கணங்களையும், சைவ சமய இலக்கணங்களையும் நன்ருக அலசிப் பார்க்கும் வாய்ப்பு, மீண்டும் சைவ சமயம் புகுந்தபோது அவருக்கு ஏற்பட்டது. சைவ சமயத்திற் கூறப்படும் உயிர், தளை, இறை என்னும் மூன்று பொருள்களையும் இலக்கண வகையால் நிறுவிப் பாடும் நிலைமை, அதனுல் அவர் தேவாரங்களில் இயல்பாகவே சிறப்பாய் அமைந்துவிடுகின்றன.

அடுத்த மூன்று திருமுறைகளில் ஏழாவது திருமுறை நம்பியாரூரருடையது. அருளில் இயையும் பயிற்சி முறைக்கேற்பப், பயில் யோகத் தகுதியுடையவர் அவர்! வாழ்க்கை நெடுக அருளிற் பயின்று வந்தார் ; அப்படி ஆளாகுந் தகுதி, அவர் வாழ்விலும் அவர் பாடலிலும் எழுந்து, கிளர்ச்சியுடன் ஆடியும் ஊடியும் நிகழ்ந்தது. இது 'சிவஞான போதம்' ஏழாம் நூற்பாவிற் குறிப்பதற்கேற்றபடி,அருள் பெரும் அதிகாரியின் தன்மையாய் அமைந்து விட்டது.

'திருவாசகம்', 'திருக்கோவையார்' எட்டாந்திருமுறை ; திருப்பெருந் துறையில் குருவாய் எழுந்தருளிய இறைவனை மணிவாசகப் பெருமான் எதிர்ப்பட்டுக் குருவருள் பெற்றார். சிவஞான போதத்தின் எட்டாம் நூற்பாவும் குருவருள் ஈடுபாடு குறித்தது; குருவருள் பெற்ற பின் அருள்மேற் பெருங்காதலுடையவராய் உருக்கம் மிக்கவராய் மாணிக்கவாசகர் விளங்கினார். ஆதலால் காதலியல்புணர்த்தும் திருக்கோவையாரும், எட்டாம் திருமுறையாயிற்று.

ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும்; சிவஞானபோதத்தின் ஒன்பதாம் நூற்பா, பெற்ற பதிஞானத்தினால் பற்றுச் கழல், ஒரோவொருகால் எழும் அவாவும் அறும் பொருட்டு, விதிப்படி திருவைந்தெழுத்து எண்ணி, உயிர் தூய்மையடைதல் குறித்தது. ஒன்பதாம் திருமுறையும், வேறு நோக்கமின்றி இறை புகழ் (திரு இசைப்பா) பாடிப் பல்லாண்டு வாழ்த்தி, பிறவற்றிற் பற்றறும் உயிர்த் தூய்மையை எடுத்துக் காட்டியது.

இவை மூன்றும் அருளிற் பயிலும் வகைகளாதல் துணியப்படும்.

கடைசி மூன்று திருமுறைகள், திருமூலர் திருமந்திரமும், பதினோராம் திருமுறையும், திருத்தொண்டர் புராணமுமாகும். இவை சிவஞானபோதத்தின் கடைசி மூன்று நூற்பாக்களின் கருத்துக்களுக்குரியவை. அதாவது, இறைபணி நிற்றலால் மலநீக்கம் பெறுதலும், இரண்டற்ற முறையிற் சிவப்பேறு எய்தலும், அங்ஙனம் அணைந்தவரின் இயல்புகளாகிய சேவைகளைக் கூறுதலும், எனப் பயிற்சிக்குரிய பயன்களைத் தெளிவித்தல்.

திருமூலர் திருமந்திரம் தமிழாகமம் எனப்படும் ; ஆகமம், சிறப்பு நூல் ; வழிபடு நெறியில் இறைபணி யின்பம் உணர்த்துவது ; 'சரியை', 'கிரியை', 'யோகம்', 'ஞானம்' என்னும் நான்கு வகையிலும், சரியை ஞானம், கிரியையில் ஞானம் எனச் சிறப்பாக ஞானப் பகுதி தேற்றி, 'ஞானப் பூசைப்' பயனைத் தருவது. அதனால் மல நீக்கமும் இயல்பாகவே உண்டாக்குகிறது.

பதினோராந் திருமுறை, சிவபெருமான் அருளிய தமிழும், முழுமுதற் சிவமே, பிள்ளையாராய் முருகராய் அருளுருக் கொண்டு எழுந்தருளிய நிலைகளைப் பற்றிய நூல்களும், 'சிவமே முழு முதல்' என்னுங் கொள்கையராய் அந்நெறி நின்றவர் அருளுரைகளும், அப்பெருமக்களைப் போற்றும் அடியவர்கள் அருள்மொழிகளும் உடையது. எல்லாரும் சிவமே முதன்மையெனக் கொண்டு சிவத்தை வழிபட்டுச் சிவப்பேறெய்தியவர்கள் ; சார்புகளுக் கேற்றபடியெல்லாம் திரிந்து விடாத உறுதிக் கொள்கையர். சிவத்தில் அணைந்து வரும் பேறு பெற்றோர்க்கன்றி இக்கொள்கை மாட்சி அமையாது; இடையில் நேரும் சித்துப் பேறுகளிலும் பிறவற்றிலும் மயங்காமல் சிவப் பேறெய்துதலொன்றே குறியாய் ஒழுகிய சைவப் பெருமக்களின் அருளிச் செயல்களை உடையது, இப்பதினோராந் திருமுறை! ஆதலின் இது சிவப் பேற்றுக் குரியதாயிற்று. இதற்கு முன் எழுந்த பத்துத் திருமுறைகளும் இக்கொள்கையும் பேறும் உடையனவேயாயினும், அக்கொள்கை இன்னதென எடுத்துப் போற்றும் சிவம், சிவ குடும்பத்தவர் போன்ற பிள்ளையார், முருகர், சிவக்கயிலை சேர்ந்தவர், ஏனைய சிவதலங்கள் சென்றவர், சிவகுரவர், சிவனடியார், அடியவர்க்கடியார் எனச் சிவப்பேறு பெற்ற பல வகையினரான சைவக் கொள்கையாளர் கூற்றுக்களைச் சான்று பகர்வது போல, இப் பதினோராந் திருமுறை, உடையதாகலின், சிவப்பேறு குறிப்பதற்கு இது, சிறப்புடையதாயிற்று.

திருத்தொண்டர் புராணம் என்னும்பன்னிரண்டாந் திருமுறை, அணைந்தோர் இயல்புகள் கூறும் வரலாறுகளும் சேவைகளும் பொதிந்தது.

சிவஞானபோதத்தில் பன்னிரண்டுக்கு மேல் நூற்பாக்கள் அமையவில்லை; தமிழ் மொழியின் உயிர்ப் பெழுத்துக்களிலும், சைவத் திருமுறைகளிலும் பன்னிரண்டுக்கு மேல் இல்லை. மலநீக்கமும் சிவப்பேறுமாகிய முடிந்த பயன்களை எடுத்துக் காட்டி, அப்பெரும் பயனில் அணைந்தவருடைய இயல்புகளையும் பெரிய புராணங் கொண்டு முடிந்த முடிபாகக் கூறித் திட்டப்படுத்திவிட்ட பின், பின்னெழுந்த வேறு பாடல்களையோ நூல்களையோ இத்திரு முறை வரிசையிற் சேர்ப்பதென்பது பொருள் அற்றதாகின்றது ; சேர்க்கக் கூடாது என்று ஒரு நினைவு கொள்வதற்கே இடமில்லை ; சேர்ந்தால், மரபும் வழக்கும் கெடும். சேர்க்காத வாக்குகள் நூல்களுக்கெல்லாம் அவற்றின் தனித் தனிச் சிறப்புகள் இதனால் குன்றிவிட வில்லை. தலைமைத் திருவும், அதற்கேற்றபடி முதன்மையான ஒரு முறையுங் கொண்டசைவத் திருமுறைகளின் வரிசைக்கு ஒரு தனி இடம் இருப்பதை மாற்றிவிட முயலுதல் சன்மார்க்கச் செயலாகாது.

திருமுறைப் பெருமைகளையெல்லாம் சிவ பெருமான் திருவருளால் ஓதாது உணர்ந்த வள்ளற் பெருமான், தமது திருவருட்பாவிலேயே முதன்மையாய்த் திகழும் அருட்பெருஞ் சோதி அகவலின் தொடக்கத்தில், பன்னிரண்டு உயிரெழுத்துக்களையும், அவை உணர்த்தும் உயிர் வளர்ச்சிக் கருத்துக்களாகிய சிவஞான போதக் கோட்பாடுகளையும் இனிது பெய்து அருள் பாலிப்பாரானார்.

R. RAJU,
by Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

**அகவலில் உயிரெழுத்து வரிசை :**

அகவலில், 'அ' போன்றது சிவநெறி சார்ந்த 'சிவபதி' எனவும், 'ஆ' போன்றது மறையாகம நூலுணர்வாகிய 'பாச ஞானம்' எனவும், 'இ' போன்றது இகத்திலும் பரத்திலும் ஈடுபட்டிருக்கும் 'உயிர்' எனவும், வருதலால், முப்பொருளுண்மைகளை முதல் மூன்றடிகளால் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்த மூன்று வரிகளில், முறையே, 'ஈ', 'உ', 'ஊ' என்பவற்றின் கருத்துக்களாக, உயிர் சிறுமை யுடையதாயினும் இகபர நிலை

களைக் கடந்து முன்னேறும் இயல்பும் உடையது என்றும், 'பாசம்' மறைப்புடையதாயினும் உரை மனம் போன்ற புற அகக் கருவிகளாய் நின்று விளக்கும் இயல்பும் உடையது' என்றும், 'கடவுள் உயிர்க்குயிராய் உயிர்க்குள் ஒளித்துக் கொண்டிருந்தாலும், உயிரில் ஊக்கமாகவும் உடம்பில் ஒளியாகவும் மிளிரும் இயல்புடைய வர் என்றும், முப்பொருள் இலக்கணங்கள் வருகின்றன.

அதன்பின் 'எ', 'ஏ' 'ஐ' எழுத்துக்களின் குறிப்புகளாக முறையே அஞ்சி அதைக் கடக் கும் தகுதி பெறுதலும், 'குருதேவர் தொடர் பினுல் ஒரு நிலைமிசை ஏறிக் கருவிகள் ஆறுனுங் கடக்கும் பயிற்சியிற் பழகுதலும், பழகி ஐயந் திரிபுகள் நீங்கிய தெளிவில் மரணமிலாப் பெரு வாழ்வு எய்துதலுமாகிய பயிற்சிச் சிறப்புகள் காணப்படும்.

கடைசி மூவகைப் பயன்களும், 'ஒ', 'ஓ': 'ஔ' என்னும் ஒலிகளின் விளக்கமாய், முறை யே இறையருளில் இரண்டற ஒற்றுமைப்பட்டு மலம் ஒருவ விளங்குதலும், சிவப்பேறெய்திய உணர்வொளிக்குச் சிவம் மேன்மேலும் ஆதார மாயிருந்து இன்பம் பெருக்கி வருதலும், அவ் வாறு அணைந்தோர் தம் வாழ்க்கையில் குற்ற மெதுவுங் கூறமுடியாதபடி எண் குணங்கள் மேலிட்டு உலகுக்குத் தாய்போல் சேவைகள் செய்து சிறத்தலுமாக வந்தன.

**சிவபதி:**

அகவலில் 'அருட்பெருஞ்சோதி' என்னும் முழக்கம் தலைப்பிலும் முடிவிலும் இடையிலும் எங்கும் கேட்கப்படுகின்றது. அது 'சிவநெறி' யைச் சேர்ந்ததென்றும், அதன் 'பெருநிலை'யில் மிளிர்வதென்றும், 'சிவபதி'யாய்த் திகழ்வ தென்றும் வள்ளலார் முதலடியில் அருளிச் செய்கின்ருர்.

நெறி, நிலை, பதி என்பன 'அருள்' அடை மொழி சேர்ந்து, 'அருட்சிவநெறி' எனவும், 'அருட்பெருநிலை' எனவும், 'அருட்சிவபதி' எனவும் வருவதனுல் அவற்றின் முழு முதன்மை தெரிகின்றது. சிவநெறியிற் 'பெருநிலை' என் றது, சன்மார்க்கம்; சிவநெறியின் நான்கு வகை களில் மேலான நிலையாகிய ஞான சன்மார்க்கம்; இது காதல் திறம் மிக்கது; அதாவது உருக்கச் சிறப்பு உடையது.

இம் மெய்ந் நிலையில் பழக முந்துவோர், திருவருளோடு உறவு கொள்ளும் முறையில், முதலில் அடிமைத் திறத்தும், அடுத்து உரிமைத் திறத்தும், அதன்பின் நட்புத் திறத்தும் பழகு தற்குரியோர். அதன் பின்பே, இம்மூன்றின் பயனுக ஞானக் காதல் திறன் என்னும், 'சன் மார்க்கம்' கூடிவரும். தொடக்க நிலையினர் நேரே அடைதல் அரிது; எல்லார்க்கும் இயலு வது கடினம்!

''அன்றே என்னை அடிய னுக்கி ஆண்டசோதியே
அதன்பின் பிள்ளை யாக்கி அருளிற் களித்த சோதியே
நன்றே மீட்டும் நேய னுக்கி நயந்த சோதியே
நானும் நீயும் ஒன்றென் றுரைத்து நல்கு சோதியே''

எனவும்,

''சரியைநிலை நான்கும்ஒரு கிரியைநிலை நான்கும்
தனியோக நிலைநான்கும் தனித்தனிகண் டறிந் தேன்;
உரியசிவ ஞானநிலை நான்கும் அருள் ஒளியாய்
ஒன்றென்று அறிந்தேன்மேல் உண்மைநிலை பெற்றேன்''

எனவும் அடிகளார் அருளுவர்; 'மேல் உண்மை நிலை' என இதனில் வந்தது, சிவப்பேருகிய வீடு பேற்றின்பம்!

'சரியை' முதலியவற்றில் நான்கு என்றது, 'சரியையிற் சரியை', 'சரியையிற் கிரியை' முதலியன; சிவ நெறியில் இங்ஙனம் முறைப் படி பழகுவோர், சிவபதியை அடைகின்றனர். இக்கருத்துக்களெல்லாம் சிவஞான சித்தியாரி லும்,

''வேத சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்ருல் சைவத்
திறத்தடைவர்; அதிற் சரியை கிரியா யோகம்
செலுத்தியபின், ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்'' (9—10)

என வந்தன.

'அருட்பெருஞ் சோதி' சிவபதியைக் குறிக்கும் என்பவர், 'சிவபதியாம் அருட்பெருஞ் சோதி' எனப் பண்பாட்டு நெறி விரித்துத் தெளி வித்தார். 'சிவபதியாகிய அருட்பெருஞ்சோதி' என்பது அதன் பொருள்! அகவலில் வேறு இடங்களிலும் 'அருட்பெருஞ் சிவமே', 'அருட் சிவபதியே' எனவரும்; 'அருள் விளக்க மாலை' முதற் பாடலிலேயே 'அருட்சோதிச் சிவமே' எனவும் வந்தது; 'சிவ சிவ சோதி' எனவும், 'சோதி சிவ சோதி' எனவும் அருட்பாவில் வேறு இடங்களிலும் வந்தமை நினைவு கூர்க.

**சிவம்—சிறப்புப் பெயர்:**

ஆயினும், சமய நெறிகளை வன்மையாகச் சாடியவர் வள்ளலாராதலின், குறிப்பிட்ட ஒரு சமயக் கடவுளை, அதுவும் தம் இறுதி நாட்களில் ஓதிய சீர்திருத்த அகவலின் முதலில் கூறினர் என்பது அவர் திருவுள்ளத்துக்குப் பொருந்தாது; 'சிவபதி' என்பதைச் சைவ சமயக் கடவுள் என்று ஏன் கொள்ள வேண்டும்? பதியாய் விளங்குவோன் 'சிவத் தன்மையாகிய மங்கலம் உடையவன்' எனப் பொதுவாக ஒரு முழு முதலைக் குறிப்பதாகக் கொண்டால் என்ன? என்று தோன்றலாம்.

எல்லார்க்கும் பொதுவான ஒரு முழு முதலையே, 'நிலையானவன், மங்கலமானவன்' என்னுங் கருத்தில், 'சிவ பதி' என்றழைத்துச் சைவ சமயம் எழுந்தது.

'கடவுள்', 'இறைவன்' என்பன பொதுப் பெயர்கள் ; 'சிவம்' என்பது அப்பெருமானுக்கே சிறப்புப் பெயர் ; மற்ற நாட்டவர் 'இறைவ'என்று அழைத்தால், சைவ சமயத்தவராகிய இந்தியத் தென்னுட்டவர், 'சிவனே' என்று சிறப்புப் பெயரால் அழைக்கின்றனர் ; இம்முறைமையே,

''தென்னு டுடைய சிவனே போற்றி,
எந்நாட் டவர்க்கும்இறைவா போற்றி''

என்பதில் தோன்றுகிறது ; சைவ சமய குரவராகிய மாணிக்க வாசகப் பெருமானின் வழி நின்ற வள்ளலாரும் அவ்வாறே அகவலிற் கூறுவாராயினர்.

சமயங்களிற் பற்றுக் கூடாதென்பது பெரியோரனைவர்க்கும் உடன்பாடுதான். ஆனல், சமய நெறிகளில் அன்புங் கூடாதென்பது வள்ளலார் கருத்தன்று; ஏனென்றல், ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு நெறியில் ஒழுகியே தீர வேண்டும்; நெறியில் நடவாதவர் துறையை அடையார்.

பற்றிருந்தால், சமய நெறிகளையே வியந்து கொண்டு அங்கங்குத் தங்கிவிடக் கூடும். மேலே சென்று துறையை அடைய முடியாது ; அடைய வேண்டும் என்பது அவர் தீவிரம்! வள்ளலாருக்கும் ஒருபடி மேலே போய்ச் சமய நெறியில் மட்டுமின்றி ''ஈசனே டாயினும் ஆசை அறுமின்கள்'' என்றது, 'திருமந்திரம்' என்னும் சைவ நூல்! இத் திருமந்திர அருளுரையும் பெற்றவர் வள்ளலார்!

**சிவநெறிப் பொதுமை :**

சிவம் என்பது சிறப்புப் பெயரெனப் போற்றப் படுவதற்குக் காரணம், உரிய துறையில் அது சேர்ப்பிக்கின்றது ; அடியார் பெருமக்கள் அடைய வேண்டிய நலங்கள் அதில் உள்ளன. அந்நலங்களை அடைய உதவும் 'சிவ' என்னும் மந்திர எழுத்துக்களும் அதில் இருக்கின்றன. போற்றப்படும் முதல்வன், அதில், அம்மையப்பராய் மென்மை, வன்மை, அருளுடன் திகழ்கின்றுன்.

இத்தகைய சிறப்புக்களோடு, 'மங்கலம்', 'நிலைபேறு', 'தூய்மை', 'நன்மை', 'உண்மை', 'செம்மை' முதலிய எல்லா நல்ல கருத்துக்களையும் அப்பெயர் உணர்த்துகின்றது; வேறு எந்தப் பெயரும் இப்படி உணர்த்தவில்லை.

மேலும் நிலைபெருத மங்கலப் பெருவாழ்வை, பிறப்பிறப்பற்ற விடுதலை வாழ்வை, மரணமிலாப் பெருவாழ்வை அது நினைவூட்டுகின்றது; இறப் பொழிக்கும் சன்மார்க்கமும் ஒரு மார்க்கமே ; துறை என்பது மார்க்கத்துக்கும் மேற்பட்டது ; அது சிவப்பேறு ; ஆதலால், சன்மார்க்கத்தால் அடையக்கூடிய மரணமிலாப் பெருவாழ்வுக்கும் மேல், மேலும் அடைய வேண்டிய நிலைபேருன ஒரு மங்கல முதன்மைக்கே 'சிவம்' என்னும் சிறப்புப் பெயர் அமைந்தது!

இச் செம்மை நிலையே 'சிவபரம்' எனத் திருவாசகத்தில் வந்தது; 'செம்மையே யாய சிவபதம்' என்பது மணிமொழி! திருவாசகத்தின் முடிவிலும், இறுதிப் பாடலில் இச் 'செம்மை நிலை' கூறப்பட்டது.

வாழ்க்கையிற் செம்மையை விரும்பாதவர் யார்? ஆனுல் அதைச் சிவபதமாயிருப்பதென்று சொல்லும்போது, அப்படிச் சொல்லச் சிலர் தயங்கக்கூடும். சொற் பொருளறிந்தோர் தயங்கார்.

பெயர் வழக்கு உட்கருத்தை நினைவூட்டிக் கொண்டேயிருக்கும். கருத்துக்கும் அது நெறி கொள்ளுந் திறத்துக்கும் ஏற்ற ஒரு நல்ல பெயரை யாரும் மறப்பதற்கில்லை. வள்ளலார் எப்படி மறப்பார்? தக்க பெயரைப் பெரியோர் அமைத்துக் கொடுத்ததற்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேம்.

புரட்சிகள் தெளிவுக்கு உதவக் கூடியவை ; முன்னேர் மொழி பொருளை அறியாமல் நெறி தவறும் போதெல்லாம், பெரியோர் தோன்றிப் புரட்சியும் கிளர்ச்சியும் உண்டாக்கி மக்களைத் தெளிவுபடுத்தி முன்னை நன்னெறியில் நிறுத்துவர்! தவறியதை நெறியிற் புரட்டிப் போடுவர்; அப்படிப் போடும்போது, காலத்துக்கேற்ற வகையில் சில புதுமைச் சாயல்கள் தோன்றி உணர்ச்சி மிகுப்பதும் உண்டு. ஆயினும் பெரும் பாலானவை, பழமையில் காலூன்றிப் புதுமைக் கோலம் கொண்டவையே என்பது மறக்க முடியாதது.

மாணிக்கவாசகப் பெருமான், ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி'' எனப் பண்டைக் காலத்திற் செய்த சோதி முழக்கம், வள்ளற் பெருமான் திருவாய்மலரில், 'அருட் பெருஞ் சோதி' எனப் புதுமைச் சாயலுடன் புரட்சிப் பெயரால் எழுந்து பெருக விளங்கியது !

முன்னேர் தெரிவித்த சிவநெறிக் கருத்துக்களுக்கு எளிய அழகான புதுப் புதுச் சொற்களாலும் முறைகளாலும் வள்ளலார் மிகத் தெளிவான விளக்கங்களை எளிய நடையில் திருவாய் மலர்ந்து வழங்கியிருக்கும் வள்ளன்மைக்கு உலகம் என்ன கைம்மாறு செய்ய இயலும்!

# சென்னையில் சிவாஜி தரிசித்த சென்னம்மன்*

"மகாவித்வான்" திரு. பண்டித நடேசனார், பி.ஏ.,

இன்றுள்ள கடற்கரைப் பட்டினங்களாகிய பம்பாயும் கல்கத்தாவும் சென்னையும் ஸ்ரீதேவியின் பெயரால் உண்டாயின. பம்பா தேவியின் பெயரால் பம்பாயும், காளியின் பெயரால் காளிகட்டும் (கல்கத்தா), சென்னம்மன் பெயரால் சென்னப்பட்டினமும் விளங்குகின்றன. பம்பா தேவி பம்பாய்க் கோட்டையினின்றும் அகற்றப்பட்டு வேறொரு இடத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றாள். கல்கத்தா காளியும், சென்னைக் காளியும் இருந்த இடங்களிலேயே உள்ளனர். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வீற்றிருந்த ''மராட்டா டவுன்'' என்பதே இன்று உள்ள முத்தியாலுப்பேட்டையும், பவழக்காரத் தெருவுமாகும். 67, தம்புச் செட்டித் தெருவிலுள்ள, சென்னம்மன் குப்பத்தின் காளியே, இன்று சென்னைக் காளிகாம்பாளாகக் காண்கிறோம்.

கி.பி. 1639ல் ஆங்கிலேயர் விலைக்கு வாங்கிய சென்னைக்குப்பம், வடவாறுகுப்பம், மதராஸ் குப்பம் மூன்றும், மீனவர்களின் குடியிருப்பாகும். இவைகளை அடுத்த நெய்தல் நிலங்கள் யாவும் யாருமற்ற காடுகளாக இருந்தன. இக்காட்டினுள் சிறு புதர்களை அழித்துக் குறும்பர்கள் பூந்தமல்லி (''பூண்தண்மலி கரிகாற் பெருவளத்தான் காலத்தது; கல்வெட்டால் அறியலாம்) வரையில் களிமண் கோட்டைகள் (குறும்பு) கட்டி வசித்தனர். இந்நிலப் பகுதியை ''NO MAN'S LAND'' என ஆங்கிலேயர் தம் குறிப்பில் கூறியுள்ளனர். கடற்கரைக் குப்பங்களில் ''பட்டனவர், கரையாளர், பட்டினவர், கரையாள்வார்'' எனும் பெயர்களுடன் மீனவர்கள் வசித்து வந்தனர். நெய்தல் நில மக்களுக்கு வேண்டிய கட்டுமரங்களையும் துடுப்புகளையும் படவுகளையும் பாய்மரங்களையும் நங்கூரங்களையும் செய்து தர, ஐந்தொழிலாளர்கள் சென்னம்மன்கோயில் மாட வீதிகளில் வாழ்ந்தனர். ஐந்தொழிலாளர்களைப் ''பஞ்சபுத்திரர்'' என்றும் விசுவகருமர் என்றும் கூறினர். சுமார் 480 ஆண்டுகளாகத் தம் குலதெய்வமாக விசுவகருமர்கள் தாமே பூசித்துத் தங்கள் சொந்தக் கோயிலாகப் போற்றிப் பாதுகாத்து வருகின்றார்கள். சென்னையைச் சார்ந்த விசுவகருமன் எங்கு வாழினும் தன் காணிக்கையைக் ''காளியம்மன் சம்பாவனம்'' எனும் பெயரால் சுபம் அசுப காரியங்கள் நடக்குங்கால் அனுப்புகின்றான். எண்ணெய் வியாபாரம் செய்யும் வாணியரிடையும் காஞ்சி காமாட்சிக்குக் காணிக்கை அனுப்பும் வழக்கம் இன்றும் உண்டு. அவர் தரும் பணத்திற்கு ''சாதி தர்மா'' என்று பெயர். (பார்வை : 170வது பக்கம், டாக்டர் ஜி. எஸ். கூரே இயற்றிய ''இந்தியாவில் சாதியும் குலமும்'').

---

* [மகாராட்டிரப் பேரரசின் முதல்மன்னர் சத்ரபதி சிவாஜி மகாராஜா, **3—10—1677**-ல் சென்னைக் குப்பத்திற்கு விஜயம் செய்து, இன்றைய சென்னை மாநகரின் தம்புச் செட்டித் தெருவில் உள்ள, காளிகாம்பாள் (சென்னம்மன்) கோயிலைத் தரிசித்தார். அங்ஙனம் அவர் தரிசித்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியின் **300**-ஆம் ஆண்டு நிறைவு விழா, அக்கோயிலில் **3—10—1977** அன்று, சிறப்புறக் கொண்டாடப்பெற்றது. தமிழக முன்னாள் முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். அவ்வமயம் திரு. பண்டித. நடேசனார் நிகழ்த்திய சொற்பொழிவு, இங்குக் கட்டுரை வடிவில் வெளியிடப் பெறுகின்றது. —**ஆசிரியர்.**]

சிவன்கோயிலும் விஷ்ணுகோயிலும் எல்லா இடங்களிலும் காண முடியாது. ஆனுல் ஊர்த் தேவதை யாண்டும் உண்டு. காளி, மாகாளி, காளியாத்தாள் எனப் பல பெயர்கள் ஊர்த் தேவதைக்கு உள. சிதம்பரத்தில் தில்லைக்காளி, காஞ்சியில் கருக்கில் அமர்ந்தாள், மாமல்லபுரத்தில் கொற்றவை, திருவாரூரில் ராஜதுர்க்கை, கோயம்புத்தூரில் (கோவை) கோனமாகாளி (கோலமாகாளி, கோனியம்மன்), பாரியூரில் குண்டத்துக் காளி, கீரனூர் செல்வி, செங்கோட்டில் காளி, காரைக்குடியில் கொப்புடையம்மன், நாட்டரசன்கோட்டையில் கண்ணுத்தாள், திருநெல்வேலியில் குரங்கணியம்மன், பெரியபாளையத்தில் பவானி, திருவொற்றியூரில் துர்க்கை, சென்னைக்குப் பக்கத்தில் (முத்தியாலுப்பேட்டையும், பவழக்காரத் தெருவும் சேர்ந்த இடம்) சென்னம்மன் என ஊர்த் தேவதைகளுக்குப் பெயரிட்டு மக்கள் வழிபடுகின்றனர்.

எல்லையம்மன், எல்லைப் பிடாரி, எல்லைப் பார்த்தாள் (மாதா கோயில்), வேளாங்கண்ணி, வடக்குவாய்ச் செல்வி, கருக்காத்தாள் முதலிய பெயர்களுடன் ஊரில் எல்லை காக்கும் காவல் தெய்வமாகவும் காளியம்மனைப் பிரதிட்டை செய்து வழிபடுவதுண்டு. தமிழகத் தெற்கு எல்லை காக்கும் தெய்வமாகக் குமரியம்மன் இன்றும் வீற்றிருக்கின்ருள்.

சிவன் இட்ட கட்டளைப்படி காளி ஒரு தீர்த்தத்தில் மூழ்கிக் கோர வடிவம் நீங்கினுள். சென்னைக் காளி (சென்னம்மன்) சாந்த சொரூபியே. சிவகாஞ்சியில் குமரகோட்டம் பின் பக்கமுள்ள ஆதிபரமேசுவரி எனும் காளி கோயிலில் கோர வடிவோடு அம்மன் காட்சியளிக்கின்ருள்; இவளே விசுவகருமர் குல தெய்வம், காமாட்சிக் கோயில் வடிவம் சாந்த சொரூபியே. வெற்றி வேண்டின் கொற்றவை பூசை புரிவர் வீரர். நிதம்ப சூதனியை ஒன்பதாம் நூற்ருண்டில் விசயாலய மன்னன் பிரதிட்டை செய்தான். அன்னை வழிபாடு பாரசீகத்திலும் கிரேக்க நாட்டிலும் ரோமாபுரியிலும் இன்றும் காணலாம். தாய் வழிபாடே மிக முக்கியம் என்பர் கத்தோலிக்கர். ஆம்; உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. காரணம் தலையாய காரணம்; சக்தி வழிபாடு ரிக் வேதத்தில் காணப்படுகின்றது.

சென்னையம்மனைச் சென்னம்மன் என்று தெலுங்கரும், கன்னடரும் (கருநாடகர்) அழைத்தனர். இன்றும் அவர் தம் மொழிகளில் இந்நகரைச் ''சென்னபுரி'' என்றே அழைக்கின்றனர். சென்னபுரி ஆந்திர மகா சபை எனும் பெயரைக் காண்க! 'சென்ன' எனும்பதத்துக்கு முருகு, அழகு, இளமை, வலிமை, கம்பீரம் எனப் பொருள் உண்டு. பம்பாயும் கல்கத்தாவும் சென்னையும் காளிக் கோயிலை முதலாகக் கொண்டே பெயர் பெற்றன. இவ்வுண்மையை மாற்றி, இந்தச் சங்க கால நகரம் சென்னப்ப நாயக்கன் பெயரால் விளங்குகின்றது என ஒரு வரலாற்றைப் புகுத்தினர்.

கடவுள் பெயரையே குழந்தைகளுக்கு இடும் வழக்கம் அன்றும் இன்றும் யாண்டும் உள்ளது; என்றும் எங்கும் இருக்கும். கடவுட் பக்தி பிறப்பிலேயே பிறக்கின்றது. சென்னப்ப நாய்க்கனுக்கும் அவனது தங்கை சென்னம்மாவுக்கும் பெயரிடக் காரணமானவள் சென்னைக் குப்பத்தின் காளியம்மனே. இக்காளியம்மனுக்கு மீனவரும் பிறரும் செந்தூரம் பூசி வழிபட்டதால் அத்தேவி ''சென்னம்மன்'' ஆயினள்.

செம்மேனியம்மான் சென்னப்பன் (சிவன்) என்றும், செம்மேனியம்மன் (சிவை) சென்னம்மன் என்றும் மக்கள் போற்றினர். செந்நிறக் காளியைச் சென்னம்மன் என்றனர். வெண்ணெயை அனுமனுக்கும் காளியம்மனுக்கும் பூசும் பழக்கம் மக்களிடையே உண்டு. மராட்டியர் விநாயகரையும் பவானியையும் சிவப்பு நிறம் பூசியே பூசிப்பர். இப்பழக்கம் இன்றும் மகாராஷ்டிரத்தில் உண்டு. ''வீர சிவாஜி சிவையின் (பார்வதி) அருளால் பிறந்தவர்; அம்பாள் உபாசகர்; சென்னைக் காளிக்குச் செந்தூரமும் குங்குமமும் பூசும் பழக்கமாயிருந்ததால், எங்கள் சிவாஜி உங்கள் கோயிலுக்கு வந்தார்; வழிபட்டார்'' என இன்றுள்ள தஞ்சை மகாராஜா என்னிடம் கூறினர்.

கி.பி. 1676ல் மகாராஷ்டிரத்தை ஸ்தாபித்த பின்னர் ''சிவாஜி ராஜா'' தம் தலைநகராகிய ரெய்ச்சூருக்குத் திரும்பினர். ரெய்ச்சூரைப் பல சாதியினரும் மதத்தினரும் அந்நியரும் வறியரும் செல்வரும் சுதந்திரத்துடனும் சுகத்துடனும் பயமின்றி வாழ வழி வகுத்தார். நாம் இன்று காணும் 'மெட்ரபாலீஸ்' என்னும் நகராக அது விளங்கியது. உடனடியாக ஒரு வதந்தியைக் கிளப்பினர் சிவாஜி. அச்செய்தி எங்கும் பரவியது.

திடீரென்று ஒரு நாள் சபையை நோக்கி: ''வீரர்களே! நம் சுதந்திர நாட்டைக் காணப் பல அக்கிரமங்களையும் அநியாயங்களையும் தியாகங்களையும் அம்பாள் பவானி ஆணையால் நான் செய்திருப்பேன்; நான் தெரிந்தும் தெரியாமலும் செய்யும் பிழையும் பாவமே; அதனை ஒழிக்கக் கருநாடகத்துக்குப் புறப்படுகின்றேன்; அங்குள்ள திருப்பாச்சூர், திருவாரூர், இராமன்கூர் (இராமேஸ்வரம்) முதலிய புண்ணியத் தலங்களுக்குச் .சென்று சிவனை வழிபடப் போகின்றேன்; நான் சுமக்கும் பாவ மூட்டை அன்றே தொலையும்'' என்ருர் சிவாஜி மன்னர். (பார்வை — அயல் நாட்டார் எழுதிய சிவாஜி வரலாறு — பக்கம் 155).

காஞ்சியிலிருந்து சிவாஜி மகாராஜா 3—10—1677ல் சென்னைக்கு வந்தார். சென்னைக் காளியை நடுநாயகமாகக் கொண்டு விளங்கிய ''மராட்டா டவுனி''ல் தங்கினர். கோயிலைச் சுற்றி வாழ்ந்த விசுவகருமரும் பேரிச் செட்டிமாரும் தத்தம் வீடுகளையும் தோட்டங்களையும் நிலங்களையும் காலி செய்து வீரர்களிருக்க வசதி அளித்தனர். (பார்வை — பக்கம் 163; நூல் — ''கருநாடகத்தில் மராட்டியர் ஆட்சி'').

**—(தொடரும்)**

# பேதையும் மேதையுமான சீதை

'' முதுபெரும் புலவர் ''
புரிசை திரு. சு. முருகேச முதலியார்,
திருவண்ணமலை

(முற்ருெடர்ச்சி)

## ஒளிக்கொளியான மாணுன் மாரீசன் :

மண்ணும் விண்ணும் இயற்கை யொளி படைத்தன. பொன் முதலாகிய உலோகங்களும் மாணிக்கம் முதலாகிய ஒளிநிறைந்த கற்களும் மண்ணில்தான் பிறக்கின்றன. அறிவுடையவனை எக்குடியில் பிறந்தாலும் யாவரே உயானுலும் அவனை மேல் வருக என மக்கள் அழைத்து விடுகின்ருர்கள். அதுபோலப் பொன்னையும் மணிகளையும் பூமிக்குள் புதைந்திருக்க மக்கள் விட்டுவிடுகிறதில்லை. எவ்வளவு ஆழத் திருப்பினும், எத்தனை அழுக்கில் மூழ்கிக் கிடப்பினும், அகழ்ந்தெடுத்து அலம்பித் துடைத்துத் தமது தலைமேற்கொண்டு தயங்கொளி காண்கின்ருர்கள். இதனுல் மண்ணுக்கும் இயற்கை ஒளி உண்டு. மூடிநிற்கும் முகிலைக் கலைத்துத் தேடிவந்து தன் திசைகாட்டும் மின்னலைத் தன்னகத்தே கொண்டிருத்தலால், விண்ணிற்கும் இயற்கையொளியுண்டு. இவ்வியல்பாகிய ஒளி சான்ற மண்ணையும் விண்ணையும் விளக்கும் ஒளியாக இருந்தது மாரீசனுன மான் கொண்ட செயற்கைப் பேரொளி.

உலகத்தின் வெளிப்பாட்டை விளக்குகின்றது, அதன் விளக்கத்திற்கு மேல் விளக்கமான இந்தப் பொன்மான். ஒளியுள்ள விளக்குகள் தமது அளவைக்கேற்பச் சுற்றிடமெல்லாம் ஒளியைப் பரப்புகின்றன. ஆனுல் அவ்விளக்கின் அடிப்புறத்தில் அவ்வளவிற்கவ்வளவு இருள் சூழ்ந்தேயிருக்கின்றது. அடியிலென்ன, விளக்கின் திரிமுனைதான் எவ்வளவு கருமை, ஒருகால் இவ்விளக்குகளைப் போல வானையும் மண்ணையும் ஒளிமயமாக்கிவரும் பொன்மானும் அகவிருள் உடையது தானே? ஐயமென்ன? இருள் செறிந்த உள்ளந்தான் இந்த மாரீச மானின் உள்ளம். ''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு''. இதுதான் பொய்ம்மான் ஆகிப் புறப்படுகின்றதே. இதற்கெங்கிருந்து உள்ளொளி வரப்போகின்றது? இதன் கருத்து நிறையக் காரிருள்தான். இதற்கு ஒன்று கிடையாது. இந்தப் பொன்மானுக்கா? ஆமாம், என்ன கிடையாது விலையா? ஏன் விலையில்லாது போகிறது? அதுவே நம்மைக் கேட்பாருண்டென்று நம்பித்தானே வருகின்றது. விலையுண்டு, அதிலும் போட்டியாக விலை தரக் காத்திருக்கின்ருர்கள் ஒரு அண்ணன் தம்பிகள். மானுக்குப் பின்னை யென்னவிலை? அதுவா? இந்த வான மெல்லாம் ஒளிவீசும் மானுக்கு மானமொன்பதே ஒரு எள்ளத்தனையும் கிடையாது. இது இப்பொழுதுதான் மாளுகவில்லை. முன்னமே மான்தான். என்னமான்? அம்மான். இது முன்னமே அந்நிலைத்த வடிவு அல்லஅல்ல. நினைத்த வடிவியாம் சூர்ப்பனகைக்கு அம்மான், இப்பொழுது இது பொன்மான். ஆதலால் அந்த மருமகளுக்கு மானமிருந்தால்தானே இந்த மாமனுக்கும் மானமிருக்கும்? இருவருக்கும் இல்லை, இவர் கூட்டத்தில் ஒருவருக்கும் இல்லை. இக்காரணங்களால் இது ''தன் மானமில்லாத மானும்''. தன் மானமிலாத மாரீசன் தயங்கு ஒளிசால்மின் வானமும் மண்ணும் விளங்கு ஒளிசேர் பொன்மானின் உருவங்கொடுபோயினன்.

## மானமிகு சானகியார் :

நாடகக் கலைஞர்கள் நடிப்பதற்கு முன்னர் தாம் தங்களை நன்கு அலங்கரித்துக் கொள்ளுகின்றனர். பிறகு நிலைக்கண்ணுடிகளின் முன்னர் சென்று நின்று பார்ப்பர். அக்கண்ணுடிகளும் இவர்களைப் பார்க்கும். நடிகர் தம் புனைவு பொருத்தமாகி விட்டதெனக் கருதினுல் மகிழ்ந்து சிரிப்பார்கள். அக்கண்ணுடிகளும் இவர்களைப் பார்த்துச் சிரிக்கும். அது உங்கள் அரச கோலத்தைக் காணுதவர்கள் முன்னே சென்று காட்டலாமே. நீங்கள் இங்கு வந்தபொழுதே என்னிடம் வந்தீர்கள். அப்பொழுது உங்கள் விரச கோலத்தைக் கண்டிருக்கின்றேன். ஆதலால் யான் இதை உண்மையென மயங்குகின்றவனல்ல. புதிதாகப் பார்ப்பவர் மயங்குவர். அவர்களால் உங்களுக்கு மதிப்பு வரும் என்று கூறி அகற்றிவிடுவது போலிருக்கும் அதன் சிரிப்பு. இக்கலைவாணர் புனைவெல்லாம் தங்களைத் தாங்கள் பார்த்துக் கொள்வதற்கல்ல. அவையகத்துள்ள கலா ரசிகர்கள் கண்டு மதிக்க வேண்டும் என்பதற்காகத்தான். இங்கே இந்தப் பொன்மானுன புத்திமான், ஆனமான் புறப்படுகிறதாம் எங்கே ஒரு மானை நாடி. இதன் விருப்பம் என்னவாம். நாம் ஒரு மானைத் தேடிக் கொண்டு போகிருேம். அந்தமான் நம்மைப் பார்க்கத் தேடி வரவேண்டும். அப்பொழுதுதான் நமது பொன்பூச்சும் புனைவும் சிறப்புள்ளதாகும், எனக் கருதிச் செல்லுகின்றதாம்.

இந்த மானால் நாடப்படுகின்ற மான் என்ன சிறப்புள்ளது. அது ஒரு நன்மானாம். ''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்''. மானாகப் பிறந்தனவெல்லாம் மானல்ல. மற்றவர் மதிக்க உடம்பெடுப்பதுதான் மான். மதிப்படைவனவெல்லாம், பாடேறி ஈடேறி நாடேறிப் பின்னர் ஏடும் ஏறிவிடும். அந்த முறையால் வள்ளுவரேட்டில் பள்ளி கொண்டிருக்கின்ற ஒரு பண்புமிக்கமான், அம் மான் கவரிமான். ஆசிரியராக்கப் பெறும் இம் மான் தனது உடம்பில் ஒரே ஒரு மயிர்போனாலும் மானம் பொறுக்காமல் உயிரையே விட்டுவிடுமாம்.

தமிழகத்தில் பண்ணுருட்டிப் பத்தர்கள் களிமண் பொம்மை செய்வதில் கைதேர்ந்தவர்கள். அப்பொம்மைகளைச் செய்கின்ற பொழுது அவர்களது கையெலாம் களிமண்ணாக இருக்கும்: ஆனால் அவர்கள் மண்டையில் அந்த மண் படுவதேயில்லை. சிலர் அவர்களைப் பார்த்துத் தங்கள் மண்டையெல்லாம் களிமண்ணாக வைத்துக் கொண்டு பொம்மைகளைச் செய்கின்றார்கள். அப்பொம்மைகள் செம்மையாக இருப்பதில்லை, அவைகள் மண் திம்மைகளாகவே தெருக்களில் நிற்கின்றன. பாவம் அவை விலை போவதில்லை. படைப்பவர்களுக்குக் கூர்ந்த பார்வையிருக்க வேண்டும், நான்கு பக்கமும் சென்று பார்த்து வரவேண்டும், தெரியாதவற்றைக் கேட்கவும் வேண்டும். படிக்கவும் வேண்டும்.

உலகத்தைப் படைப்பதற்கு ஒரு வேதனை நமது பெரியவர்கள் படைத்துள்ளனர். அவனுக்கு நான்கு முகம் எட்டுக்கண்கள், எட்டுக் கைகள் எட்டுச் செவிகள், நான்கு பெரு நூல்களின் படைப்பு, படிப்பு விளக்கமான விடுப்பு. இத்தனையும் அமைத்தார்கள் அப் படைப்புக் கடவுளுக்கு. இவ்வளவு நலங்களைச் செய்து தராவிட்டால், அவன் படைக்கும் உலகம் பயனுடையதாக இருக்காது என்பது அவர்தம் கருத்து. இவ்வளவு வசதிகள் நிறைந்த படைப்பாளி சீதையைப் படைக்கச் சிந்தித்தானாம். சிறந்த பண்களைச் சேர்த்துச் சீதையின் சொற்களாக்கினன். அச்சொற்களுக்குத் தகுந்த வாய் வேண்டுமே பவளத்தைக் குடைந்து திருவாயாக்கினன். பிறகு மூக்கு காது கண் பல் கை கால் எல்லாம் வேண்டுமே, தனக்கான மட்டில் எங்கெங்குந் தேடி உலகத்தில் எவ்வெப் பெண்ணுக்குக் கவினுள்ள எவ்வெவ்வுறுப்புகளுளவோ அந்தந்த அழகியன வெல்லாங் கொண்டு வந்து, சீதையின் அவ்வவ் அவயவங்களாக ஆக்கி முடித்தனனாம். இவையெல்லாம் சீதையின் வெளித்தோற்றத்திற்குத் தானாயின. இதையெல்லாம் அளவாக வைத்த அவன், அளவிற்கே அடங்காத ஒரு பொருளை உள்ளே வைத்துவிட்டனனாம். ''திருவரங்கம் பெரிய கோயில்'' என்றொரு பழமொழியுண்டு. திருவரங்கத்து அந்தப் பெருமதிற் சுவற்றில் ஒரு கோடியில் ஒன்றென்னும் ஒரு லக்கத்தைப் போட்டுவிட்டு அதன்பக்கம் அம்மதில் திருப்பம் வரை சுன்னங்களையிட்டு விட்டு இந்தத் தொகைக்கு என்னபெயர்? கணக்கு வல்லவர்கள் சொல்லுங்கள் என்றால் பெயரிடுவார்கள். கோடானுகோடியே அதன் பக்கத்தில் வந்தால் சூட்டிலக்கமாகி விடும் அல்லவா? அவ்வளவு அதிகமாம் நான்முகன், சீதைக்கு உள்ளத்தில் வைத்திருக்கும் பொருள். அது என்ன பொருள். அதுதான் சீதைபாலுள்ள மானமாம். சொல்லுகின்றார் பாருங்கள் கம்பர்.

''பண்களால் கிளவிசெய்து பவளத்தை அதரமாக்கிப்
பெண்கள் ஆனார்க்குள் நல்ல உறுப்பெலாம் பெய்து நீண்ட
எண்களால் அளவா மானக் குணம் தொடுத்து இயற்றினான்''

இதுதான் பிரமதேவன் பாடுபட்டுச் சீதையைப் படைத்தளித்த பண்பு. இந்தச் சீதைதான் அந்த மான். அது எங்குள்ளது? இப்போது அது சனகன் கன்னிகா மாடத்தில் இல்லை, பேரரசன் தசரதன் அரண்மனையில் இல்லை, சாதுக்கள் வாழுந் தண்டகவனத்தில் இல்லை. அருள்மிகுந்த அகத்தியர் ஆச்சிரமத்திலும் இல்லை. பஞ்சவடியிலே புருடனை இழந்து போக்குமற்று ஊக்கமிகுத்து ஊரெலாந்திரிந்து மூக்கையுந் தொலைத்த முதமகளாகிய சூர்ப்பணகையின் வீச்சு வலையில் படவிருக்கின்றது. இந்தக் கணக்கிலடங்கா மானமுடைய கவரி மானாகிய நன்மான். அவ்வளவு மானம் மிகுந்த நன் மான், தன்னை வந்து பார்க்க வேண்டுமென்ற ஆசை வைத்துப் புறப்படுகின்றது இந்த தன்மானமில்லாத மாரீசனான மான். இவ்வளவு கருத்துக்களையும் எவ்வளவாகச் சுருக்கிப் படைத்து அளித்துள்ளார் கம்பர் பாருங்கள்.

''தன் மான மிலாத தயங்கொளி சால்
மின்வானமும் மண்ணும் விளங்குவதோர்
பொன் மானின் உருக்கொண்டு போயினனால்
நன் மான் அனையாள், தனைநாடுறுவான்''

(மா. வ. 213)

தன்மானம் இல்லாத மாரீசன், தயங்கு ஒளிசால் மின்வானமும் மண்ணும் விளங்குவதோர் பொன்மான் உருவங்கொடு, நன்மான் அனையாள்தனை நாடுறுவான் போயினன் என அமைத்துப் பொருள் செய்தல் வேண்டும். இனி மாரீசன் நன்மான் அனையாளை நாடுறுவான் இப்படிப் போயினன் என்பதே போதுமாக, அனையாளை என்பதொ டமையாமல் அனையாள் தனை எனவைத்ததனால் மாரீசன் மானனையாளைத் தான் நாடவும் அவள் அப்படியே தனை நாடவும் கருதினவனாகிப் போயினன் எனப் பொருளாகின்றதல்லவா?

விகட வித்துவான்கள், மற்ற விற்பனர்களை விட அரும்பெரும் பாட்டாளிகள். அவர்கள் குயில்போல் கூவுவர். மயில்போல அகவுவர், கிளிகளைப் போலவுங் கிளுகிளுப்பர், பன்றி போல், நாய்க்குட்டி, கழுதைகளைப் போலவே உறுமுவர், குரைப்பர், கத்துவர். உள்ளபடி அவ்விலங்குகளிடும் ஓசைகளை விட இவர்கள் இடும் ஓசை ஒருபடி உயர்ந்ததாக இருக்குமேயன்றிக் குறைவாக நிற்பதில்லை. ஏனது?

அவைகளுக்கு ஒருவர் தங்களை மெச்ச வேண்டுமென்னும் ஆசையில்லை. அதனால் வரும் பரிசையும் அவைகள் எதிர்பார்க்கவில்லை. இவர்களுக்கு எல்லாந்தேவை. அதனால்தான் அவ்வளவு பாடுபடுகின்றார்கள்.

ஒரு குலமகள் தமது குடும்பத்திற் கேற்பப் பூசிப்புனைந்து முடித்து உடுத்தி அணிந்து பணிந்து அளவொடு அயல் வேலைகளைப் பார்ப்பள். ஆயின் விலைமகள் அப்படியல்லள். அவள் நூலைப் பட்டாக்கித் தராவைத் தங்கமாக்கி, காகிதப் பூவைக் கதிர்பச்சையாக்கிட்டு கருப்பு நிறத்தைச் சிகப்பு நிறமாக்கித் தனது சோடனை, பிறரைச் சொக்கவைக்கக் கண்ணாடி முன்னே நன்றாகப் பார்த்து வீதியார்காண வெளிவந்து நிற்பள்.

இங்கு மாரீசன் மேற்சொன்னவகை மெச்சுதலையும் பார்க்கின்றான், அவன் சீதை தன்னை நச்சுதலையும் பார்க்கின்றான். அவனுக்குச் சீதை தன்னை நச்சாவிடினும் மெச்சாவிடினும், வித்தைபோதாதென இராவணன் தன்னை வெட்டிவீழ்த்துவனே எனும் அச்சமும் உள்ளது. ஆதலால் அவன் அரும்பாடுபட்டு அம் மாயமான் ஆட்டத்தை அதிசயிக்க ஆடினன். மாரீசன் கொண்ட மாயமான் வடிவினைக் கண்டு, காட்டு விலங்குகளெல்லாம் காதல் வலைப்பட்டனவாம். அக்காதல் ஒரு துளியளவல்லவாம் ஒரு உள்ளங்கையளவல்லவாம், அது ஒரு கடல் அலையத்தனைக் கவர்ச்சிக்கு இடமானதாம். திருமகள் போல உள்ள குலப்பெண்ணை மறந்து குரங்குபோலவுள்ள ஒரு விலைப்பெண்ணின் பின்செல்லுவது உலக இயல்பாக இருத்தல்போல, மானினம் அல்லாத, வேறினத்து விலங்குகளும் இம்மானைக் கண்டு மால்கொண்டனவாம்.

''கலைமான் முதலாகிய கண்டவெலாம்
அலைமானுநும் ஆசையில் வந்தனவால்
நிலையாமன வஞ்சனை நேசமிலா
விலை மாதர்கண் யாரும் விழுந்தெனவே''

## மலரால் மலர்கொய்வாள் சானகி:

உலகத்தார் ஒருங்குகூடி ஒன்றைச் சொல்லினால் அது அப்படியே நடந்து விடும். நல்ல நிலையிலுள்ள ஒருவனைப் பார்த்து, உங்களுக்கென்ன உடல் நலமில்லையா? ஒருவாறாகக் காண்கின்றீர்களே என்று ஒருவன் சொல்லினால் உடையவன் தனக்குள் உறுதி குறைகின்றான். அவன் தனது உடலைத் தானே திரும்பித் திரும்பிப் பார்த்துத் தியங்குகின்றான். தனது தியக்கமே மறுபடி மற்றொருவனையும் அவ்வகை ஐயமுறச் செய்கின்றது. இப்படிக் கண்டவர் விண்டதெல்லாம் கேட்டுக் கேட்டு அவன் கேட்டிற்கே ஆளாகி விடுகின்றான். இந்த வம்புப் பேச்சில் சிலபேருக்கு வாய் அதிகம். அதனால்தான் பிணியாளருடன் யாரையும் பேசவிடுகிறதில்லை.

சானகியாருக்கு இவ்வகையில் ஒரு குறை உண்டு. இயல்பாகவே அவருக்கு இடைமிகச் சிறுத்தது. அவரிடையின் சிறுமையைக் குறித்துச் சனகபுரத்துக் கன்னிகா மாடத்துத் தாதியர்களும் சேடியர்களும் கவலைப்பட்டு வந்தனர். திருமண நாளில் சீதைக்கு அணிமணிகள் பூட்டித் தொய்யிலெழுதிச் சில கைதேர்ந்த பெண்கள் அலங்கரித்தனர். அப்பொழுது அங்கு அயல்நின்ற பெண்கள் இப்படிப் பேசினர். தெய்வம் உண்டில்லை என்னும் வாதத்தில், உண்டு என்பார் எத்தனையோ ஏதுக்களைக் கூறி இவற்றால் அது உண்டு என இசைக்கின்றனர். அதுபோலவே இச்சீதைக்கு இடை என்று ஒன்று உண்டு எனக் காணப் பல ஏதுக்கள் கொண்டே காண வேண்டியுள்ளது. இந்த இடைக்கு இன்னல் வருமெனவும் அஞ்சாமல் இவ்வளவு சுமையை இவள்மீது வைக்கின்றனரே என இரங்கி நின்றனராம் அவர்கள்.

''பல்லியல் நெறியில் பார்க்கும்
பரம்பொருளென்ன யார்க்கும்
இல்லை உண்டு என்ன நின்ற
இடையினுக்கு இடுக்கண் செய்தார்''

பிறகு புக்ககமாகிய அயோத்தியில் உள்ள பெண்மணிகளும், சீதையின் இடையைப்பற்றி இப்படித்தான் செப்பி வந்தார்கள். புக்ககமென்ன பிறந்தகமென்ன அயல்நாட்டிலும் சீதையின் இடைச் சிறுமையைப்பற்றிச் சிந்தனைதான். ஈழநாட்டில் இலங்காபுரத்தில் தன் அண்ணனுக்குத் தான் தேடிவந்த பெண்ணின் அழகைக்கூறும் ஒரு பேரிடைப் பெருமகள், ''மேகத்துமின்'' என்ற சிற்றிடையினள் அவள் என்றனள். பின்னுமவள் சொல்லினள், பேதைப் பருவத்தில் பெண்களுக்கெல்லாம் இடை பெரியதுதான், அது பெதும்பைப் பருவத்தில் தான் சிறுக்கத் தொடங்குகின்றது. யான் சுட்டும் சீதையின் இடையோ பேதையாகும் முதற் பருவத்திலேயே மின்னை வென்று சின்னத் தனத்தில் சிறந்ததாயிற்று என்றனள் ''மேகத்து மின்னை முன்னேவென்ற சிற்றிடை'' என்றனள் அவளும். இப்படி யார் பார்த்தாலும் குறைகூற குறைகூறக் கேட்டு உள்ளம் வருந்திய ஏக்கத்தால் அவ்விடை நாளுக்கு நாள் நைந்தே போயிற்றாம்.

இவ்வளவு உடல் மெலிவுள்ள ஒண்டொடி பேசாமல் இருந்த இடத்தில் இருக்கலாமல்லவா? என்ன வேண்டினுங் கொண்டு வர இளவல் இருக்கின்றார். அதைவிட்டு அந்த அம்மை சாலையை விட்டுச் சோலைக்கு வந்தனளாம். எதற்காக? மலர் பறிக்க. பறித்தனரா? பறித்தனர் மலரை, மலராலே. சீதையின் திருக்கரங்கள் காந்தள் மலரே யென்ன நிற்பன. அவரது முழங்கையோடு பொருந்திய அந்த அங்கையாகிய காந்தள்மலர் ஒருவர் பறிக்கும் மலரா? இல்லையது கொய்யா மலர்தான். அந்த கொய்யாமலரால்தான் கொய்யும்மலர்களைக் கொய்ய வந்தனள் வெளியிலே.

''பொய்யாம்என ஓது புறஞ்சொலினால்
நையா இடைநோவ நடந்தனளால்
வைதேகிதன் வால்வளை அங்கை யெனும்
கொய்யா மலரால் மலர்கொய் துறுவாள்''

R. RAJU.
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## சீதையார் பேதையாரானுர் :

களங்கமான எதிர்காலத்தை உடையவர்களுக்குக் கனவு பலபல தோன்றுமாம். அவை எவையும் ஒன்ருேடொன்று பொருந்தாத உருவங்களாக வருமாம். அப்படி கனவு காண்பதைப் போலவே அந்த மானேக் கண்டனளாம் வைதேகி. அது அவர் ஒருக்காலும் பட்டறியாத பாட்டைப் படுமாறு உறுவதைக் காட்டுவது போலுளதாம்.

''உண்டாகிய கேடுடையார் துயில்வாய்
எண்தானும் இயைந்து இயையா உருவம்
கண்டார் எனலாம் வகை கண்டனரால்
பண்டு ஆரும்உறு இடர்ப்பாடு உறுவாள்''

ஊதுகுழல் காற்ருடி கத்துபொம்மை சிற்றுடுக்கை கைவண்டு செய்குதிரை முதலிய விளேயாட்டுப் பொருள்களேக் கண்களேக் கவரத்தக்க வண்ணங்கள் தீட்டிக் கொண்டு வருவார்கள், எடுப்புக் கடைக்காரர்கள் விழாக் காலங்களிலே. அவர்கள் குழந்தைகளுள்ள இடமாகத் தேடி வருவார்கள். அக் குழந்தைகளேப் பெற்றவரோ அவருக்கு அத்தையரோ கூட இருக்கக் கண்டு விட்டால் வியாபாரிக்குக் கொண்டாட்டந்தான். அவர்கள் குழந்தைகள் கண்ணிற் படக் காதிற்படத் தங்கள் சரக்குகளேக் காட்டுவார்கள் ஆட்டுவார்கள் ஊதுவார்கள் குறுக்கு நெடுக்காகப் போதுவார்கள். குழந்தைகள் காணவேண்டும், பெரியவர்களேத் தொந்தரவு செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களின் குறிக்கோள். இங்கு மானுக வந்த மாரீசன் கனக மானேக் காணச் சனகன் மான் வரவில்லேயே எனத் தான் ஏங்கி நின்றனன். இது இவனது மாயா வியாபாரம். இவனது பரம்பரைகள் தானே இந்தப் பொம்மை வியாபாரிகள். அல்லது இவர்கள் பரம்பரை அக் காலத்திலுமிருந்து அவர்கள்பால்தான் மாரீசன் கற்றனனே தெரியவில்லே.

மானுருவை வெளிக்காட்டி மறைந்து வரும் மாரீசன், சானகியார் முன் வந்தான் தகதகத்து நின்றுவிட்டான். கண் கவரும் விண் பரவும் கதிர் வீசும் பொன்னிற மான். அதன், அந்தமிலாப் பேரழகில் ஆழ்ந்து விட்டார் சானகியார். இது, சொக்கத் தங்கம் மிக்க வொளி பக்கமெலாம் பாய்கதிர்கள், மருட்சி மிகு பார்வை, வனேந்தனேய திருவுருவம், தெருட்சி மிகுந்த குரல் சீதைமனம் சிக்கியது. பதை பதைத்தாள். அது நமது பக்கம் வர வில்லேயே என. சாலேக்கு உள்புகுவேன் என் தலேவனிடம் சாற்றிடுவேன், என்று பதை பதைத்தாள். ஏகி மனேயுட் புகுந்தாள். நன்று, வெற்றி என வருகை நாடி நின்ருன் மாரீசன்.

''நெற்றிப் பிறையாள் முனம் நின்றிடலும்
முற்றிப் பொழி காதலின் முந்துறுவாள்
பற்றித் தருகென்ப னெனப் பதையா
வெற்றிச் சிலேயான் முனம் மேவினளால்''

—மா. வ. 218.

கணவனுக்கு முன்சென்ருள் கைதொழுதாள், கவர்ச்சியுற, மனம் நிறைந்த காட்சியெல்லாம் வகுத்துரைக்கப் பதைபதைத்தாள். கதிர் வீசும் பொன்னுருவம், கால் செவி வால் மாணிக்கம். என்ன அழகு? அதனே எடுத்துரைப்பதெப்படி நான். வாருங்கள் முன்றிலுக்கு வந்ததனேப் பாருங்கள் என்று துடிதுடித்தாள். என்னவென்ருன் இராமபிரான். வாடிவிடச் செய்து நம்மை, ஓடிவிடும் வாருங்கள். நாம் கோடி கொடுத்தாலும் கூடாத மான் என்ருள்.

ஆணிப் பொனி னுயது, ஆய் கதிரால்
சேணிற் சுடர்கின்றது, திண் செவிகால்
மாணிக்க மயத் தொரு மான்உளதால்,
காணத்தகு மென்றனள் கை தொழுவாள்''

பின்னும் சானகி, வந்து பாருங்களேன். இது போல ஒரு மானே நான் எங்குமே பார்த்ததுமில்லே கேட்டதுமில்லே. எந்த உலகத்திலும் இது போல இருக்காது என்றனள். இராமன் அப்படியா இந்த மானேப் பெற்ற மான்கள் இல்லாமல் இது எப்படி பிறந்து வளர்ந்திருக்கும். அப்படி அம்மையும் அப்பனும் இல்லாத மான் என்ருல், இது ஒரு செய்மானு மெய் மானு என்று எண்ணவில்லே. சானகி இதுவரை எதையுங் கண்டு இப்படி அதிசயித்தவளல்லள். என்றுமே ஆட்டத்திலுங் கூட்டத்திலுஞ் சேர அஞ்சுபவள் மிஞ்சுபவளல்லள். சொல்லாதவள் சொல்வதினுலே அது இல்லாதனவாக இருக்க வழியில்லே. சென்றுதான் பார்க்கலாமே எனச் சிந்தித்தனன் செம்மான்.

''இம்மான் இந்நிலத்தினி லிலேயெனு
எம்மானி துளனு சிறிது எண்ணல் செயான்
செம்மா னவள் சொற்கொடு தேமலரோன்
அம்மானும் அருத்தி யதாயி னனுல்''

மேற்சொன்னபடி ஐயப்படவேண்டிய ஒரு செயலே ஐயமின்றி விரும்புகின்ற இராமபிரானும் ஒரு எளியவல்லன். அவன் பேரறிவாளன். மலரவனுக்கும் வழிவகுக்க வல்லவன். ஆயினும் சீதை கூறிய மானேப் பார்க்கச் சிந்தை ஒருப்படுகின்றனன். இராமபிரான் கருத்து இளவலுக்கு ஒத்துவரவில்லே. முதல்வன் கருத்துக்கு முரணுக நிற்பதும் முறைமையல்ல. முறையல்லதான் தீங்கு வருமெனத் தெள்ளத் தெளிவதனேத் தெரிவிக்காமல் பின்னர் வருந்துவதா? எனவும் எண்ண வேண்டி வருகிறது. மெல்ல லரு சொல்லேச் சொல்லினன் இன்ப அன்பினனுகிய இளவல். உடலோ பொன், மற்ற உறுப்புகளோ மாணிக்கம் என்ருல் இப்படி ஒரு பிறவியா எனச் சிறிது ஐயமுறுகின்றேன், என்றனன்.

''காயம்கனகம் மணி கால் செவி வால்
பாயும் உருவோடு இதுபண்பு எனலால்
மாயம் எனல் அன்றி மனக் கொளல்?
ஏயும் இறை ஐயுறவு என்ற அளவே (22)

இராமன் செல்வச் சிறுவனே. பிறவிப் பெருக்கத்தின் வருக்கங்களே மிகத் தெளிந்தவர்களாலுந் தெரியமுடியாது. அவை கோடானுகோடி

உலகெங்கணும் பரந்து நிறைந்து உள்ளவற்றை ஓரிடத்தில் நின்று அறிவதெப்படி? இவ்வுலகில் இல்லாததொன் றென்று இசைத்து விடுதல் எளிதல்ல என்று இதமாக வுரைத்தனர்.

நில்லா வுலகின் நிலை நேர்மையினல்,
வல்லாரு முணர்ந்திலர் மன்னுயிர்தாம்
பல்லாயிர கோடி பரந்துளதால்,
இல்லாதன வில்லை யிளங்குமரா''

மேலும் இராமன்இ ளையவனுக்கு, உலகத்துப் பிறவிப் பெருக்கத்திற்கு ஒருமுறையோ முடிவோ காணுவது எளிதல்ல. பொன் மயமான அன்னங்கள் ஏழு பிறந்து வாழ்ந்துளதெனப் பெரியவர் உரைப்பர். நாம் கண்டனவல்ல. அதனுல் இல்லாததென இயம்பலாகுமா? என்றெல்லாம் இதம்பட இசைத்தனன், தம்பியின் உள்ளத்தை ஒருப்படுத்த. இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருத்தலைச் சானகியார் சற்றும் பொறுக்கவில்லை. ஆனுல், அவருக்கு இவர்களை மறுக்க முடியவில்லை. இப்படிப் பேசும்வரை மான் நிற்குமா, ஓடி மறைந்துவிடுமே எனப் பெரிதும் வருந்தினுள்.

முறையும் முடிவும்இலை மொய் உயிரென்று
இறைவன் இளையானெடு இயம்பினனுல்
பறையுந்துணை அன்னது பன்னெறிபோய்
மறையும் என ஏழை வருந்தினளால்

மனைவியின் வருத்தத்தைப் பார்த்த மரகத மலைபோன்ற மன்னவன், எங்கே அந்த மானைக் காட்டுக எனப் புறப்பட்டனன். எப்பொழுது எழுந்திருப்பர் என எதிர்பார்த்திருக்கும் சீதையா சிறிது தங்குவள்? இதோ வாருங்கள் காட்டுகின்றேன், பாருங்கள் எனக் கூறிக் கொண்டு முன் சென்றனள். அண்ணல் அவள் பின்னே செல்லலுற்றனன். தகாததைத் தக்க தென எண்ணிச் செல்லுகின்றனரே என்ன விளையுமோ என வருந்தி, மனம் பொறுக்க முடியாத தம்பி, இருவருக்கும் பின்னே சென்றனன். அந்த மானே மிகு நுண்ணறிவாளராலும் தடுத்துக் கொள்ளாமல் வரும் வினையைப்போல வெளியே நின்றது.

அனையவள் கருத்தை உன்னி அஞ்சனக் குன்றம் அன்னுன்
புனையிழை காட்டு கென்று போயினன் பொருத சிந்தைக்
கனைகழல் தம்பி பின்பு சென்றனன் கடக்க ஒண்ணு
வினையென வந்துநின்ற மான்எதிர் விழித்த தன்றே''

சீதாதேவி இன்னுஞ் சின்னஞ்சிறுமியாகவே யிருக்கின்றுள். அவருக்குக் கொஞ்சங்கூட விளையாட்டுத் தனம் போகவே இல்லை. அன்று காட்டை நோக்கிப் புறப்பட்ட நேரத்தில் இப்படித்தான் அமைச்சனை அழ வைத்தாள், இப்பொழுது மைத்துனனை மாழ்க வைக்கின்றுள். அயோத்தியிலிருந்து காட்டை நோக்கிக் கால்வழி கொண்டார்கள் தம்பியும் அண்ணனும் இந்தத் தையலுமாக. நாடாளப் பிறந்த மக்கள் நடந்தா போகிறதென நைந்துருகினன் சுமந்திரன். அவன் ஒரு தேரைக் கொண்டு வந்து இதில் ஏறிக் கொள்ளுங்கள் எனக் கெஞ்சினுன். ஏறினுர்கள் நாட்டைக் கடந்து காட்டைக் கண்டார்கள். அண்ணல் அந்த அன்புள்ள அமைச்சனுந் தேர்ப்பாகனுமான சுமந்திரனைத் திரும்பிப் போகுமாறு பணித்தனர். அவனுக்குக் கட்டளையைக் கடக்கவும் வழியில்லை, விட்டுப் போகவும் விருப்பமில்லை. விதியில்லை எனத் திரும்புகின்றுன் அந்த வித்தகன். அவன் இந்தத் தேவியைப் பார்த்துச் செய்தி யாதேனும் உண்டோ என வணங்கி வேண்டினன். இப்பெருமாட்டி, ஐய எனது அத்தையருக்கும் அரசர் பெருமானுக்கும் எனது வணக்கங்களைச் சொல்லுங்கள், இதோ பாருங்கள். எங்கள் தங்கைமார்களுக்கு யான் வளர்த்து வந்த கிளிகளையும் மற்ற பட்சிகளையும் மறவாமல் பால்பழந் தந்து வளர்த்து வரச் சொல்லுங்கள் என்றனள். அச்சொல் அமைச்சர் முதல்வனை அழ வைத்துவிட்டது. இராமபிரான் எவ்வளவு தேற்றவும் அவ்வன்பன் தேம்பித் தேம்பியழுதனன்.

அப்படிச் சுமந்திரன் அழுகைக்குக் காரணமென்ன? அரண்மனைக்குள்ளே அரசர்பெருமான் ஆபத்தான நிலையில் அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றுன். அரசமாதேவிகள் மூவருமே மஞ்சளும் மலரும் நிலைக்குமா என மன்ருடுகின்றுர்கள். அரசப் பெரு மனை ஆளுநரின்றி அழகற்று கிடக்கின்றது. இந்நேரத்தில் இந்தச் செல்விக்குக் கிளிப்பிள்ளைகளின் மேல் கருத்து ஓடுகின்றதே, இந்தச் சிறுபிள்ளைத்தனமகலாத செல்வியைக் காட்டில் விட்டு நான் நாட்டிற்குத் திரும்புகின்றேனே, என்ற ஆக்கம்தான் அமைச்சர் பெருமானை அழச்செய்துவிட்டது.

''போர்வலான் தடுக்கவும் பொருமி யேங்கினுன்
சோர்விலாள் அறிவிலாத் துயர்க்குச்சோர்கின்றுன்''

இதுதானு இந்த மிதிலைப் பிள்ளை வளர்க்கும் கிளிப்பிள்ளை? மேலொரு இடத்திலுந் தான் தலைகாட்டுகின்றது. இச் செல்விக்கு அல்லல் மேல் அல்லல் அரக்கன் கொடுஞ்சிறை. அரக்கன் பதட்டம் அரக்கிகள் மிரட்டல். தாம் உயிர்விடத் துணிந்த நாள் உயர்நிலைத் துக்கம். அந்த நேரத்தில் உதவிக்கு வந்த அனுமன் அடையாளச் சொல்கேட்டனன். இந்த அம்மைக்கு என்ன நினைவு வந்தது, அந்தக் கிளிப்பிள்ளை நினைவுதான். அனுமனே ஐயனுக்குச் சொல்லுங்கள் யான் ஒரு கிளிப்பிள்ளை வளர்த்தேன். அதற்கு என்ன பெயரிடலாமெனக் கேட்டேன். எனது தலைவன் தனது சிறியதாய் கைகேயின் பெயர் இடு என்றனன். இதை அடையாளமாகச் சொல்லுங்கள் என்றனள். இப்படி எங்கும் கிளிப்பிள்ளை நினைவாக இருக்கின்ற நேரிழைக்கு ஒரு மான்குட்டி கிடைத்துவிட்டால், அதிலும் ஒரு பொன் மானுனல், மாணிக்கப் புள்ளிமானுனல், இவளுக்கு வேறு நினைப்புமா வரும்? நாடுபோனுலும் நகரம் போனுலும் நாதன் போனுலும் போதன் போனுலும் மானிருந்தால் போதும் என்ற மனந் தானே வரும். இதில் என்ன வியப்பு? களிப்புடன் வெளிப்பட்டார் மானைக் காட்ட.

இந்தப் பாழான மாரீசனுல் ஒரு பெருங் கீழ்மைத் தனம் வந்தது. மரபு நெறி மாறி விட்டது. இவர்கள் வசித்து வந்தது ஒரு ஓலைச்சாலையானுலும், அது புனிதமான இல்லம். இது பரமபதமா பக்தர்கள் மனமா அருமறை யகமா ஆலிலைப் பள்ளியா என வியக்கத் தக்க பெருமைக்குரிய சாலையது. அதற்கொரு சிறுமை வந்து சேர்ந்தது. மாநகரத்திலிருந்து கானகத்தை நோக்கிப் புறப்பட்டபொழுது, இலக்குவனுர் காவலராக முன்னே வந்தார். இராமபிரான் அவர் பின்னே வரச் சானகியார் அவர் பின்னேயாகப் புறப்பட்டனர்.

சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை யிளையவன் முன்செலக்
காரை யொத்தவன் போம்படிக் கண்டவவ்
வூரையுற்ற துணர்த் தவும் வேண்டுமோ ?

இந்த மரபு இப்பொழுது மாறிவிட்டது. மானைக் காட்டத் திருமகள் முன்னதாக வெளிவந்து விட்டனள். பின்னே இராமன், கடைசி யாகக் காவல் இளவல். ''காவல் தானே பாவையர்க்கழகு'' மாறிவிட்டது. அது ஆவல் தானே பாவையர்க்கழகு என்று திரும்பி நிற் கின்றது. காக்கப்படும் பொருள் கடைத் தெரு விற்கு வந்தாயிற்று, காவலர்கள் பின்னே நடைத் திறத்தில் நிற்கின்ருர்கள். இவை யாரும் அறியாத தனியிடச் செயலாக விருக்க வில்லை. மானமானை வஞ்சிக்க வந்த மாரீசன் பார்வையில், அவனை ஈடாக வைத்து இமைக் காமல் பின்னிற்கின்ற இராவணன் பார்வை யிலே இயலுகின்றது. இந்த மரபுமாற்றம். தேவியார் காந்தமாக இறைவரிவரும் இருப்புச் சிலைகளாக ஈர்க்கப்பெற்று இன்று இவர்களிரு வரும் வெளிவருகின்ருர்கள், இன்று வெளிவந்த இருவீரரும் இனி என்று அச் சாலையில் புகுதரப் போகின்றனர்? சீதையார் பேதையராகித் தேடிய பெருமை இதுதான். என்ன செய்வது. யாரை நோவது?

தன்னை நோக்கிய மானை நோக்கினுன் தலை மகன் இராமன். அதன் அழகில் ஈடுபட்ட னன். இளைவலை நோக்கி இது என்ன அழகு பார் என்றனன். இது படர்ந்து அடர்ந்த புள்ளை ஒத்த பசும்பொன்நிறம், மணிமயமான உறுப்புகள் தான். இதன் பற்கள் ஆணி முத்துக் களை அனையனவே. மின்னலும் தோற்கும் ஒளியென்றெல்லாம் புகழ்ந்துரைத்தனன். அண்ணலின் சொற்கள் ஒன்றும் இளவல் உள் ளத்திற்கு ஒத்தனவாகவில்லை. நல்லது அழகி யதுதான், பொன்னே தான். பார்த்தாயிற்று திரும்பலாம், இது மெய்ம்மையதல்ல சிறந்த குணத்தல்ல எனக் கருதுகின்றேன் என்றனன் இளவல்.

ஆரியன் அனையகூற அன்னவன் தன்னைநோக்கிச்
சீரியது அன்றிது என்று சிந்தையில் தெளிந்த தம்பி
காரிய மென்னை ஈண்டுக் கண்டது கனகமானுல்
வேரியந் தெரியல் வீரமீள்வதே மேன்மையென்ருன்

இப்படி இளவல் கூறியது சானகியின் உள்ளத் தைத் தடுமாறச் செய்தது. சானகி, இராம பிரானைப் பார்த்து, இதை நீங்கள் எவ்வகை யிலும் பற்றித் தரல் வேண்டும். நமது நகரம் புகுந்த பின்னர் இதை விளையாட்டிற்குரிய தாகக் கொள்ள உதவும் என்றனள். அவள் மொழி கேட்ட ஐயனும் அப்படிச் செய்ய ஒப்புவன் என அறிந்தனன் தெளிவுடைய தம்பி. இது அரக்கரால் அனுப்பப்பட்டுச் சதிசெய்ய வந்ததொரு மானெனக் கருதுகின்றேன். இது மிக வஞ்சகமுள்ளது. இதனை விரும்புதல் முறையல்ல, இதன்மேல் வரும் விருப்பம் பின்னர் வெறுப்பிற்குரியதாகும் என்றனன்.

''இராமன் மாயமா? அப்படியிருந்தால் அழிந்தொழிகின்றது. அல்லவேல் பிடித்துக் கொள்ளுவோம். அரக்கர் திட்டமா, அரக் கரை யழிப்பதுதானே நமது விருப்பம், எப் படியோ நமது விருப்பம் வெற்றிபெறுகின்றது என்றனன் ஏந்தல். இதனை அனுப்பிப் பின்னர் பதுங்கியிருப்பவர் யாவர்? இதனுல் அவர்கள் அடைய விரும்புவது என்ன? எதன்மேல் குறி வைத்து இதனை அனுப்பியுள்ளார்கள்? இந்தத் தங்கமானைத்தந்து அவர்கள் பெற விரும்பும் பொருள் இதைவிடப் பெருமதிப்புள்ளதாகத் தானே யிருக்கும்? இத்தனையும் கருதவேண் டாமா? தெளிவற்ற வேலையில் இறங்குவது நன்றல்ல என்பது மூதுரையல்லவா? ஆதலால் இந்த மானை விரும்புவதுந் தொடருவதும் நல்லதல்ல என்றனன் மலைவற்ற நம்பி இலக்கு வன்.

## பிரிவற்றவரைப் பேதை பிரித்தனள் :

இலக்குவன், அண்ணலே! அரக்கரை யழி பதும் அந்தணருக்கு அபயந் தந்ததும் மானைப் பிடிப்பதுந்தானே? யான் செய்கின்றேன். எதையும் எண்ணிச் செய்ய வேண்டும். அமைதி படச் செய்ய வேண்டுமல்லவா? மூன்றையுஞ் செய்ய யான் முந்துகின்றேன். இம் மானுக்குப் பின்னவராக அசுரர் நின்ருல் அவர்களைக் கொன்று ஒழிக்கின்றேன். அன்றேல் மானைப் பற்றி வருகின்றேன் என்றனன்.

அடுத்தவும் எண்ணிச் செய்தல் அண்ணலே அமைதி யன்ருே?
விடுத்திதன் பின்னுர்கள் பலருளரெனினும் வில்லால்
தொடுத்தவெம் பகழி ஏவித் தொடர்ந்தனன் விரைந்து சென்று
படுக்குவன் அதுவன்ருயிற் பற்றினென் கொணர் வேன் என்ருன்''

தொடர்ந்து பத்தாண்டுகளுக்கும் மேலாகக் காட்டில் உற்றது முதல் தங்களுக்கு வேண்டு வன எல்லாம் தேடித் தந்த பக்திப் பணி யாளனை, இராமனுக்கு வாய்ப்பினுல் இணையில் துணைவனை, இன்று இந்த மான் பிடிக்கும் வேலைக்கு நம்பவில்லை அந்த நாயகன்தேவி. அன்னநடை பவளவாய் கிளிமொழிச் சீதைக்கு வந்தது சின்னஞ்சிறிய அழுகை. அப்பாவை அப்பா! என்றழைப்பதும், அம்மாவை அம்மா! என்று அழைப்பதும், மாமாவை மாமியை மாமா மாமீ என்றெல்லாம் முறையாளரை அம்முறையையே அழைப்பாக வைத்து விளிப் பதும் வழக்கந்தான். ஆனுல் மனைவியை மனைவி யே என்றழைக்கும் கணவனெருவனையும்,

கணவனைக் கணவவோ என்றழைத்த மனைவி ஒருத்தியையும், இந்த மண்ணுலகில் காண்ப தில்லை. இந்தச் சீதையென்னும் மேதகு மனைவியும் அப்படித்தான் இருந்து வந்தனர். இந்தப் பொன்மான் செய்தளித்த புதுப்பாட மாகத் தனது கணவனது முறைப்பெயரையே யிட்டு 'நாயகா' என அழைக்கலாயினள் சீதை. தேவி தழுதழுத்த மழலைமொழியினுல் துன்ப அவிநயத்தால் இந்த மானை உன்னையே பற்றித் தருமாறு வேண்டினேன், ''நாயக நீயே பற்றி நல்கலை போலும்''. மாற்றுப் பெயரால் மான் பிடிக்கவா, இது ஆகிறவேலையா எனக் கூறி அழுமுகமுஞ் சிந்தையுமாகக் கண்ணீர் மல்க மல்கச் சாலையில் புகுந்தனள் சானகி.

''ஆயிடை அன்னம் அன்னுள் அமுதுகுத்தனைய செய்ய
வாயிடை மழலை யின்சொற் கிளியினிற் குழறி மாழ்கி
நாயக நீயே பற்றி நல்கலை போலுமென்னு
சேயரிக் குவளை முத்தஞ் சிந்துபு சிதறிப் போனுள்''

இராமபிரான் இங்கு என்னதான் செய்வது. இது நல்ல மானல்ல, இது வேண்டாம், மாற்ற வரைக் கொல்ல வேண்டும், மானைப் பிடிக்க வேண்டும் என்பதே முடிவா? அப்படியானுல் அந்த வேலையை யான் செய்யலாமல்லவா? செய்து வருகின்றனன் இருங்கள் என்கின்ற னன் இளையவன். இதற்கு நேரான மாறுதல் நங்கை நல்லாள் கருத்து. எதிருக்கெதிராகப் பார்க்கின்ருேம். தங்கந் தகதகக்கின்றது இது நல்ல மானல்லாவாம், நம்பாதவர் பிடிக்கப் போனுல் நாசமாகத்தான் போகுமது. மானைப் பிடிக்கப் போகிறவர் வலையைத் தேடலாம், அல்லது பசும் புல்லைத் தேடலாம். புல்லைக் காட்டினுல் அது பல்லைக் காட்டிக் கொண்டு பக்கத்திலே வரும் பிடித்துக் கொள்ளலாம், அதையெல்லாம் விட்டுவிட்டு வில்லைக் காட்டி மருட்டப் புறப்பட்டால் இல்லை என்றுதான் அருத்தம். அந்த இளையவராவது பிடித்துத் தருவதாவது. அதைப் பார்த்தவுடனே பொய் பொய் யென்பவர் மெய்யாக மருட்டி ஓட்டி விடுவார். தெரியுமா? அதனுல் நீயே பிடித்துத் தரவேண்டும் என்கின்றனள் நேரிழை.

''துணைவன் கணவன், சகோதரன் தோழன்'' என்ற பொருளுடையது. இங்கே இராமபிரானுக்குச் சீதை துணைவி, இலக்குவன் துணைவன், இந்தச் சீதை துணைவியானது, வில்லை வளைக்க வைத்துக் கடும் வேலையை வாங்கி வல்லவன் என்றபின் வந்தது துணைவியார். இலக்குவனர் அப்படியல்லர். பிறந்த பொழுதி லிருந்து தாய்ப்பாலுண்ட பொழுதிலிருந்து ஒட்டியுறையும் விட்டகலாத் துணை. இரு வேறு கொள்கையுள்ள இடத்தில் ஒருபோதும் ஒரு உத்தமன் இருக்க இயலாது. துணைவனே அது பொய் மான் என்கிருன், துணைவியோ அது மெய்மெய் என்கின்ருள். மெய்யாகப் பிடித்து வருகின்றேனே என ஒரு புடைபெயர்ந்து வருகின் ருன் பழந்துணைவன், அது கூடாது. அவர் போனுல் பொன்மான் மண்மானுகிவிடும், நீயே போக வேண்டுமென்கின்ருள் புதுத் துணைவியாக வந்த நேரிழை. எப்படி இராம னுக்குற்ற இன்னல்.

இராமபிரானுக்கு இருவர் கேண்மையை யும் சீர்தூக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இவளோ புதியவள் தெளிவற்றவள், அவனே பழையவன் தெளிவுற்றவன். இவளைச் சொல்லிச் சரிசெய்ய முடியாது. அவன் கருத்து என்னவாயினும் சொல்லைத் தட்டாத துணை வன். இனி இவளொடு பேசிப் பயனில்லை, அவ னேடுதான் ஆவது உரைக்க வேண்டும் என எண்ணினன் அண்ணல். இராமபிரான் இளவலை நோக்கி இந்த மானை நானே பற்றி வருகின் றேன், விரைவாக வருகின்றேன், வீட்டில் வளர்க்கும் மயிலுக்குக் கட்டுப்பாடுண்டு, வளர்ப்பவர் வெளியில் விட்டால்தான் இடம் கிடைத்தபொழுது ஆடும், காட்டு மயில் தனக்கு இட்டமானபோதெல்லாம் ஆடும், இவளென்ன மோ இன்று காட்டு மயில் போலிருக்கின்ருள். நீ இங்கு இவளைக் காத்தளிப்பாயாக வருகின் றேன் என்றனன்.

''போனவள் புலவி நோக்கிப் புரவலன் பொலங் கொள்தாராய்
மானிது நானே பற்றி வல்லையில் வருவன் அன்றே
கானியல் மயில் அன்னுளைக் காத்தனை யிருத்தி யென்னு
வேனகு சரமும் வில்லும் வாங்கினன் விரைய லுற்ருன்''

அண்ணலின் இவ்வாணையைக் கேட்ட இளவல் இருகை கூப்பி வணங்கினன். சென்று நல மாகத் திரும்பு வீராக என்றனன். எனக்கொரு ஐயம். இம்மான் முன்னே கவுசிக முனிவரர் யாகத்தில் வந்து உங்கள் அம்படி பட்டுக் கடலில் ஒளித்து உயிர் தப்பி ஓடிய மாரீசனே தான். செல்லுமிடத்தில் இவ்வுண்மையை அறிவீர்கள் என எண்ணுகின்றேன் எனக் கூறி வழிவிட்டுச் சாலையின் வெளிநின்று தேவிக்குக் காவல் புரிந்தனன்.

''முன்னமும் மகவாய்வந்த மூவரில்ஒருவன்போனுன்;
அன்ன மாரீச னென்றே அயிர்த்தனன் இவனைஐய;
இன்னமும் காண்டி வாழி யேகென இருகை கூப்பிப்
பொன்னனுள் புகுந்த சாலை காத்தனன் புறத்தில் நின்றே''

மான்செய்த மாயையில் மயங்கினள் சானகி, சானகி செய்த ஊடலில் மயங்கினன் மணுளன். இந்தப் பின்னவன் மொழி முன்னவன் கன் னத்தோடு நின்றுவிட்டது, அது கருத்திற் புக வேயில்லை. இளவல்சொல் மந்திரம் ஒத்தது. மந்திரமென்ருல் முக்காலத்திற்கும் உறுதி பயப்பது. உண்மைப் பொருளை உடையது. இராமன் உன்னிப் பார்த்தாலல்லவோ உயர்ந் தது தெரியப் போகின்றது. உன்னுவதற்கு இராமன்பால் உள்ளமில்லை. அவன் உள்ளத் தைச் சந்திரன் அனைய முகத்தினளாகிய சானகியின் கோபமுந் தாபமும் முருக்குஞ் திருப்பும் கொள்ளை கொண்டுவிட்டன. எப்படி யாவது மானைக் கொண்டுவந்து கொடுத்துச் சனகபுரத்துச் செல்வி முகத்தைத் திருத்த வேண்டும் என்னுஞ் சிந்தனையிற் செல்லுகின்ற னன் இராமன்.

''மந்திரத் திளையோன் சொன்ன வாய்மொழி
மனத்திற்கொள்ளான்
சந்திரற் குவமைசான்ற வதனத்தள் சலத்தை
நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய்முறுவலன் சிகரச்செவ்வி
சுந்தரத் தோளினுன் அம்மானினைத் தொடரலுற்
ருன்''

ஐயன் தொடர்ந்த அம்மான் மெல்லென நடந்தும், மருண்டு விழித்தும் செவியை நிமிர்த்தும் தரைமிசை நடந்துந் தாவிக் குதித்தும் ஆடல்கள் பலசெய்து ஐயனை அகலக் கொண்டு சென்றது. பின்னர் அது ஓடத் தொடங்கிற்று. உலகத்தில் மிகு விரைவிற்கு வாயுவேகம், அதற்கு மேற்பட்டது மனோ வேகம் என்பர், உள்ளபடிக் காற்றைவிட பல மடங்கு விரைவு மனத்திற்கு உண்டு. அந்த மனம் மேலும் விரைவாக ஓடக் கற்க வேண்டு மானுல் இந்த மாரீச மானிடந்தான் கற்க முடியுமாம், அப்படி ஓடிற்ரும் அந்தப் பொய் மான். ''உதித்தெழும் ஊதை உள்ளம் என்றிவை உருவச் செல்லும் கதிக்கொரு கல்வி வேறே காட்டிய தொத்ததன்றே''. தான் அடியோடு அப்புறப்பட்டு விட்டால் இராமன் ஊக்கங்குறைந்து திரும்பி விடுவனேயென நினைந்து ஓட்டத்தினுல் அயர்ந்து விட்டது போல் தங்கியும், கைக்கெட்டும் அளவில் நின்றும், தொடவருங்கால் தாவிக் குதித்தும் அண்ணலை மிக நெடுந்தூரம் அகலக் கொண்டு போய் விட்டனன் மானுக வந்த அந்த மாரீசன். ஏந்தலுக்கு இது மானல்ல என்ற எண்ணம் வந்தது. அவ்வெண்ணத்தை அரக்கன் அறிந்து கொண்டனன். இனி இராமன் நம்மைப் பிடிக்க எண்ணுன், இவன் அடிக்கத் தான் எண்ணுவன் எனத் தப்பியோடக் கருதி வானத்தில் தாவினுன். இராமன் தனது வில்லை வாங்கி ஒரு கணையைத் தொடுத்தனன், இவன் எங்கு சென்ருலும் அழித்து வருக எனக் கூறி. அக்கணை அவன் நெஞ்சத்தில் தப்பாமல் பாய்ந்தது. அவ்வஞ்சக நெஞ்சந் துளையுற்ற அப்பொழுதும் ஒரு புது வஞ்சனையைக் கருதி இராமன் குரல் கொடுத்து இளையவனை அழைத்து வீழ்ந்து இறந்தனன். அவன் ஆவி அழிந்து விழுந்தபொழுது மாயை யாலான மானுருவமொழிந்து, தனது பண்டை அரக்க உருவொடு வீழ்ந்தனன். அவன் உண்மையுருவத்தைக் கண்ட இராமன் தனது தம்பியின் முன்னுணர்விற்காகத் தம்பியைப் பெரிதும் வாழ்த்தினுன்.

''வெய்யவன்றன் உருவொடு வீழ்தலும்
செய்ய தன்றெனச் செப்பிய தம்பியை
ஐயன் வல்லன் என்ஆருயிர் வல்லன்யான்
உய்ய வந்தவன் வல்லன் என்றுன்னினுன்''

மன்னன் இச்சின்னத் தனமுடைய மாரீசன் தன் குரலை என்குரல் போலக் காட்டித் தம்பீ தம்பீ என்றழைத்தனனே, இவன் தம்பி யார்? சுவாகு. அவன்தான் முன்னமே வெம்பி வீழ்ந்தழிந்தனனே. இவன் அவன் தம்பியை அழைக்க என்குரல் போலத் தன்குரலை மாற்றி ஒலிப்பானேன். இதுவும் ஒரு வஞ்சனைச் செயல் தான். இக்குரலைக் கேட்டவுடன் அங்கே சானகி துன்புறுவளே என்ன செய்வதென எண்ணினன். பின்னர் முன்னமே இவன் மாயையைத் தெரிந்துரைத்த தம்பி யிருக்கின்ருன், பயமில்லை அவன் தேற்றிவிடுவன் எனத் தேறினன். ஆயினும் சாலை சென்றடைவோம் என விரைந்தனன் வேந்தன்.

## சீதையார் பேதைமை வாதனை தந்தது :

உருவத்திற்கும் ஓசைக்கும் உள்ளத்தைப் பறிகொடுப்பது பேரகத்துப் பெண்களுக்குப் பெருமையைத் தராது. உள்ளதைச் சொல்லுவோன் மெல்லச் சொல்லுவன். இல்லதைச் சொல்பவன் இடிபோல் முழங்குவன். மாய மான் உருவினுல் வந்த மயக்கத்தினுல் இணை பிரியாப் பெருந்துணைவரைப் பிரித்தனர். பாதகனின் பேதக்கூக்குரல் சீதையின், பேதமைக் குணத்தைப் பெரிதாக்கிவிட்டது. அலறினள் துடித்தனள் அழுது புரண்டனள், பேதையான் நாதனைப் பிரித்தேன் என்றனள்.

சாலைமுன்னின்ற தகைசால் இலக்குவன் அண்ணல் குரல்போல் அழைத்ததைக் கேட்டனன். அண்ணல் சரத்தால் அடியுண்டு வீழ்ந்தனன் மாரீசன். அவன் மாயக் குரலிது, அழிந்தவன் மாயையை அறிந்த எம் ஐயன் வருமெனத் தம்பி வழி பார்க்கின்றனன்.

அரக்கனை மான் என நம்பிய அண்ணியார், அவன் குரலினை நாயகன் குரல் என நம்பினள், பேசத் துணிந்தனள். அவர் எப்படிக் கதறுகிருர். தம்பீ தம்பீயென அழைப்பதுமா காதில் விழவில்லை. பதருமல் கதருமல் ஆடாமல் அசையாமல் இப்படி நிற்பது சரிதானு? என இரைந்து கூறினள்.

''குற்றம் வீந்த குணத்தின் எம்கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையால்
நிற்றியோ இளையோய் ஒரு நீ யென்ருன்''

மாயையால் பின்னும் பெருமயக்குற்ற சீதைத் தனது வாயால் ''கோமகன் இற்று வீழ்ந்தனன் எனக் கூசாமல் கூறுகின்றனள்''. அண்ணியர் கூசாது கூறிய அந்த கொடுஞ் சொல்லைத் தன் வாயால் கூற இளவலுக்கு வரவில்லை. இளவல் கூறுகிருர், நீங்கள் சொல்லியபடி முடியும் கால முளதேல் அப்பொழுது நாமெல்லாம் இங்கிருக்க மாட்டோம், மூன்று லோகமும் முறைமாறி நிலைமாறி ஒழிந்து போகும், முனிவரோ தேவரோ யாவரும் இலராவர். இன்னும் என்ன யான் கூறுவது. மாய மானுக வந்த மாரீசனை நெடுந்தூரந் துரத்திச் சென்ற முதல்வன் உண்மையறிந்து அவனை அழித்தொழித்திருக்க, இறந்து வீழும் அவன் என்னையும் உங்கள் காவலில் நின்றும் பிரிக்க இப்படி மாற்ருேசை இட்டு அழைக்கின்றனன் என உணர்கின்றேன், உண்மை யிதுவே. ஒன்றும் எண்ண வேண்டாம் என உறுதியுரைத்தனன் இளவல்.

''பரக்க என்பகர்வது? பகழிப்பண் ணவன்
துரக்க அங்கதுபடத் தொலைந்து சோர்கின்ற
அரக்கன் அவ்வுரை யெடுத்து அரற்றினன் அதற்கு
இரக்கமுற்று இரங்கலிர் இருத்திர் ஈண்டு என்றான்''

இப்படி அங்கு நடந்த உண்மையை உடனிருந்து ஒப்ப ஓதுகின்றனன் இளவல். இற்றைய நிலையில் இளவல் சொல் எங்கே ஏற்கப் போகிறது? பேதைமையில் பேர்பெற்ற சீதையாம் பெருமகள் ஒரு சிறிதும் நம்பவில்லை. முன்னமே கோபக் கனல் பறந்தது. இப்பொழுது அது பெருந்தீயாகப் பெருகிவிட்டது. இளவல் தனக்கொரு ஆறுதலைச் சொல்லுகின்றனன் எனவும் நினைக்கவில்லை. கொடுஞ் சொற்களைச் சொல்லித் தன்னைக் கொன்றுவிட்டதாகவே குறிக்கின்றாள். உள்ளம் கொதிக்கின்றது. அக் கொதித்த குழம்பு வாய்வழியாக வழிகின்றது. அது எரிமலை வெள்ளம்போல் எல்லா நல்ல உள்ளங்களிலும் பட்டுப்பட்டுப் பதைக்கச் செய்கின்றது. இலக்குவப் பெருந்தகையின் உறக்கமற்ற, இராப்பகலாகப் பத்தாண்டு செய்த தொண்டுகள் அனைத்தையும் பாழாக்கி விட்டது அம்மனக் கொதிப்பு.

சனகப் பேரரசன் ஒரு பெரும் இல்லத் துறவி. சனகனில்லம் எப்பொழுதுந் துறவிகள் இல்லமாகவே இலங்கும். குழந்தைப் பருவத்திலிருந்து அச்சான்றோர்பால் சார்ந்து வளர்ந்த தகுதிக்கு உரியவள் சீதை. புகுந்த இடந்தான் என்ன? புண்ணியவான்களுக்குப் பஞ்சமா! வதிட்டமாமுனிவரன் கற்புக் கனியான அருந்ததியுடன் அமர்ந்துறையும் அகம். இவ்வளவு பெருமையும் அனுபவ அருமையும் ஒரு அரைக் காசிற்கும் உதவாமல் போயிற்று அன்று. ஒரு பேரில்லப் பெருமகள் வடிவும் பொல்லாததாய் மனமும் பொல்லாததாய் வாசகமும் பொல்லாததாகவா மாறும்? அன்றந்த அம்மை இலக்குவனைத் தனது மகனுக்கொப்ப நடந்து வரும் மாசற்ற மாமணியைச் சொன்ன சொல்லை எப்படி இசைப்பது? ஏந்திழையிளவலை நோக்கி நேருக்கு நேராக உனதண்ணன் அங்கே பகைவர்பால் சிக்கிப் பாழான செய்தி தெரிந்தும், அப்படி அல்ல என எனக்கு ஆறுதல் உரைத்துக் கொண்டு நிற்கின்றனை, இது ஒரு நல்லொழுக்க முள்ளவன் செய்யுஞ் செயலே அல்ல. நல்லவர்கள் நல்லவருடன் ஒரே ஒருநாள் பழகினலும் இருவரும் ஒருவரென மதிக்கப் பெறுவர். அவர் உயிருக்கு உயிரையும் உதவுவர். அங்கே உடன்பிறந்த அண்ணனுக்கு இத்தனை யாண்டுகள் பெருமையொடு பழகிய பெரிய செம்மலுக்கு அழிவே வந்தது என அறிந்தும் உனக்குச் சிறிதும் அழுகையும் வரவில்லை, அச்சமும் வரவில்லை. ஒரு சிறு துடிப்பும் உன்பால் இல்லை. இந்த இரக்கமற்ற நிலை என்ன நினைப்பொடு எப்படி வந்ததோ தெரியவில்லை. எனது கணவனே யில்லை. இனி எனக்கு என்ன வேலை? எரிகின்ற காட்டுத் தீயில் வீழ்ந்து இறப்பதுதான் எனது முடிவு என்றனள்.

''என்றவ னியம்பலும் எடுத்த சீற்றத்தள்
கொன்றன்ன இன்னலள் கொதிக்கும் உள்ளத்தள்
நின்ற நின்னிலை யிதுநெறியிற்று அன்றென
வன்தறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள்''

''ஒருபகல் பழகினர் உயிரை ஈவரால்
பெருமகன் உலைவுறுபெற்றி கேட்டும்நீ
வெருவலை நின்றனை, வேறென்? யான்இனி
எரியிடை வீழ்ந் துயிர் இறப்பலென''

இப்படிக் கொடுஞ் சொற்கள் பற்பல சொல்லியதோடு அமையாமல், காட்டெரியை நோக்கி ஓடலுற்றாள் அக்காரிகையாள். குறைவொன்று மின்றி நிறைகின்ற சிந்தையனுகிய நயமிகு இலக்குவன் செயத்தகும் செயலென்? அழுதோடி அண்ணியார் எதிரில் நிலம் படப் படிந்து வீழ்ந்து தடுத்து நிறுத்தித் தனக்குள்ள துன்பங்களைச் சொல்லலுற்றனன்.

—(தொடரும்....)

---

# முருகன் பெருமை

**நூல்வெளியீட்டு விழா :**

நமது ''திருக்கோயில்'' திங்கள் இதழில், முருகனைப்பற்றி வெளிவந்துள்ள கட்டுரைகள் பலவற்றுள் ஒருசிலவற்றை, முதல் தொகுதியாகத் தொகுத்து நூல் வடிவில் அச்சிட்டு, திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் சார்பில் வெளியிடப்பட்டது. வெளியீட்டுவிழா, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுப்பிரமணியம், I.A.S., அவர்கள் தலைமையில், 29-10-77 அன்று நிகழ்ந்தது. நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள், நூலை வெளியிட்டு வழங்கினர்கள். இவ்வெளியீட்டு விழாவில் சென்னைத் துணை ஆணையர் திரு. ஆர். அர்ச்சுனன், B.A., அவர்களும், தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி, M.A., அவர்களும் கலந்து கொண்டனர்.

''முருகன் பெருமை'' என்னும் இந்நூலின் கட்டுரைகளை எழுதித் தொகுத்தளித்த, ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., அவர்களுக்கு, நமது ஆணையர் அவர்கள், பட்டாடை போர்த்துச் சிறப்புச் செய்தார்கள். துணை ஆணையர் திரு. ஆர். அர்ச்சுனன் அவர்கள், மாலை அணிவித்தார்கள். உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி திரு. எஸ். சோமசுந்தரம், B.A., B.L., அவர்கள், ஆசிரியருக்குத் திருத்தணிகை முருகனின் திருநீறு குங்குமப் பிரசாதங்கள் வழங்கி, நன்றியும் பாராட்டுதலும் தெரிவித்தார்கள்.

இந்நூலைப் பெற விரும்புவர் ''திரு. எஸ். சோமசுந்தரம், B.A., B.L., உதவி ஆணையர்-நிர்வாக அதிகாரி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணிகை-631 209-''என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2.50.

---

# தொல்காப்பியம் விளக்கும் சமய தத்துவ ஞானக் கருத்துக்கள்



ந. ரா. முருகவேள், M.A., M.O.L

## முன்னுரை :

நமது தமிழ் மொழியிலுள்ள நூல்கள் அனைத்திலும், மிக மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்தது தொல்காப்பியமே யாகும். இதன் காலம் சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர்கள் உடன்பட்டுள்ளனர். (*) இத்தகைய பழம் பெரும் தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலேயே, சமய தத்துவக் கருத்துக்கள் விரவிக் காணப் படுகின்றன.

''தொல்காப்பியம் என்னும் பழமை மிக்க இலக்கண நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கணக் குறியீட்டுச் சொற்கள், வாழ்க்கை இயலின் இலக்கணத்தை, விளக்குவதற்குத் தேவையான தத்துவக் குறியீட்டுச் சொற்களுடன் கலந்த நிலையில் ஒன்றுபட்டுத் திகழ்கின்றன. தமிழ் இலக்கணத்தில் கூறப்படுகின்ற எழுத்துக்கள் சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவற்றின் இடத்தில், அவைகளுக்கு ஒப்புமையுடைய தெய்விகத் தத்துவச் சொற்களை மாற்றி அமைத்தால், தொல்காப்பிய விதிகள் அல்லது நூற்பாக்கள், தமிழ் மொழியின் அமைப்பியலை விளக்குவது மட்டுமின்றி, மக்களின் வாழ்க்கையினையும் விவரித்து விளக்குவனவாகத் திகழ்வதைக் காணலாம். இவ்வுண்மை, தொல்காப்பியத்தினை மேல் நோக்காக ஒரு சிறிது காண்போர்க்கும் கூடத் தெற்றென விளங்கும்''. (†)

(*) "As regards the age of Tholkappiam, I have investigated almost all the divergent views expressed by notable scholars and concluded that its composition could not have taken place later than 2,500 B.C. That this assignment of a Tamil work to so high an antiquity may not be deemed extravagant, when this is compared with the age of 4,500 B.C., ascribed to the Rig Veda by such eminent oriental scholars and historians as Prof. Hermann Jacobi, Bal Gangadhar Tilak and Dr. Bloomfield."

—Maraimalai Adigal.

(†) " Even a cursory glance of that ancient grammar Tholkappiam, will convince that the grammatical terminology employed in it are the identical philosophical terminology necessary for dealing with the grammar of the phenomena of life. If in space of the alphabet, words and sentences, treated in the grammar, their corresponding mystic equivalents in philosophy are substituted, the Sutras or the rules of Tholkappiam expound the phenomena of life instead of the phenomena of the Tamil language."

—P. V. Manickam Naicker, B.E., (*The Tamil Alphabet, Its Mystic Aspect*).

## உயிர், மெய் :

*(1)* ஆசிரியர் தொலகாப்பியர், தமிழிலக்கணத்தில் எழுத்துக்களுக்குப் பெயரமைத்திருக்கும் முறையே, தமிழ் மக்களின் நுண்மாண் நுழைபுலத்தினை நுனித்துணர்த்த வல்லதாயுள்ளது. தாமே தனித்தியங்கவல்ல எழுத்துக்களுக்கு உயிர் என்றும், உயிரோடு கூடியல்லது இயங்கலாற்றாத எழுத்துக்களுக்கு 'மெய்' என்றும், உவமை ஆகுபெயராற் காரணம் பற்றிச் சமய தத்துவக் கருத்தின் அடிப்படையில் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் தலைசிறந்த தத்துவ ஞானத்தினை இப்பெயர்கள் தக்குற விளக்குகின்றன. (*)

*(2)* இப்பெயர்களின் குறிப்புகளுக்கு முன்னொடுபின் சிறிதும் முரணாமலே, தமிழில் எழுத்திலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது. க்ருபை, த்யானம் என்னும் வடசொற்களைப் போல, மெய்யெழுத்துக்கள் தமிழில் மொழி முதற்கண் வருவதில்லை.

''உயிர் மெய் யல்லன
மொழி முதலாகா''

என்பது தொல்காப்பியச் சூத்திரம். சொற்களில் மெய்யெழுத்துக்கள் முதலாக வருதல் கூடாது என்னும் வரையறை, அழிந்துபடும் இயல்பிற்றாகிய உடம்பின் இழிதகவையும், அழியா இயல்பிற்றாகிய உயிரின் மேம்பாட்டினையும் உணர்த்தும் வகையில், அறிவிற்குப் பொருத்தமானதாகச் செய்யப்பட்டிருப்பதொன்றாகும்.

*(3)* ''உயிர்மெய் எழுத்துக்களுள், உயிர் எழுத்துக்கள் பின்னும், மெய் எழுத்துக்கள் முன்னும் ஒலிக்கும்'' என்பது இலக்கணம். உயிரின் அறிவும் இயல்பும் அது சாரும் உடம்பிற்கு ஏற்பவே அமையும். ஓர் ஆளில் அல்லது உயிர்ப் பொருளில், உடம்பு உயிர் என இரு பொருள்கள் கலந்திருப்பினும், காண்பார்க்கு உடம்பே முற்பட்டுத் தோன்றும். அதன் பின்னரே அதற்குள் உயிர் இருப்பது அறியப்படும்.

(*) "Tamil grammarians designate vowels by a beautiful metaphor, as Uyir or life of a word, consonants as Mey or the body ; and the junction of a vowel and a consonant as Uyirmey or an animated body."

—Rev. Dr. Robert Caldwell.

அதுபோல உயிர்மெய் எழுத்திலும் மெய்யெழுத்தே முன் ஒலிக்கும் ; அதன் பின்னரே உயிர் ஒலிக்கும். இவ்வுண்மையினை,

''மெய்யின் வழியது
உயிர் தோன்றும் நிலையே''

என்று இலக்கண நூலார் வகுத்துரைத்தனர். இந்நூற்பா இலக்கண நூற் கருத்தும், தத்துவ நூற்பொருளும் ஒருங்கமையச் சிறந்து விளங்கும் திறம், பெரிதும் போற்றுதற்குரியது. எல்லா மொழிகளிலும் மெய்யும் உயிருமாய் வரும் எழுத்துக்கள் இணைந்தே ஒலிக்கும். இதனை மேலைநாட்டார் கூர்ந்து நோக்காத காரணத்தால், உயிர்மெய்க்குத் தனி வடிவம் வகுக்காமல், மெய்யையும் உயிரையும் அடுத்தடுத்து வெவ்வேருக எழுதுவாராயினர். இஃது ஒரு வகையில் எளிதாயினும், தமிழ் இலக்கண நூலாரின் மெய்ப்பொருள் உணர்ச்சித் திறத்தின் சிறப்பு, ஏனையோர்க்கு வாய்த்திலதுஎன்பதனைப் புலப்படுத்தும்.

(4) உயிர்மெய்யெழுத்து, தன்னுடன்கூடிய உயிரானது புணர்ச்சியின்கண் நீங்கியபோது, தன் புள்ளி வடிவு பெறும் என்னும் இலக்கணக் கருத்து,

''மெய் உயிர் நீங்கில்
தன் உரு ஆகும்''

என வரும் நூற் பாவால் உணர்த்தப் பெறும். இதன்கண் ''உடம்பை விட்டு உயிர் நீங்கி விடுமாயின், அங்ஙனம் உடலாகிய சிறையினின்று விடுபட்ட உயிரானது, தனக்குரிய முழு நிறைவான இயல்புகளை எய்தி நிற்கும்'' என்னும் தத்துவஞான நூற் பொருளும் கொள்ளுதற்கு இடனுள்ளது.

(5) புள்ளியீற்றுச் சொற்களின்முன் உயிர் தனித்து நடவாது; தான் தனித்து நின்ற அவ்வியல்பினைக் கெடுத்து, அப்புள்ளியொடு கூடும் என்பது,

''புள்ளியீற்று முன் உயிர் தனித்து இயலாது
மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே''

என்னும் இந் நூற்பாவின் பொருள். இதற்கே, ''உயிர் தனது வினைப்பயன்களை நுகர உடலின் சேர்க்கையை அடையும்; உடலின் சேர்க்கையின்றி வினைப்பயன்களை உயிர் தானே தனித்து நின்று நுகரப் பெருது'' என்னும் தத்துவ நூற் பொருளும் கொள்ளலாம். இவ்வுண்மையினை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனுர் தமது மணிமேகலையில், ''வினையின் வந்தது'', ''வினைக்கு விளைவாயது'' என்றும்; பட்டினத்து அடிகள் ''வினைப்போகமே ஒரு தேகங் கண்டாய், வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்'' என்றும் பாடித் தெளிவுறுத்தியிருத்தல் சிந்திக்கத் தக்கது.

(6) உயிரீறு நிலைமொழியாய் நிற்க, அதன் முன் உயிர் முதற் சொல்வரின், அவ்விரண்டு உயிர்கட்கும் இடையே உடம்படுமெய் வரப்பெறும். மணி அழகு மணியழகு என்புழியும், சே அடி சேவடி என்புழியும், முறையே யகர வகர உடம்படு மெய்கள் வரப்பெறுதல் காணலாம்.

''எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்''

என்பது இதற்குரிய நூற்பா. உயிரும் உயிரும் தம்முள் ஒன்று சேரமாட்டா. ஆதலின் அவற்றிற்குப் பற்றுக்கோடாக ஓர் உடல் இன்றியமையாது வேண்டப்படும். உயிர் சேர்தற்கு உடல் இன்றியமையாதது ; ஓர் உடலைப் பற்றி நின்றே உயிரானது இயங்கும் என்னும் தத்துவ நூற் பொருளும், இலக்கணச் செய்திகளுடன் இந் நூற்பாவிற் கொள்ளப்படக் கிடக்கின்றது.

(7) உயிர்மெய்யாவன, மெய்களோடு உயிர் எய்தலால் பிறந்த எழுத்துக்கள் ஆகும். உயிரையுடைய மெய், உயிர் மெய்யாகும். இதனை 'உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்து' என்று உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கருதுவது தவறு. ஆயினும் அவ் உயிர் மெய்கள், அவ்வியைபின் கண்ணே உயிரும் மெய்யுமாகிய இவ்விரண்டும் அல்லாத வேருேர் எழுத்தாய் நிற்கும். இங்ஙனம் பன்னீருயிரும் பதினெட்டு மெய்யுடன்கூடி உயிர்மெய்யாய் நின்றனவாயினும், தம் அளவும் குறியும் எண்ணும் திரிந்து நில்லா. இதனை,

''மெய்யொடு இயையினும்
உயிரியல் திரியா''

என்னும் தொல்காப்பிய நூற்பா சுட்டுகின்றது. இதன்கண், ''உயிரானது உடம்போடு கூடி நிற்பினும், அவ்வுயிரின் இயல்பும் உடம்பின் இயல்பும் ஒன்ருக மாட்டா. உயிரின் இயல்பு, உடம்பினது இயல்பினின்று வேறுபட்டுத் தனித்தே நிற்கும்'' என்று வேருெரு பொருளும் புலப்படுதல் காணலாம்.

(8) நிலைமொழி ஈறு மெய்யாய் நிற்க, வருமொழியின் முதல் உயிராய் இருக்குமாயின், நிலைமொழி ஈற்றின் மெய்யின்மீது வருமொழி முதலின் உயிரானது ஏறி, இரண்டும் ஒன்று சேர்ந்து உயிர்மெய்யாகி நிற்கும். சிவன் அருள் என்னும் இரு சொற்களும் ஒன்ருகப் புணருங்கால், சிவனருள் எனப் புணர்தல் காணலாம். இதற்குரிய விதி,

''உடல்மேல் உயிர் வந்து
ஒன்றுவது இயல்பே''

என்னும் நூற்பாவாகும். இவ்விலக்கண நூற்பாவின் கண்ணேயே, ''உருவமாய் அறிவிலதாய் அழியும் இயல்பினதாகிய உடலின் மீது, அருவமாய் அறிவுடையதாய் அழியா இயல்புடையதாகிய உயிரானது வினைவயத்தால் புணர்ந்து ஒன்ருய் நிற்கும்'' என்னும் உயரிய தத்துவப் பொருளும் ஒருங்கே அமைந்திருத்தல் உணர்ந்து இன்புறுதற்குரியது.

**அகரம் :**

*(9)* தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில், மொழி மரபியலில் உயிர் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் ஆகிய எல்லா எழுத்துக்களும் ஒலிக்கப்படுதற்கு, அகரமாகிய முதல் எழுத்தின் துணையும் கலப்பும் இன்றியமையாததாகும் என்னும் உண்மையினை விளக்கும் நிலையில், "**மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்**" எனவரும் நூற்பாவிற்கு, 'இறைவன் இயங்கு திணைக் கண்ணும், நிலைத்திணைக் கண்ணும், பிற வற்றின் கண்ணும், அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற் போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னும் குறளால், 'அகர மாகிய முதலையுடையன எழுத்துக்களெல்லாம் ; அதுபோல இறைவனாகிய முதலையுடையது உலகம்' என வள்ளுவர் கூறியவாற்றாலும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக் கூறியவாற்றாலும் பிற நூல்களாலும் உணர்க'' என நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் விளக்கவுரை, இங்கு நாம் அறிந்து இன்புறற்பாலது.

**திணைகள் :**

*(10)* தமிழ் மொழியின் எழுத்துக்களைத் தத்துவ அடிப்படையில், உயிர் எழுத்து மெய்யெழுத்து என்று பிரித்துப் பெயர் வழங்கினாற் போலவே, உலகியற் பொருள்களையும் உயிர்களையும் கூடத் தத்துவ அடிப்படையிலேயே உயர்திணை அஃறிணை எனப் பாகுபாடு செய்து, தமிழ்ச் சான்றோர்கள் வழங்கியிருக்கின்றனர்.(*)

> ''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை என்மனார் அவர்அல பிறவே
> ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே''

எனவரும் தொல்காப்பிய நூற்பா, மக்கள் வேறு—மக்கட் சுட்டு வேறு எனப் பாகுபாடு செய்து, 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அதுவே மக்கட் சுட்டாகும்' என்று வரையறைப் படுத்தி விளக்கியிருக்கும் நுட்பம், பெரிதும் போற்றற்பாலது.

> ''தக்கஇன்ன தகாதன இன்ன வென்று
> ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
> மக்களும் விலங்கே; மநு வின்நெறி
> புக்கவேல், அவ் விலங்கும் புத்தேளிரே''
> —கம்பர்

எனவரும் சிறந்த நல்ல பாடல், இந்நூற்பாவின் பொருளையே அடிப்படையாகக் கொண்டு அமைவதாயிற்று. உடம்பு ஒன்றே பற்றியன்றிப் பண்பும் உணர்வும் பற்றியே, மக்கள் அல்லது மாக்கள் என்பது துணியப்படும் என்றதனால், தொல்காப்பிய நூலின் சமய தத்துவ அடிப்படை தெற்றென விளங்கும்.

**வினைக் கொள்கை :**

*(11)* இவ்வாறே, ஆசிரியர் தொல்காப்பியர் வினைச்சொல் குறித்து வகுத்துள்ள இலக்கணமும் பெரிதும் வியந்து போற்றற்பாலதாக இருக்கின்றது. சொற்கள், பெயர்—வினை—இடை— உரி என நான்கு வகைப்படும். ஆயினும் இவற்றுள் பெயரும் வினையுமே மிகவும் முதன்மை வாய்ந்தவை. பெயர்ச் சொல்லின் அடியாக வினைச்சொற்களும், வினைச் சொல்லின் அடியாகப் பெயர்ச் சொற்களும், தம்முள் ஏற்ற பெற்றி தோன்றும். வினைச் சொற்களுக்கும் பெயர்ச் சொற்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை,

> ''வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''

எனத் தொல்காப்பியம் விளக்குகின்றது. இதன்படி, முருகனை–முருகனால்–முருகனுக்கு என்றாற் போலப் பெயர்ச் சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏற்றுவரும். ஆனால் வினைச் சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்று வருவதில்லை. வந்தான்—வருகின்றான்—வருவான் என்றாற் போல வினைச்சொற்கள் காலம் காட்டிவரும். பெயர்ச் சொற்கள், காலம் காட்டும் இயல்புடையன அல்ல. எனவே, வினைச் சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏலாமல், காலம் காட்டி வரும் இயல்புடையன என்பது, இந்நூற்பாவின் திரண்ட பொருள்.

இனி, இதனைக் கூர்ந்து நோக்கின், வேறு ஒரு சிறந்த பொருளும் இதன்கண் அமைந்திருத்தல் காணலாம். நாம் செய்யும் ஒவ்வொரு செயற்கும் அதற்குரிய பயன் திண்ணமாக உண்டு. நற்செயல் புரிவோர் அதற்குரிய பயனாகிய நன்மையையும், தீச்செயல் புரிவோர் அதற்குரிய பயனாகிய தீமையையும் அடைந்தே தீருவர். ''வினை எனும் சொல் செயலையும், அதன் பயனையும், அப்பயனைத் தரும் தெய்வத்தையும் முறையே குறிக்கும். அவரவர் செயலுக்கு ஏற்பப் பயன்களை எய்துவிக்கும் பால் வரை தெய்வமானது (சொல்—57), வினைப் பயன்களை எய்துவிக்குங்கால், செல்வர், வறியர், கற்றார், கல்லார், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பன போன்ற வேற்றுமைகளைச் சிறிதும் கருதுவதில்லை. வினைப்பயன் வினைசெய்தோரை அடைந்தே தீரும். ஆயினும் வினைப்பயன்கள் ஒரு போழ்தத்தேயோ உடனடியாகவோ அன்றி, அவ்வவற்றிற்குரிய காலங்களிலேயே முறைப்படி வந்தெய்தும் . . .''(*) எனப் பிறிதொரு சிறந்த தத்துவ நூற்பொருளும் இந்நூற்பாவின் கண் அமைந்து விளங்குதல் காணலாம்.

(*) "The classification of nouns in Tamil is decidedly more philosophical ; for the difference between rational beings and beings or things which are destitute of reason is more momentous and essential than any difference that exists between the sexes . . . The peculiar Dravidian law of gender which has now been described would appear to be a result of progressive intellectual and grammatical cultivation . . ."

—Rev. Dr. Robert Caldwell.

"We think it very inconvenient, and even hardly fair, that. in learning French and German, we are called upon to burden ourselves with arbitrary and unpractical distinctions of grammatical gender."

—Otto Jespersen,
(*The Philosophy of Grammar*).

(*) "The Philosophic meaning of the Sutra is distinct. The Karma does not transform with transmigration of souls but remains intact and lies dormant waiting for the proper time according as the Karma is Akamiya or Prarathva or Samchitha."

—P.V. Manickam Naicker.

**வழிபாடு :**

(12) உணவும் நீரும் காற்றும் நீராடலும் மருந்தருந்தலும் உடல்வாழ்விற்குப் பல வகை நலங்களை விளைவித்தலைப் போல, நமது உயிர் வாழ்விற்கு **"வழிபாடு"** மிகப் பெரிதும் இன்றியமையாததாகப் பெரு நலங்களைப் புரிகின்றது. அதுபற்றியே, இற்றைக்குச் சற்றேறத் தாழ ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே,

> "வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
> பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
> பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே"

என்ற நூற்பாவில், ஆசிரியர் தொல்காப்பியர் வழிபாடு பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலக மக்களாயினர் ஒவ்வொருவர்க்கும் வழிபாடு மிக மிக இன்றியமையாததொன்று என்பார் **"வழிபடு"** என்றும்; அது மனிதரையோ பிறபிற பொருள்களையோ பற்றி நிகழாமல், ஒப்புயர்வற்ற தெய்வத்தைக் குறித்தே நிகழ்த்தப்படுதல் வேண்டும் என்பார் **"தெய்வம்"** என்றும்; வழிபடுவோரை வழிபடப்பெறும் தெய்வம் காத்தருள்தல் திண்ணம் என்பார் "நிற்புறம் **காப்ப**" என்றும்; வழிபாட்டின் பயனாக எல்லா வகையான எத்தகைய விழுமிய செல்வங்களையும் எய்தப் பெறுதல் இயலும் என்பார் **"பழிதீர் செல்வமொடு"** என்றும்; "மூவேழ் சுற்றம் முரண்உறு நரகிடை ஆழா மேஅருள் அரசே போற்றி" என மணிமொழியார் பாடியதற்கு ஏற்ப, வழிபடுவோர் மட்டுமேயன்றி, அவர் தம் வழிவழியாக வரும் உற்றார் உறவினரும் கூட, வழிபாட்டின் பயனைச் சிறப்புற்றுப் பொலிந்து இன்புற்று வாழ்வார்கள் என்பார் **"வழிவழிச்** சிறந்து பொலிமின்" என்றும், நுண்ணிதின் எண்ணியுணரும்படி ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்வாராயினர்.

(13) ஆசிரியர் தொல்காப்பியர், தொல்பியப் பொருளதிகாரத்தில் பொருள்களை முதற் பொருள், கருப்பொருள் உரிப்பொருள் என மூன்றுகப் பகுத்தார். அவற்றுள் நிலத்தையும் காலத்தையும் 'முதற்பொருள்' எனக் குறித்தார். நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்காகப் பகுத்து, அவற்றிற்கு முறையே மாயோன் (திருமால்), சேயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன், சிவன்), வருணன் என்னும் தெய்வங்களைக் குறித்தார். தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமைபற்றி, முதற் பொருளாகிய நிலத்தைக் கூறவந்த இடத்திலேயே கருப்பொருளாகிய தெய்வ வழிபாட்டையும் சேர்த்து இயைத்தே தொல்காப்பியர் கூறியருளியுள்ளார். காலத் தெய்வம், பால்வரை தெய்வம் முதலிய வேறு பிற கடவுளரையும் கூட, அவர் குறிப்பிட்டருளியிருத்தல் காணலாம். (தொல் சொல்—58).

**அறுவகை வாழ்த்து :**

(14) இனி பொருளதிகாரப் புறத்திணையியலினுள் 81ஆம் சூத்திரத்தில் 'அமரர்கள் முடியும் அறுவகையானும்' என்றமையால், வானவர் உட்பட ஆறு வகையினரை வாழ்த்துதல் பண்டைய மரபாக இருந்தது. அவர்கள் முறையே, வானவர் முனிவர் ஆனினம் மழை அரசன் உலகம் எனப்படுவர். இத்தொல்காப்பிய நூற்பாவை ஒட்டியே,

> "வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்;
> வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
> ஆழ்க தீயது; எல்லாம் அரன்நாமமே
> சூழ்க; வையக மும்துயர் தீர்கவே"

என்னும் திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடல் அமைந்திருக்கக் காண்கின்றோம்.

> கருகுகுழல் மடவார்
> கடிகுறிஞ்சி யதுபாடி,
> முருகன்னது பெருமைபகர்
> முதுகுன்று அடைவோமே"

எனவரும் சம்பந்தர் தேவாரப் பாடற் பகுதியும், ஈண்டு நினைவு கூர்ந்து மகிழத் தக்கது.

**கொடிநிலை, கந்தழி, வள்ளி :**

(15) பண்டைக் காலத் தமிழ் மக்கள் கடவுள் நம்பிக்கையும், கடவுள் வழிபாடும் உடையவர்களாக விளங்கியிருந்தனர். அவர்கள் முழு முதற் கடவுள் வழிபாடு செய்து போந்ததுடன், அவரொடு தொடர்பு படுத்தி, இயற்கைப் பொருள்களாகிய ஞாயிறு திங்கள் தீ என்பனவற்றையும் ஏற்றபெற்றி வழிபட்டு வந்தனர். இவ்வுண்மையினை,

> "கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

எனவரும் புறத்திணை இயல் 88ஆம் நூற்பாவினுல் அறியலாம். கொடி நிலை (ஞாயிறு), கந்தழி (தீ), வள்ளி (திங்கள், மழை) என்ற மூன்றும், கடவுள் வாழ்த்தோடு சேர்த்துக் கருதப்பெறும் நிலையில் பொருந்தி வரும் என இத் தொல்காப்பிய நூற்பாக் குறிப்பிடுகின்றது. இக்கருத்தினைத் தழுவியே சிலப்பதிகாரத்தில் 'ஞாயிறு போற்றுதும்', 'திங்களைப் போற்றுதும்', 'மாமழை போற்றுதும்' என்னும் வாழ்த்துக்கள் அமைந்தன எனலாம்.

இனி, இந்நூற்பாவுக்கே "கடவுள் வாழ்த்து, முதற்கண் அமையும். பின்னர் அதனை அடுத்துக் கொடிநிலை (வான் சிறப்பு), கந்தழி (நீத்தார் பெருமை), வள்ளி (அறன் வலியுறுத்தல்) என்னும் வடு நீங்கு சிறப்பின மூன்றும், கடவுள் வாழ்த்துடன் சேர்த்துக் கருதப்பெறும் நிலையில் வரப்பெறும்" என வேறொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். இங்ஙனம் பொருள் கொள்ளுதல் ஆசிரியர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் நூலின் அமைப்பிற்கு மிகவும் பொருந்தி நிற்கின்றது.

(16) தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழகத்திற் கோயில்கள் இருந்தன. "இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்" என வரும் எழுத்ததிகார நூற்பா, **"கோயில்"** என்னும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்திருத்தலால், இவ்வுண்மை செவ்விதின் உணரப்படும்.

அக்கோயில்களில் தெய்வத் திருவுருவங்கள் இருந்து வந்தன ; அவற்றிற்குப் பூசைகளும் விழாக்களும் நிகழ்ந்து வந்தன. அவைகள் முறைப்படி தவறாமல் நிகழ்த்தப் பெற்று வரு கின்றனவா? என்று, அரசர் அல்லது தலைவர் கள் கண்காணித்து அறப்புறங் காவல் புரிந்து வந்தனர். இவ்வுண்மை,

''மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே''

எனவரும் நூற்பாவில் ''படிமை (பிரதிமை, IDOL) ஆவது தேவர்க்கு ஒப்புமையாக நிலத் தின்கண் செய்தமைத்த தேவர் மேல் வந்தது. அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலியன'' என ஆசிரியர் இளம்பூரணர் விளக்கவுரை வரைந்திருத்தல், கடவுளரின் திருவுருவ வழிபாடு முதலியன, தொல்காப்பி யர்க்கு உடன்பாடேயாம் என்பதனை வலி யுறுத்தும்.

**விநாயகர் வழிபாடு :**

*(17)* இந்நாளில் சித்திரையை முதல மாத மாகக் கொண்டு, ஓர் ஆண்டின் மாதங்கள் கணிக் கப் பெற்று வருகின்றன. இங்ஙனமின்றி மிகப் பழங் காலத்தில் ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு, ஓர் ஆண்டின் மாதங்களைக் கணித்தல் அறிஞர்களின் வழக்கமாக இருந்து வந்தது. ஞாயிற்றுக்குரிய ஓரை சிங்கவோரை என்றும், அதற்குரிய திங்கள் ஆவணி யாதலின், ஆவணி தொடங்கி மாதங்களை எண்ணுதல் ஒரு முறை என்றும், பண்டையோர்கள் கொண்டிருந்தனர். இவ்வுண்மை, ''கால உரிமை எய்திய ஞாயிற் றுக்கு உரிய சிங்கவோரை (ஆவணி) முதலாகத், தண்மதிக்கு உரிய கற்கடகவோரை (ஆடி), ஈறாக வந்து முடியுந் துணையும், ஓர் யாண்டு ஆகும். ஆதலின், அதனை இம்முறையானே அறு வகைப்படுத்து இரண்டு திங்கள் ஒரு காலம் ஆக்கினர்'' என ஆசிரியர் நச்சினார்க்கினியர், **''காரும் மாலையும் முல்லை''** என வரும் தொல் காப்பிய நூற்பாவின் உரையிற் கூறியுள்ளது கொண்டு தெளியப்படும். இவ்வாறு ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு கணிக்கும் முறை, சுமார் 7,000 ஆண்டுகட்கு முன் தொடங்கி யிருத்தல் வேண்டும் என வான நூல் ஆராய்ச்சி வல்லார் கருதுகின்றனர்.

ஆவணி மாதம், ஆண்டின் முதல் மாத மாகக் கருதிக் கணிக்கப் பெற்று வந்த அப்பழங் காலம் முதலே, **விநாயகர்** வழிபாடும் தோன்றி நிலவி வரத் தலைப்பட்டிருத்தல் வேண்டும். விநாயக சதுர்த்தி விழா என்பது, இன்றும் ஆவணி மாதத்திலேயே கொண்டாடப் பெற்று வருதல், இங்குச் சிந்திக்கற்பாலது.

**அறுவகைச் சமயம் :**

*(18)* அம்மை வழிபாடு, விநாயகர் வழி பாடு, முருகன் வழிபாடு, சிவ வழிபாடு, திரு மால் வழிபாடு, கதிரவன் வழிபாடு என்னும் அறுவகை வணக்கம், பிற்காலத்திற் பேசப் பெற்ற அறுவகைச் சமயம் என்னும் வழக்கிற்கு அடிப்படையாக அமைவதாயிற்று. இந்த ஆறு வகைத் தெய்வங்கட்குப் பூசனை புரிவோரையே, **'' அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம் ''** எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டிருத்தல் கூடும். ''ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறு வகைத் தொழில்களைச் செய்பவர்கள்'' என் னும்' நச்சினார்க்கினியர் உரைக்கு வேறான புதிய நல்ல பொருள் இது எனலாம்.

**அட்டாங்க யோகம் :**

*(19)* இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பெற்றதாகிய தொல்காப்பியப் புறத்திணையியலின்கண் உள்ள வாகைத் திணைப் பிரிவில், **''நாலிரு வழக்கில் தாபதப் பக்கம்''** என ஒரு பகுதி கூறப்பட்டுள்ளது. அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், ''நாலிரு வழக்கில் தாபதப் பக்கமாவது, முக்காலமும் உணர்ந்த முனிவரர் அருளிய ஆகமத்தின் வழி நின்று, வீடு பெற முயல்வோருக்கு உரியவாகிய எண் வகை மார்க்கத்துத் தவம் புரியும் கூறு பாடு. இவ்வெட்டும் தவஞ் செய்வோருக்கு உரியன என்றும், தவஞ் செய்து யோகம் செய் வோருக்கு உரியன என்றும் இரு வகைப்படும். அவற்றுள் தவஞ் செய்வார்க்கு உரிய எட்டா வன ; ஊண் நசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என் பன. இவற்றிற்கு உணவிலும் நீரிலும் சென்ற மனத்தைத் தடுத்தல், ஐந்தீ நாப்பணும் நீர் நிலையிலும் நிற்றல், கடலும் காடும் மலையும் முதலியவற்றில் நிற்றல், தாமரையும் ஆம்பலும் ஆமையுமாகிய ஆசனத்திருத்தல், உண்டற் காலை உரையாடாமை, வாய்வாளாமை எனப் பொருள். இனி யோகஞ் செய்வோர்க்கு உரிய எட்டாவன ; இயமம், நியமம், ஆசனம், வளி நிலை (பிராணயாமம்), தொகை நிலை (பிரத்தி யாகாரம்), பொறை நிலை (தாரணை), நினைதல் (தியானம்), சமாதி என்பன'' என்று, மிகவும் விரிவாக விளக்கியுள்ளார். இதனால், தொல் காப்பியர் காலத்திற்கும் எத்துணையோ நூற் றுண்டுகளுக்கு முன்பே, தவஞ்செய்வோரும், தவஞ் செய்து யோகம் புரிவோரும், தமிழகத் தில் இருந்தனர் என்பது தெரிகின்றது. (*)

**முப்பொருள் :**

*(20)* இனி, தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் கல்வியிற் பிரிவு பற்றிய காலவரை யறையினை யுணர்த்துவது,

''வேண்டிய கல்வி
யாண்டுமூன்று இறவாது''

என்னும் தொல்காப்பிய நூற்பா, இதன்கண்

(*) "At the very dawn of Tamilian civilisation of which we catch a glimpse through the Tholkappaiam, the oldest Tamil work extant, we find the views about God, soul and matter and salvation to have become thoroughly sound and complete.

As our knowledge of these facts deepens, as our ideas about their relations expand, we find the Conclusions reached by our forefathers about their nature and relations daily receiving corroborations not only from the modern biological, geological and other scientific discoveries but also from the philosophical views worked out and held by such eminent thinkers as William James, Bergson, Lodge, Ward and others."

—Maraimalai Adigal.

உள்ள ''யாண்டு'' என்னும் சொல்லைக் காலப் பெயராகக் கொண்டு, ''கல்வியிற் பிரிவுக்குரிய காலம் மூன்றுயாண்டுகளைக் கடவாது'' என்று பொருள் கூறுவர் இளம்பூரணர். ஆனால் நச்சினர்க்கினியரோ, திருவள்ளுவர் சாந்துணையும் கற்குமாறு பணித்தலின், கல்வியிற் பிரிவுக்குக் காலவரையறை செய்தல், பொருந்தாது; கல்விக்குக் காலவரையறையில்லை எனக் கருதி 'ஆண்டு' எனப் பிரித்துக் 'கல்வியிற் பிரிவாகிய அவ்விடத்தே' எனப் பொருள் கொண்டு, அக் கல்வியெல்லாம் மூன்று பதத்தை அல்லது பொருளைக் கடவாது எனப் பொருள் விளக்குகின்றார். தலைவன் ஓதற்பிரிவின்கண் இறை—உயிர்—தளை (பதி—பசு—பாசம்; சித்து—அசித்து—ஈசுவரன்; சுகம்—சீவன்—பரம்; அது—நீ—ஆனாய்; தத்—துவம்—அசி) என்னும் முப்பொருள்களைப் பற்றிய தத்துவ ஆராய்ச்சியில் தலைப்படுவான் எனக் குறிப்பிடுகின்றார்.

''சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள; மறையெலாம் மொழிய நின்றன;
ஆன்ற தொல்பதி, ஆரு யிர்த்தொகை ;
வான்திகழ் தளைஎன வகுப்பர் அன்னவே''

—கந்தபுராணம்

**தவநெறி வாழ்க்கை :**

(21) இங்ஙனமே, முன்னர் இல்லறம் நிகழ்த்திய தலைவனும் தலைவியும், பின்னர் இறையருட் பேற்று முயற்சியில் தலைப்படும் திறம் இது என்று, பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் தெளிவுறக் கண்டுணர்ந்து வரையறை செய்திருந்தனர்.

''காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

என்பது தொல்காப்பியக் கற்பியற் சூத்திரம். ''காதல் அன்பால் துய்த்த காம இன்பம் நிறைந்து கடைக்கொண்ட வாழ்நாள் எல்லையின் நடுக்காலத்தே, தமக்குச் சார்பாய் அமைந்த தம் புதல்வரோடு கூடியிருந்து, தாம் அதுகாறும் செய்து போந்த அறத்தை இனித் தாம் செய்யலாகாமையின், தமக்காக அவ்வறத்தைச் செய்யும் சுற்றத்தாருடன் அமர்ந்து குடும்பத் தலைமகனும், தலைமகளும், சிறந்ததாகிய தவத்தில் தமது உணர்வினைப் பயிலச் செய்தல், தாம் அதுகாறும் செய்து போந்த காதல் மனை வாழ்க்கையின் பயனாகும்'' என்பது, இந்நூற் பாவின் பொருள். சமண பௌத்தர்களின் செயற்கை நெறித் துறவொழுக்கத்திற்கும், பண்டைத் தமிழ் மக்களின் பண்பட்ட இயற்கைத் தவநெறி வாழ்க்கைக்கும் உள்ள இடையீடு மிகப் பெரியதாதலை, இவ்வாற்றால் உணரலாம்.

இதனாலேயே, திருவெண்ணெய் நல்லூரில், சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப் பெற்ற சுந்தரர், திருத்துறையூரில், ''தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே'' என்று வேண்டிப் பெற்றனராயினும், பண்மயத்த மொழிப் பரவையாரையும், மான் திகழும் சங்கிலியாரையும் மணந்து கொண்டு, பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசில்,

''செல்வநல் ஒற்றி யூரன்
செய்யசங் கிலியால் ஆர்த்து,
மல்லலம் பரவை தன்கண்
மாழ்குற அமிழ்த்து மேனும்,
அல்லும்நன் பகலும் நீங்கா
தவன்மகி ழடியில் எய்தி,
நல்லஇன் படைந்திருப்பன்,
நம்பி ஆரூரன் தானே''

என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து போற்றிப் பாடும் நிலையில், வாழ்ந்திருந்த பான்மை, நுண்ணிதின் எண்ணியுணரற் பாலது.

**கடவுள் இலக்கணம் :**

(22) ஆசிரியர் தொல்காப்பியனார் இறைவனுக்குரிய இலக்கணத்தினை மிகச் சிறப்பாகவும் நுட்பமாகவும் விளக்குகின்றார். ''பிறவிகள் தோறும் சிறிது சிறிதாய் அறிவு விளங்கப் பெறும் சிற்றுயிர்கள் போலாது, இயல்பாகவே விளங்கப் பெறும் பேரறிவு உடையவனாகிய இறைவன் ஒருவன், இவ்வுயிர்களின் வேறாய் உள்ளனன் ; அவன் இயல்பாகவே விளங்கி மிளிரும் அறிவினனாய்த் திகழ்கின்றான். அதற்குக் காரணம், உயிர்களின் வினைக்கு ஏதுவாகிய மலத்தாற் பற்றப்படாமல், பெருந்தூய்மையும் நுட்பமும் மேன்மையும் உடையவனாய் அவன் இருத்தலேயாகும்'' என்று பற்பல கருத்துக்களும் தெற்றென விளங்க, ஆசிரியர் தொல்காப்பியனார்.

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்''

என்று அருளிச் செய்திருத்தல், நாம்நம்முடைய கருத்திற் பெரிதும் பதிக்கற்பாலது.

சிற்றுயிர்களும் இறைவனும் ஒன்றே என்றும், அற்றன்று சிற்றுயிர்கள் பொய், இறைவனே மெய்யென்றும்; அதுவும் அன்று இறைவன் ஒருவனே குடங்கள் தோறும் காணப்படும் திங்களின் சாயல்போல உடம்புகள் தோறும் உயிர்களாகக் காணப்படுகின்றனன் என்றும்; அதுவும் பொருந்தாது நெருப்பினின்று பொறிகள் தெறித்தாற் போல இறைவனிலிருந்தே சிற்றுயிர்கள் உண்டாயின என்றும்; அதுவும் பொருத்தமின்று ஒன்றுமில்லா வெறும் பாழே (சூனியமே) உயிரும் இறைவனுமாம் என்றும்; பிற்காலத்துச் சமயத்தார் பற்பலரும் இறைவனின் இயல்பையும் உயிரின் இயல்பையும் உலக வழக்கோடும் நூல் வழக்கோடும் சார்த்தி வரையறுத்து உணரமாட்டாமல்,

பெரிதும் மயங்கிக் கலந்து கூக்குரலிட்டுக் காதி மோதி வாதாடித் தம்மிலே பூசலும் போரும் கலாமும் விளைத்து நிற்பர். ஆனால், இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே உயிரின் தன்மையையும், இறைவனின் தன்மையையும் இத்துணைப் பொருத்தமாக வரையறுத்துத்தெளிவுற விளக்கியருளிய நம் தொல்காப்பியனார்தம் அஃகியன்ற அறிவின் திறத்தை நாம் எங்ஙனம் புகலவல்லோம்!

இனி இந் நூற்பாவில், இறைவன் மக்களுக்கு மெய்யுணர்வு தோற்றுவித்தற்பொருட்டு, அவர்கள்மேற் கொண்ட அருளிரக்கத்தால் முதல் நூல் அருளிச் செய்தான் என்று தொல்காப்பியர் இனிது உரைத்தலால், இறைவன் பேரிரக்கம் உடையவன் என்பதும், அவன் முற்காலத்தே தெய்வத் தமிழ்மொழியின்கண் முதல் நூல் அருளிச் செய்தான் என்பதும், அதனைப் பின்பற்றி அவன்றன் அருள்பெற்ற சான்றோர்கள் பற்பலரும் வாழையடி வாழையாக வந்து தோன்றி அவ்வக் காலத்திற்கு ஏற்பப் பலவகை நூல்களை அருளிச் செய்து வருகின்றனர் என்பதும், பிறவும் விளங்கா நிற்கும்.

இங்ஙனம் பண்டை நாளில் இறைவன் தமிழின்கண் முதல்நூல் அருளிச் செய்து, அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றின் இயல்புகளை அறிவுறுத்தியருளியமை,

''அருந்தவருக்கு ஆலின்கீழ்
அறம்முதலா நான்கினையும்
இருந்தவருக்கு அருளுமது
எனக்கறிய இயம்பேடி
அருந்தவருக்கு அறம்முதல்
நான்கு அன்றருளிச் செய்திலனேல்
திருந்தஅவர்க்கு உலகியற்கை
தெரியாகாண் சாழலோ''

என மணிவாசகரும்,

R. RAJU
Dy Commissioner
(Retired)
HR&CE Administration

''அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
**அறம் பொருள் இன்பம்வீடு**
மொழிந்த வாயான் முக்கண்ஆதி
மேயது முது குன்றே''

எனத் திருஞானசம்பந்தரும் போல்வார் அருளிச் செய்துள்ளவாற்றால் தெற்றெனப் புலனாகும்.

'' ஆரணம் ஆக மங்கள்
அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகில்,
கதிப்பவர் இல்லை யாகும் ;
நாரணன் முதலாய் உள்ள
சுரர்நரர் நாகர்க்கு எல்லாம்
சீர்அணி குரு சந்தானச்
செய்தியும் சென்றி டாவே! ''

—சிவஞான சித்தியார்

**ஊழ் (நியதி) :**

(23) இவ்வுலகின்கண் எல்லோரையும் எல்லாவற்றையும் மேலிருந்து இயக்கி வருகின்ற இறையருள் ஆணையாகிய நியதி தத்துவம் என்னும் ஊழ் என்பதொன்று இருந்து வருகின்றது. ("There is a divinity that shapes our ends''—**Sh.**) ''ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டுஒன்றாகும்; அன்றி அது வரினும் வந்தெய்தும் ; ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்; எனை யாளும் ஈசன் செயல்'' என்பது ஔவைப் பாட்டியின் அருளுரை. ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்று இளங்கோவடிகளும் தம் நூலின்கண் ஆங்காங்கே வற்புறுத்திச் செல்வர். கலை வித்தை அராகம் என்னும் மூன்றாலும் தொழில் அறிவு இச்சை என்னும் மூன்றும் முறையே விளங்கிப் போகநுகர்ச்சிக்கண் செல்லும் ஆன்மாக்கள் பலவும், உயர்ந்த போகத்தின் விழைவும், இழிந்த போகத்தின் வெறுப்பும் உடையனவாகத் திகழும். அதனாற் பிறரால் ஈட்டப்படும் நல்வினைப் பயனைக் கவரவும், தம்மால் ஈட்டப்படும் தீவினைப் பயனை நீக்கவும் அவ் உயிர்கள் எண்ணா நிற்கும் ; ஆனால் அங்ஙனமாக நிகழவொட்டாமல், அவரவரால் ஈட்டப்படும் வினையின் பயனை அவரவரே நுகருமாறு, அரசர் ஆணைபோல் நியமித்து நிறுத்தும் இறையருள் இயற்கை ஆணையே, நியதி தத்துவம் ஆகிய ஊழ் எனப்படும். ஒருபாற் கோடாது நடு நின்று செங்கோல் செலுத்தும் அரசின் ஆணையில்வழி, எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து செல்லுதல்போல், நியதி தத்துவம் ஆகிய ஊழ் என்னும் இயற்கைச் சட்டம் இல்லாத வழி, ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவர் நுகர்வதாய் முடியும். ஆதலின் நியதி தத்துவம் என்னும் ஊழாகிய இயற்கைச் சட்டம் ஒன்று உண்டு என்பது, பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் கண்ட முடிவு. இதனைப் "**பால்வரை தெய்வம்**" என்று தொல்காப்பியரும், 'வகுத்தான் வகுத்த வகை' என்று திருவள்ளுவரும் சிறப்பாகக் குறிப்பிட்டிருத்தல் காண்கிறோம். தலைவன் தலைவி ஆகிய இருவரும், பல பிறவிகளில் ஒருவர்க்கொருவர் உரிமை உடையவராய்த் தொடர்ந்தியைந்து மணந்து மகிழ்வர்'' என்பது, திறவோர் காட்சியில் தெளிந்த செய்தி. அதனைக் குறித்தற்கே தொல்காப்பியர், தலைவன் தலைவியரை ஆங்காங்கே 'கிழவன்' , 'கிழத்தி' என்னும் சொற்களால் விதந்து சுட்டிக் கூறுவர்.

''அண்டர்பிரான் திருவருளால்
அயலறியா மனம்விரும்பப்
பண்டைவிதி கடைக்கூட்டப்
பரவையாரும் கண்டார்''

எனச் சேக்கிழார் பெருமான் பாடுதல்போலத், தலைவனும் தலைவியும் பால்வரை தெய்வமாகிய ஊழியலின் வழியிலேயே தம்முள் ஒருவரையொருவர் சந்தித்துக் கண்டு கலந்து மகிழ்கின்றனர் என்பது, நம் பண்டைக் தண்டமிழ்ச் சான்றோர்கள் கண்டுணர்ந்த வாழ்வியற் சமய தத்துவக் கொள்கையாகும்.

''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே'

எனவரும் தொல்காப்பியச் சூத்திரம், இத்தகைய பற்பல தத்துவ நுட்பக் கருத்துக்களைத் தன்னகத்தே பொதிந்து கொண்டு நிற்றல் காணலாம்.

**சமயப் பொதுச் செய்திகள் :**

*(24)* சமய தத்துவ நூல்கள், உலகத் தோற்றமும் அமைப்பும் இயக்கமும் பிறவும் பற்றியெல்லாம் ஆராயும் தன்மையையுடையன (Cosmogony, Cosmology). சமய தத்துவ ஞானிகள், இவ்வாராய்ச்சியிற் பெரிதும் தலைப்பட்டு நுண்ணிய உண்மைகளைக் காண முயல்வர். மண் திணிந்த நிலனும், நிலன் ஏந்திய விசும்பும், விசும்பு தைவருவளியும், வளித்தலை இய தீயும், தீமுரணிய நீரும் ஆகிய ஐம்பெரும் பூதத்தியற்கையும், செயலும் பற்றி, நம் முன்னோர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து கண்டுணர்ந்திருக்கின்றனர். ''சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்வகை தெரிவான் கட்டேயுலகு'' என்பது திருக்குறள். இன்னோரன்ன பலப்பல தத்துவ நுண்பொருள் ஆராய்ச்சிகளுக்குரிய அடிப்படை வித்துப்போல,

''நிலம்நீர் தீவளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்,
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்''

எனவரும் தொல்காப்பிய மரபியற் சூத்திரம் அமைந்திருத்தல், அறிஞர்கள் கருதி யுணர்ந்து பெரிதும் மகிழத் தகுவதாகும். இந்தத் தொல்காப்பிய மரபியல் நூற்பாவினுல், பண்டைத் தமிழ்மக்கள் சமய தத்துவ ஆராய்ச்சிகளில் (Metaphysics) தலைசிறந்து திகழ்ந்திருந்தமை புலனுகின்றது. **''மூன்றன் பகுதி'' ''அறமுதலாகிய மும்முதற் பொருள்''** எனவரும் தொல்காப்பிய நூற்பாத் தொடர்களால், 'அறத்தாற் பொருள் ஈட்டிப் பொருளால் இன்பம் துய்த்து வாழ்தல் வேண்டும்' என்னும் உயரிய குறிக்கோள் நெறி, பண்டைத் தமிழ் மக்களாற் கடைப்பிடிக்கப் பெற்றமை தெற்றெனத் தெரிகின்றது. **''மூவகைக் காலமும் நெறியின் அறியும் அறிவன் தேயமும்''** என்பதனுல், பண்டைய நம் தமிழ் மன்பதையில், முக்காலமும் உணரவல்ல தக்கோர்கள் (திரிகால ஞானிகள்) பலர் இருந்து வந்தமையும் புலப்படுகின்றது.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால், அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் இயல்பு வாய்ந்த, நிறைமொழியையுடைய அருளாளர்களாகிய சமய நெறிச் சான்றோர்கள் பலர், வாழ்ந்து வந்தனர் என்பதும், தமிழ் மொழியின்கண் மந்திரங்கள் பல உண்டு என்பதும் பிறவும் விளங்குகின்றன.

*(25)* தொல்காப்பியம், மொழிக்கு இலக்கணம் கூறும் நூலேயாயினும், அதன்கண் ஆங்காங்கே கடவுள் இலக்கணமும் அழகுற நுட்பமாக அறுவுறுத்தப் பெற்றுள்ளது. ''ஒப்பும் உருவும் வெறுப்பும் என்ரு, கற்பும் ஏரும் எழிலும் என்ரு, சாயலும் நாணமும் மடனும் என்ரு, நோயும் வேட்கையும் நுகர்வும் என்ருங்கு, ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம், நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது காட்டலாகாப் பொருள என்ப'' எனவரும் தொல்காப்பியப் பொருளியல் நூற்பா,

'' அப்படியும் அந்நிறமும்
அவ் வண்ண மும்
அவன் அருளே கண்ணுகக்
காணின் அல்லால்,
இப்படியன் இந்நிறத் தன்
இவ்வண்ணத்தன் இவன்இறைவன்
என்று எழுதிக்
காட்டொ ணுதே ''

எனத் திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்த திருமொழியின் பொருளை வலியுறுத்துதல் காணலாம். அன்பு, அறிவு, ஆற்றல், அருள் முதலிய பண்புகள் எங்ஙனம் நெஞ்சுகொளின் அல்லது காட்டலாகாப் பொருள்களாகத் திகழ்கின்றனவோ, அங்ஙனமே இறைவனும் இலங்குகின்ருன் என்பது, ஒப்புயர்வற்றதோர் அரும் பெறற் சமய தத்துவ உண்மையாகப் போற்றப் படுதற் குரியதன்ருே?

## முடிவுரை :

இங்ஙனம் நுணுகி ஆராய்ந்தால், தொல்காப்பியம் என்னும் நம்முடைய பழம்பெருந் தமிழிலக்கண நூலின்கண், சமய தத்துவ நுண்பொருள்கள் பற்பல காணப்படுதலை யாவரும் உணரலாம். எனவே சமய வுண்மைகளும், தத்துவக் கருத்துக்களும், மிகவும் பிற்காலத்தில், வேற்றுவராலேயே, தமிழ் மக்களிடையிற் புகுத்தப் பெற்றன என்று ஒரு சிலர் கூறி வருவது உண்மைக்குப் புறம்பானதென்பதும்; உயரிய சமயவுண்மைகளும், நுண்ணிய தத்துவக் கருத்துக்களும், மிகப் பழங்காலத்திலேயே தமிழ் மக்களிடையே நிலவி வந்தன என்பதும்; அவைகள் நம்முடைய தமிழினத்தின் நுண்மாண் நுழைபுலனையும், கலைநாகரிகப் பண்பாட்டு நலங்களையும், மலையிலக்கென விளக்கும் அரும் பெரும் சான்றுகளாம் என்பதும் பிறவும், ஐயுறவின்றித் தெளியப்படும். 卐

# சௌந்தரிய லகரி

## (தமிழாக்கம்: வீரைக்கவிராச பண்டிதர்)

**முன்னுரை:**

[அருள் வடிவினளும், உலக உயிர்த் திரள்களுக்கெல்லாம் ஒருபெருந் தாயாக விளங்கி அருள் புரிந்து பாதுகாத்து வருபவளுமாகிய, அம்பிகையைப் பற்றித் தமிழில் உள்ள துதிநூல்கள் பல. அவற்றுள் ஆதிசங்கர பகவத்பாதர் அவர்களால், வடமொழியில் அருளிச் செய்யப் பெற்றுத் தமிழில் அழகுற மொழிபெயர்க்கப் பெற்றுள்ள சௌந்தரிய லகரி என்னும் துதிநூலும் ஒன்றாகும்.

வடமொழியில் ஆதிசங்கர பகவத்பாதர் அருளிச் செய்துள்ள சௌந்தரிய லகரி நூல், மிகவும் புகழோங்கிய சிறந்த பெருந் துதிநூல் ஆகும். இந்திய நாட்டின் பல பகுதிகளிலும், பல்வேறு காலங்களிலும் வாழ்ந்திருந்த பெருஞ் சான்றோர்கள் பலர், அதற்கு உரை எழுதியுள்ளனர். அவற்றுள் இப்பொழுது கிடைப்பவை மட்டுமே, சுமார் 35 உரைநூல்கள் என்பர். இலட்சுமீதரர், பாற்கரராயர், கைவல்யாச்சிரமர், காமேசுவரர், அச்சுதாநந்தர் முதலிய புகழ்மிக்க பேரறிஞர்கள் பலர், இந்நூலுக்கு உரைவகுத்தருளி யுள்ளனர்.

சிறந்த கவிதைநடையில் அமைந்துள்ள சௌந்தரிய லகரி என்னும் இந்நூல், சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் ஆகியவற்றின் அரும்பெரும் பொருள்களையெல்லாம் விளக்குகின்ற சாரமாகத் திகழ்கின்றது. அம்பிகையின் திருவுருவச் சிறப்பினையும், அருள்நலங்களையும் விதந்தொடுத்துப் புகழ்ந்து போற்றுகின்றது. அம்பிகையைப் போற்றி வழிபடுவதற்குரிய மந்திரங்கள் சக்கரங்கள் முதலியவற்றை விளக்குவதாக விளங்குகின்றது.

இத்தகைய பலபெருஞ் சிறப்புக்கள் வாய்ந்த சௌந்தரிய லகரி என்னும் புகழ்மிக்க வடமொழித் துதி நூலை, இராமநாதபுரம் மாவட்டத்தில் வீரை என்று குறிப்பிடப்பெறும் வீரசோழம் என்ற ஊரில் வாழ்ந்திருந்த **வீரைக் கவிராச பண்டிதர்** என்பவர், பிரமாதராயர் என்னும் தமது ஞானாசிரியரிடம் முறையாகப் பாடங் கேட்டும், அருளுபதேசம் பெற்றும், அவர் பணித்தருளியபடி, மூலத்தின் கருத்தும் சுவையும் சிறிதும் குன்றாமல், முதிர்ந்து நிறைந்து விளங்கும்வண்ணம், சிறப்புற மொழிபெயர்த்து அருளிச் செய்திருக்கின்றார்.

இந்நூலுக்குச் சைவ எல்லப்ப நாவலர் என்னும் சிறந்த தெய்விகச் சான்றோர், சாக்த ஆகம நுட்பங்களையெல்லாம் துறைபோகக் கற்றுணர்ந்து தேர்ந்து, தமது உரையினை வகுத்தருளி யிருக்கின்றார். திருவருணைக் கலம்பகம், திருவாரூர்க் கோவை, அருணாசலபுராணம், செவ்வந்திப்புராணம், திருவிரிஞ்சைப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம், வேதாரண்யப்புராணம் முதலிய பற்பல பெருநூல்களைப் பாடியருளிய சான்றோராகிய **சைவ எல்லப்ப நாவலர்** அவர்கள், சௌந்தரிய லகரிக்குச் செய்தருளியுள்ள திட்ப நுட்பம் வாய்ந்த அரிய உரையானது, அறிஞர் பெருமக்களால் பெரிதும் மதித்து வியந்து போற்றப் பெறுவதாகும். அவ்வரிய இனிய உரைநூலினைத் தழுவி, நம் 'திருக்கோயில்' இதழில், பகுதி பகுதியாக, உரைவிளக்கங்கள் தொடர்ந்து வெளிவந்து அண்மையில் முடிந்து நிறைவுற்றன.

அம்பிகையை அன்புடன் வழிபடும் அடியவர்கள் பலரும், நாள்தோறும் பக்தியுடன் ஓதிப் பாராயணம் செய்து பயன்பெறுவதன் பொருட்டு, தமிழ்ச் சௌந்தரிய லகரியின் மூலச் செய்யுட்கள் மட்டும், இங்கு ஒருசேரத் தொகுத்து முழுவதும் வெளியிடப் பெறுகின்றன. ஓதுதற்கு எளிமையாக இருக்கும் பொருட்டுக் கடின சந்திகளைப் பிரித்தும், நிறுத்தற் குறிகள் அமைத்தும், தலைப்புக்கள் தந்தும், செய்யுள்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் அனைவரும் இந்நூலை நாள்தோறும் முறையாக ஓதிப் பாராயணம் செய்து, அம்பிகையின் அருள்நலங்களைப் பெற்று, இன்புற்று வாழ்வார்களாக!
—ஆசிரியர்]

**(நூலின் மூலம்)**

**சக்தி இன்றிச் சிவம் இல்லை:**

சிவம் எனும் பொருளும் ஆதி சத்தியொடு
　சேரின் எத்தொழிலும் வல்லதாம்;
இவள்பிரிந்திடின் இயங்கு தற்கும்
　அரிதுஅரிது எனு, மறை இரைக்குமால்;
நவபெரும் புவனம் எவ்வகைத் தொழில்
　நடத்தி, யாவரும் வழுத்துதாள்;
அவனியின்கண் ஒருதவம்இலார்,
　பணியல் ஆவதோ? பரவல் ஆவதோ? (1)

**தேவியின் திருவடித் துகளே முத்தொழிற்கும் காரணம்:**

பாத தாமரையின் நுண்துகட்
　பரம அணுவினிற்பல இயற்றினால்,
வேத நான்முகன் விதிக்க வேறுபடு
　விரிதலைப் புவனம் அடைய, மால்
முதுஅரா வடிவு எடுத்து, அனந்த
　முதுகணப் பணடவி பரிப்ப; மேல்
நாதனால் பொடிபடுத்து நீறுஅணியின்
　நாம் உரைத்து என்? அவள் பான்மையே! (2)

**அம்பிகையால் அன்றி நன்மை இல்லை:**

அறிவிலர்க்கு இதய திமிரம் ஈரும்
　அளவற்ற ஆதவர், அளப்பிலா
எறிகதிர்ப் பிரபை குழைத்து இழைத்தனைய
　தீவி; யாமளை; நினைப்பிலார்
செறி மதிக்கு இனரின் ஒழுகு தேன்அருவி;
　தெறுகலிக்கு அருள் மணிக்குழாம்;
பிறவி மைக்கடல் விழாது எடுப்பதொர்
　பெருவராக வெண் மருப்புஅரோ! (3)

**தேவியே யாவும் தருவாள்:**

தேவு எனப்புகழ, அதின் நிமிர்ந்து நிகர்
　செப்புவார், அபய வரதமாம்
பாவகத்து அபிநயத்தோடு உற்றகை
　பரப்பி என்? பயம் ஒறுக்குமே?
யாவருக்கும் அஃது அரிது! நின்பதம்
　இரப்ப யாவையும் அளிக்குமால்;
மூவருக்கும் ஒரு தாவரப் பொருள்என்
　மூலமே தழையும் ஞாலமே! (4)

### தேவியின் அருட்டிறம்:

தொடுகரச் சிலை ; தொடப் பொருமலர் ;
சுருப்புநாண் ; இடுவது ஐந்துகோல் ;
அடுபடைத் தலைவனார் வசந்தம்; அலை
தென்றல் தேர்; உருவம் அருவமாம்;
முடுகு கொற்ற மதன் ஒருவன், இப்புவனம்
முற்றும் வெற்றிகொள, முடிவிலா
நெடு மலர்க்கண் அருள் சிறிது அளித்தனைகொல்?
நீலியே! கர கபாலியே! (5)

### வழிபட்டுப் பயன்பெற்றோர்:

மாயன் வணங்கி உன் மால்வடிவம் கொள
வாடும் அரன்துயர் போதாதோ?
தூய மதன்தொழ ஆண்வடிவம் புணர்
தோகை கண்வண்டு, அயில் தேனேபோல்
மேய வழங்கும் உருபம்அது என்சொல?
மேல்இது கண்டவர் வாழ்வாரோ?
நீ அதிரஞ்சகி! மோகன வஞ்சகி!
நீ செய்வது ஒன்றல; மாதாவே! (6)

### நேரில் வந்து அருள்க:

மேகலை பொங்க, மதாசல கும்பம்
எழுமுலை கண்டு இடைசோரா, நீர்
மாக வளங்கெழு நாள்நிறை அம்புலி
வாண்முகம், அம்புவில், ஏடார் போது,
ஏக நெடுங்கழை, பாசமொடு அங்குசம்
ஏர்பெற வந்தருள் கபாலி!
'நீ கமலம் திகழ் தாள்வருடு' என்றுஅரன்
நீர்மையின் விஞ்சிய கோமாதே! (7)

### தேவியின் யோக நித்திரை:

ஆர் அமுது இன்கடல் வேலி, செழுந்தரு
வாய்மணி பம்பிய தீவு ஊடே,
பார கடம்புஅடர் கானில், அருங்கொடை
பாய்மணி மண்டப வீடு ஊடே,
கோர சிவன்பர மேசன் உன்மஞ்சம்,ஓர்
கூர் பரியங்கம் எனு மேலே
சீர் அடரும் பரஞானம் உறும்களி,
தேவர் அருந்துவர் பூ மாதே. (8)

### குண்டலினி சத்தி:

மூலம் மணிபூ ரகத்தோடு இலிங்கம் மார்பு
முதுகளம் விற்புருவநடு மொழிவது ஆறு;
ஞாலமும் மென்புனலும் அனற்பிழம்பும் காலும்
நாதமுறு பெருவளியும் மனமும் ஆக
மேல்அணுகிக், குளபதத்தைப் பின்னிட்டு, அப்பால்
மென்கமலத்து ஆயிரம்தோட்டு அருணபீடத்து
ஆலவிடம் பருகிய தன் மகிழ்நரோடும்
ஆனந்தம் உறும் பொருளை அறியலாமே. (9,

''தாள்இணைக் கமலம் ஊறித்
தரும் அமிழ்து உடலம் மூழ்க,
மீளஅப் பதங்கள் யாவும்
விட்டு,முற் பழைய மூலம்
வாள்அரவு என்ன ஆகம்
வளைத்து,உயர் பணத்தி னோடு,
நாளும் மைக்கயற்கண் துஞ்சும்;
ஞான ஆனந்த மின்னே!'' (10)

### தேவியின் மந்திரச் சக்கரம்:

சிவகோணம் முன்பகர்வது ஒருநாலு; சத்திநெறி
செறிகோணம் அத்தொடுஒரு மருவுகோண்;
நவகோணம் உட்படுவது எழுமூவிரட்டி,ஒரு
நவில்கோணம் உற்றதுவும், வலயமாய்
இவரா நிரைத்ததளம் இருநாலும், எட்டு இணையும்
எழிலாய வட்டமொடு சதுரமாய்,
உவமானம் அற்ற தனித்தனி மூவகைக்கணும், என்
உமைபாதம் உற்ற சிறு வரைகளே. (11)

### தேவியின் திருவழகு:

ஆதி சுந்தரி வடிவினை,
அயன்முதற் புலவோர்
ஏது கண்டு அளவிடுவது?
தமைஇகழ் இமையோர்
மாதர், இங்கு இவள் மகிழ்நரோடு
உறைகுவம் எனின், இப்
பேதை கொங்கைகள்
பெறுகுவம் என மறுகுவரால்'' (12)

### தேவியின் திருவருட் சிறப்பு:

அறக் கிழவன்,மனிதன், விரகில்லாக் கொச்சை,
அழகிருந்த ஊரில்இருந்து அறியானேனும்;
உறக்கருணை கொழிக்கும்உனது அமுத வாரி
ஊடணுகின், அவனை அரமகளிர் எல்லாம்
நறைக்குழலும் சரிந்திட, உத்தரீயம் சோர,
நாண்அழிய, வளைசிதற, உடுத்த ஆடை
புறத்துவிழ, மயலொடும்பின் தொடர்வர் என்றால்,
பொற்கொடி! நின் புதுமைஎவர் புகழ வல்லார்? (13)

### தேவியின் திருவடிநிலை:

பணைபார் புனல்கனலி வளிவான் மனத்தில்அறு
பதில், நால் ஒழித்தது, முன் அடைவிலே
இணைநால் ஒழித்தது, இருகதிர் ஏற உற்றது,
மூஇணை போயது, எட்டினொடு கதிர்கள் நால்
அணையா நிரைத்தது, உறுகதிர் நால் அடுத்து,
அதன்அளவாய் இலக்கம் அறுவகையினால்,
உணரா உரைத்த கதிர்களின்மேல் இருக்கும்
எனது உமைபாத செக்கர்விரி கமலமே (14)

### வாக்குச் சித்தி தந்திரம் (கவிதைத் திறன் பெற வழிபடும் முறைமை):

உனதுசரற் காலமதி அனைய மெய்யும்,
உடல்குழைத்த பிறைச்சடையும், கரங்கள் நான்கும்
அனவரதம் உறும் அபய வரத ஞான
அருட்பளிங்கு வடமொடு புத்தகமும் ஆக
நினைகிலர், முன்வழுத்திலர், பின்வணங்கார்;எங்ஙன்
நிறைத்தபசுந் தேனும், அடு பாலும், தூய
கனியுமென மதுரம்விளைந்து ஒழுகு பாடற்
கவிதைபொழிவது? கயிலைக் கடவுள் வாழ்வே! (15)

### காமராசகூட தந்திரம்: (இன்சுவைக் கவிதை இயற்ற வழிபடும் முறைமை):

வார்இன்பமுலை மலைமடந்தை! கவி நாவலர்
மனக்கமல வனம்அலர நீள்
தேர்இன்ப இளவெயில் தழைக்கும் ப்ரபை செய்ய
செவ்விநிறம் உணரும் உரவோர்,
தார்இன்ப நறவொழுகு சுருள்ஓதி இருள்விரவு
தவளநிற வாணி! கலைதேர்
பேரின்ப மதுரஅலை எறிஅமுத கவிதைகொடு
பேருலகை மகிழ்விப்பரே. (16)

### சத்திகூட தந்திரம்: (காவியம் பாட விரும்புவோர் வழிபடும் முறைமை):

இந்து சிலையைப் பிளந்து உள்நிறம் வகுத்தனைய
எழில்வசனி ஆதி மடவார்,
அந்தஇணை நால்வர் புடைசூழ, மலைமங்கை தனது
அருணவடிவு உணர அறிவோர்,
கொந்தவிழ விரிதவள மலர்மங்கை முககமல
கோல பரிமள கவிதையால்,
செந்தமிழின் வடகலையின் முதுமொழிக் காவியத்
தெளிபாடல் செய்யும் அவரே! (17)

### சமரிட தந்திரம் (மகளிர் வசியம் பெற):

உனதுநிறம் எனும்இளைய கதிர்இரவி
வெயில்முழுகும் உலகடைய என நினைகுவோர்,
வினைகெழுமு கொலைமறலி அனையவிழி
உருவசிமுன் விரவும்அர மகளிர் விழைவோர்;
அனவரதம் எனதமுது பொழிகவியும்,
உனதருளும், எனதுடலும், உயிரும்,உயிர்சூழ்
மனமும், அதில் உணர்வும், வருகளியும் என
நினைவுருக, மலையரையன் உதவும் மயிலே! (18)

### மன்மதகலாப் பிரயோகம் : (இன்ப நலம் எய்த):

ஆதி விந்துவை முகம்என, இணைமுலை
கீழ்இரண்டு அதன்வடிவுஎன, அருகுதாழ்
கோதறும் சுடர்எழ அழகுஒழுகும் த்ரிகோணம்
ஒன்றுஎன, உனதுஎழில் இரதிதோய்
காதலன்கலை தமதிடம் நினைப்பவர்,
காணும் மங்கையர் கலைகொளல் அரியதோ?
ஓதில், இங்கு இருசுடர் முலைஅனைய
உலக மங்கையை மயல்செய்வர்; கமலையே! (19)

## காருடப் பிரயோகம்: (விடமும் சுரமும் தீர்க்க):

ஆடல் அம்பிகை இமகர சிலைவடிவு
ஆளும் நெஞ்சினுள் வழிவுறு கிரணம், மேல்
ஓடி எங்கணும் உடல்பெருகு அமிழ்தென
ஊடெழும் ப்ரபை தமதிடம் உணர்குவோர்,
நாடவும் கொடுவிடம் ஒரு கலுழனை
நாடும் வெங்கொலை அரவென முறியும்; மேல்
மூடு அருஞ்சுரம் விழிபொழி அமுதினின்
மூழ்க, என்பொடு அழல் உடல் குளிருமே. (20)

## சமாதி நிட்டை பெற:

ஆன மின்கொடி போலும்மென் முண்டகம்
ஆறில், மண்டலம் மூவகையின்கண் ஓர்
பானு அம்புலி தீயின் நிறங்கிளர்
பான்மைகொண்டு, இதழ் ஆயிரக் கஞ்சம்நீள்
கானில், உன்களி ஞானம் உறும்கலை
காழ் மலங்களின் மூவகை பொன்றியே
போன சிந்தையின் மாயை ஒழிந்தவர்
போதம் இன்புறும் ஆதியொடு அந்தமே. (21)

## தேவி வரம் தரும் திறன்:

பேர்உறும் கயிலாசன் மகள்பெறு
பேரன், அன்புறு பேரன் எனும்சொலால்:
வாரம் அன்பொடு பார்வை வழங்கென
வாய்திறந்திட ஓடி வழங்கினுய்;
வேரி முண்டகன் மால் மகுடங்களின்
வீசுறும் ப்ரபைத் தீபம் உவந்ததாள்
சேரும் நன்பெரு வாழ்வும் வழங்குவை
தேடரும் சிவமாய மதங்கியே. (22)

## தேவியின் பரிபூரணச் சிறப்பு:

ஆதி சங்கரர் பாதியுடம்பு, இனிது
ஆளும் அம்பிகை; பாதியும் விஞ்சுமோ?
நீதி யன்றுஎன, நாயகர் பங்கையும்
நீ கவர்ந் தனையால்; அவர் எங்குளார்?
சோதி செங்கதிர் மேனி நிறைந்தது;
தூய கண்களும் மூவகை; கொங்கையோ
ஈது இரண்டு; உடல் கூனும் இளம்பிறை
ஏர் பொழிந்தது நீள்முடி எங்குமே! (23)

## தேவியின் திருப்புருவம்:

ஆதி முண்டகன், மால், சிவன், அண்டர்
மகேசன், அந்த சதாசிவன், ஐந்துபேர்
மேதகும் தொழில்போல வனைந்தருள்
வீறும், அங்கதன் ஊறலும், உண்டென
யாதும் இன்றியும், மேனியொடு எங்கணும்
மாயை தந்ததும், ஞானம் இரங்கும் ஓர்
நீதியும், திருவே! புருவங்கொடு
நீசொல் இங்கித ஏவல் புரிந்ததே! (24)

## தேவியின் பாதபூசைச் சிறப்பு:

மூவருக்கும் முதற்பிறப்பு நின்
முக்குணக் கடலென்று, முன்
சேவடிக்கண் இருப்பர், சென்னி
குவித்த செங்கை பிரிக்கிலார்;
பூஎடுத்து அவர் சென்னி வைத்திடு
போதம் உற்றவர், அம்மைநின்
கா அலர்ப் பொதி தாளில் வைக்கவும்,
மூவர் சென்னி களிக்குமே. (25)

## தேவியின் திருமங்கல நாண்:

''வேத ரஞ்சகன், மால், புரந்தரன்,
வேக சண்ட குபேரனொடு,
ஆதி எண்திசைப் பாலர் பொன்றவும்,
ஆதி அந்தம் இலாததொர்
நாதர் பொன்றிலர்; ஏது? உன் மங்கல
நாண் உறும்திறம்; ஆதலால்
நீ தழைந்தது யோகம்; அம்பிகை
நீலி என்பது பாவமே'' (26)

## முத்திரை, செபம் முதலியன:

மொழிவது உன்செபம்; முத்திரை பாணியின்
முயல்வது; எங்கும் நடப்பன,`கோயில்சூழ்
தொழில்; அருந்துவ முற்றும் உன் ஆகுதி;
துயில் வணங்கல்; களிப்பன யாவும்நீ;
ஒழிவறும் களி என்செயல் யாவையும்
உனது நன்செய் பரிச்செயல் ஆகவே,
அழிவறும் பதம் வைத்தருள்; பேரொளி
அளி விளைந்து களிப்பெழும் நாதமே. (27)

## தேவியின் தோடுகளின் சிறப்பு:

பிரமன் இந்திரன் முற்பிற
தேவர்கள் ஊண்எலாம்,
நரை பெருந்திரை அற்றநல்
ஆரமுதே கொலாம்;
ஒருவர் தங்கிலர்; நின் சிவன்
ஊண்விடம்; வாழ்வன்; மாது
இரு பெருங்குழை இட்டபொன்
ஓலையின் வாசியே. (28)

## தேவியின் ஏவலர் சொல்:

முதுமறை சொல் இளவனிதை
அயனொடுஅரி குலிசன்உனை
முறைபணியும் நெறியின் இடையே,
பதறி உனது அருகுவரும் அரனை
எதிர்கொள உனது
பரிசனம் உன்அடி வளமையால்,
இது பிரமன் மகுடம், அரி மகுடம் இது,
குலிசன் முடிஇது,
கடினம், இடருறும், இருதாள்
சதி அமர அமர வழிவிலகி,
வரவர, எமது
கடவுள் எனும்மொழி தழைகவே. (29)

## தேவியே சித்திஎலாம் தருவாள்:

பசுபதிதன் நீதிகொண்டு அறுபத்து நாலுபல
கலைஞானமும், கருணையால்
வசிவுஅற நெடும்புவனம் மாயையின் மயக்கி,
அதன் வழிவரும் பெரும்பயன் எலாம்;
இசைபெற விளைத்ததுவும், பின்னும்உனது ஏவலால்
இணையில் உனது ஆகமம் எலாம்,
விசைபெற விளைத்து, எவையும்இதுதர அளித்ததுவும்,
விமலை உனது உரிமை அலவோ? (30)

## தேவியின் மூலமந்திரம்:

அரியதாகும்சிவம் சத்திமதன் அவனிபின்பு
ஆதித்தன் மதி மதனவேள்
பெருகுவான் இந்திரன் பின்புபரை தபனன்மால்
பேசின் முக்கண்டம் அடைவே
உரியதாம்; அந்தத்தின் மாயை மும்முறை அமைத்து
உறும் எழுத்து அடைய உணர்வால்
தெரியுன் நாமத்து உனொடும் உனது உறுப்பாம்
என்று செப்பும் நான்மறைகள் உமையே! (31)

## தேவியின் மந்திர செபமுறைமை:

மோக போக விழைவி னர்,உன்
மூல வித்தை தன்னின்முன்
ஆக மாரன் யோனி பொன்அணங்கு
அமைத்து நெய்யினுல்,
யோக மார்சிவத் தழறகுள்
ஓம முற்று விமலையே
த்யாக மாமணிக் கொடு அக்க
வலயம் உட் செபிப்பரே. (32)

## சிவமும் சக்தியும் ஒன்றே:

இருசுடர் மூலத்துணைச் சிவன்வடிவு நீ; அதனை
யானும் நவமாக நினைவேன்;
உருவுநிறை தன்னில் அளவொத்த பரமானந்தம்
உடைய பரனொடு பரையுமாய்
மருவும் இனிதாம் உங்கள் கூட்டம்அது சேடமும்,
மறுத்து அதனை யுடையதுவுமாய்,
அருகில் இருவர்க்கும் ஒரு பொதுவாகி நிற்குங்கொல்?
அழிவற்ற ஞான முதலே! (33)

## தேவியை இன்றி ஒரு பொருள் இல்லை:

மனமும் நீ; வெளியும் நீ; வளியும் நீ; கனலும் நீ;
மறிபுன லும்நீ, புவியுமீ,
நினையின் பரம்அற வளர்ந்துஒளி பரந்துவிடின்
நீயன்றி ஒன்றும் உளதோ?
உனது மாரனான ஆனந்த உருவைப் புவன
உருவென வகுத்து அருளவோ?
அனையுமாய் மகவும் ஆமாறுபோல், நீ சத்தி
அருணவடி வாயது, உமையே! (34)

ஆக்கினைச் சக்கர தரிசனம் :

அருளும்உனது ஆக்கினைத் திகிரிக்குள் உட்பட்டு,
அருக்கன்மதி அனைய வடிவாய்ப்
பருவம்முதிர் பரசின் மயத்தொடுஉறு பான்மையாம்
பரம சிவனைப் பணிகுவாம்;
ஒருபொழுதில் இப்பரம சிவனைஎழு கதிர்மதிய
ஒளிகடந்து ஒளிரும் ஒருபாற்
பெருகுபர மானந்த விழைவொளி நினைப்பதுகொல்
பெறும்முத்தி? சத்தி ஒளியே! (35)

விசுத்திச் சக்கர தரிசனம் :

இறைவி,நின் விசுத்தித் தலத்திடைப் பளிங்குநிற
எழிலொடு உலகுஅருள் தந்தையாய்,
உறையும்ஒரு சிவனையும், அவன்போலும் ஆரம்பம்
உடைய உனையும் பணிகுவாம்;
நிறைமதி ஒளிக்கொத்த நெறியேகும் உமதொளியில்
நிலவுண்டு பசி களைவதோர்
முறைபெறு சகோரம்என உலகு பாதகஇருள்
முடித்துக் களித்து உறையுமே! (36)

அநாகத சக்கரத் தரிசனம் :

முன்னைத் தபோதனர்தம் இதய மானதவாவி
முதுஞான முளரி நறவு ஆர்ந்து,
அன்னத்தின் வடமொழிப் பெயர்பெற்று, மொழிபயிலும்
அறுமூன்று விஞ்சை விரிவால்,
பன்னப் பொதிந்த தீவினைநீரின் நற்குணப்
பால்பிரித்து உண்டு, களியா
மன்னப் படுஞ்சிறைப் புள்ளிணையை நாடொறும்
வழுத்துதும் மலர்க் கமலையே! (37)

மணிபூரக சக்கரத் தரிசனம் :

விரித்தஇருள் விழுங்குசத்தி மின்னொடும்பன்
மணிஇந்த்ர வில்லி னோடும்,
தரித்தமறை பரவுசிவ தபனகதிர்
எரிப்பஅதில் தழன்று தீயில்
புரித்து உலகம் குளிரஒளி தழைத்தொளிரப்
பொழி அமுததாரை மாரி,
பரித்த மணிபூரகத்துள் பச்சை முகில்
பணிவன், அருள் பழுத்த கொம்பே! (38)

சுவாதிட்டான சக்கரத் தரிசனம்:

நிலைபெறு சுவாதிட்டான
நின்சிவ அனலும்நீயும்
இலகிய தன்மை நெஞ்சத்து
இறைஞ்சுவம் உரைக்க மாட்டேம்!
உலகம்அப் பார்வைச் செந்தீக்கு
உருகி, நின் கருணை பொங்கி
அலைஎறி அமுதப் பார்வை
அளித்தினிது அருளும் அம்மே! (39)

மூலாதார சக்கரத் தரிசனம் :

நீநந்தும் மூல ஆதாரத்தில் ஆனந்த
நிர்த்தமிடும் இறைவி, நின்னொடு
ஆனந்த தாண்டவம் விளைத்து, நவ வடிவுபெறும்
ஆதிசிவனைப் பரவுவாம்;
வானம் தொடுத்து உலகம் அடையப் படைத்திடும்இவ்
வகையின் புணர்ச்சி யலவோ?
ஞானங்கொடு அனைதந்தை என உலகு தெளிவுற
நடத்துவது, ஞான ஒளியே. (40)

(ஆனந்த லகரி முற்றியது)

தேவியின் திருக்கூந்தல் (3):

அந்தர மணித்தபனர் பலமணியின் வடிவெடுத்து
அமரும்உனது அம்பொன் முடிமேல்
இந்துகலை நவமணியின் ஒழுகுபல நிறம்அடைந்து
இலகும்அதி சய வடிவினால்,
சந்த்ரகலை நன்றுநன்று என்பர்சிலர், அன்றுஅன்று
சந்த்ரகலை இந்த நிறமோ?
இந்த்ரசிலை இந்த்ரசிலை என்பர்சிலர், ஆதலால்
யாதுஎன வழுத்த உமையே! (41)

அலர்ந்தகரு நெய்தலங் காடெனக் கடைகுழன்று,
அறநெய்த்து இருண்டு செறிவோடு
இலங்குறும் இயற்கைமணம் எண்திசை அளப்ப,
அதில் இதழ்மூழ்கும் நறை விழைவினால்

பொலன்கொள்முடி ஆகண்ட லேசர்,பொற்
றுணர்விரி பொதும்பர் மதுமலர் படிவதோர்
சிலம்பளி பரந்தஉனது ஓதி,என்மனத்திருட்
செறிவுதெற அருள் கமலையே! (42)

மோதிய வெங்கதிர் மீள வெ.நண்டுஇருண்டு,
மூட ஒதுங்கிய வாறேயோ?
சோதிமுகம் கவின் ஏறி வழிந்தன
சோர விடும்கவர் காலேயோ?
ஓதி பிணைந்து பின்வீழ வகிர்ந்து அதன்
ஊடுஎழுதும் ப்ரபை யாதேயோ?
கோதறு சிந்துர ரேகை வளம்பிறர்
கூறுவது அன்றுஇது; மாதாவே! (43)

தேவியின் திருமுகம்:

கூர் எயிற்றின் அகஇதழும், கொண்கர்விழி வரிவண்டும்,
குழற்படிந்த மதுகரத்தின் குழாமும் கூடிப்
பேரியற்கை மணம்பொதிந்து புன்மூரல் முகையவிழப்
பிறழும்உனது அருணமுக கமலம் என்றால்,
ஓரியற்கை வாடும்இதழ் பொறிவண்டே படிவது,மற்று
ஓரியற்கை செயற்கைமணம் போதுசெய்யும்
நீரியற்கை மலர்க்கமலம், இதற்குடைந்து பங்கமுறல்
நீதிஎன்பது யார்அறியார்? நிகரில் மாதே! (44)

தேவியின் திருநுதல்:

கோதை நீள்முடி கொண்டொளிர் திங்கள்சேர்
பாதி வாள்நுதல் என்று படிந்ததோ!
ஈது கூடி இரண்டும் நிறைந்ததோ?
சீத பூரணத் திங்கள் சிறந்ததே! (45)

தேவியின் திருப்புருவம்:

கருவிழிச் சுருப்பு நாணும்,
கண்மலர் அம்பு, கன்னற
புருவவில், நடு ஒழித்தல்
போன்றது வளைத்துப் போர்மேல்
வரும்மதன் பிடித்த கைக்குள்
மறைந்தது போலும் என்றால்,
திருமகள் பரவும் அம்மே
விலையிது; புருவம் அன்றே! (46)

தேவியின் திருக்கண்கள் (11):

ஒருமலர்க்கண் இரவி வலத்து
உதித்தருளும்; நண்பகலும்
ஒருமலர்க்கண் மதியம் இடத்து
உதித்தருளும்; பேர்இரவும்
திருநுதற்கட் பொற்கமலச்
செந்நிறத்தீ விளைத்தருளும்
விரவுசெக்கர் மாலையும்,உன்
விழைவகலா விழுப்பொருளே! (47)

கோலநகர் விசாலையாய், நிரந்தர கல்யாணியாய்க்,
குவலயத்தால் அயோத்தியாய்க், குலமதுரை தானாய்ச்,
சாலஒளிர் போகவதியாய், அமுத தாரையாய்த்,
தண்ணளியால் அவந்தியாய்ச், சகவிசயை எனலாய்,
நீலவிழி புடைபரந்து, நெடுநகரப் பெயர்கவர்ந்து
நீண்டுசேந்து அரிபரந்து நிகர்ஒழிக்கும் என்றால்,
ஆலவிடம் அமுதெனக்கொண்டு அருந்திய உன்மத்தர்புரம்
அதனில்ஒரு புறம்கவர்தல், அதிசயமோ? தாயே! (48)

இருசெவியுண் பலகவிதை
இணர்ஒழுகு பசுந்தேனிற்
பெருகுநவ ரசம் அருந்திப்
பிறழ்ந்திடும்உன் பிணைவிழியாம்
கருநிறவண்டு இணைகளிப்பக்
கண்டுபொருது என்னேயோ?
வரிநுதற்கண் அளிசிவந்த
வளம்பாராய்! மலர்க்கொடியே! (49)

அரன்இடத்திற் பேரின்பம் அருளும்; அவன் அல்லார்பால்
அருவருக்கும்; அவன்முடிமேல் அணிநதியைச் சீறும்;
பரவுநுதல் விழி அழல்முன் பார்த்திலபோல் அதிசயிக்கும்;
பணியாய பணிவெகுளப் பயந்தனபோல் ஒடுங்கும்;
விரைமுளரி பகைதடிந்து வீரரதம் படைக்கும்;
வினவுதுணைச் சேடியர்க்கு விருந்துநகை விளைக்கும்;
இரவுபகல் அடிபரவும் எளியனைக்கண்டு அருள்புரியும்;
இத்தனையோ படித்தன,உன்இணைவிழிகள்? தாயே!(50)

இகல்பொரக் குழையை முட்டும்
இமைமயிர் ஒழுங்கிற் றூவல்,
நிகரறு நித்தர் யோகம்
நீக்கி, வெம் போகம் நல்கும்;

சிகரவெற் பரசன் தொல்லைத்
திருமரபு என்னும் தெய்வ
மகுடமா மணி,நின் கண்கள்
வயமதன் வாளி தானே! (51)

வரிவிழிச் செம்மை வெண்மை
வனப்புறு கருமை மூன்றும்,
எரிதெறு கற்ப காலத்து
இறந்தமுப் பொருளும் தோன்றும்
கருஎனக் குணங்கள் மூன்றின்
காரணம் என்னப் பெற்றால்,
அருமறைப் பொருளே! உன்றன்
அருளலா துலகம் உண்டோ? (52)

அம்மைநின் கருணை பொங்கி
அலைஎறி நயன வேலை
மும்மணி கெழும்உன் தொண்டர்
மும்மலம் களைய மூழ்கச்
செம்மைநற் சோணை யாறு,
தெளிகங்கை, யமுனை மூன்றும்,
தம்மயத் தொடும்வந் துற்ற
தன்மைஈ தென்பர் மிக்கோர்! (53)

இடம்படர் கொடியே! நின்கண்
இருசெவிக்கு உரைப்பது ஏதென்று,
அடர்ந்தெழு கயலின் கண்கள்
அடைப்பில பயப்பட்டு, அம்மா!
கடும்பகல் கமல வீடும்,
கங்குல்வாய் நெய்தல் வீடும்
அடைந்தனள், கமலை ஒன்றொன்று
அடைப்பன கண்டு கொண்டாய்! (54)

இணைவிழி இமையா நாட்டம்
எய்தியது, அலரத் தோன்றும்
பணைநெடும் புவனம், இந்தப்
பார்வைசற்று இமைக்கும் ஆயின்,
துணையிழந்து அழிவ தெண்ணித்
துணிந்தநின் கருணை என்றால்,
கணையினும் கொடியது என்னத்
கடவதோ? கடவுள் மாதே! (55)

நெடியகட் கரிய நெய்தல்
நிறையருட் சலதி எய்தாக்
கொடியனேன் பிறவித் துன்பக்
குரைகடல் கட்ந்து மூழ்க
விடின்,அதிற் குறைவ துண்டோ?
மெய்த்தவர்க்கு ஒழிந்து றாதோ?
கடிநகர் நிலவு காட்டிற்
காயுமே! கருணை வாழ்வே! (56)

கருங்குழல் நுதற்கட் பின்னற்
கவின்கடைக் கபோலம் தாழ்ந்த
அருங்குழை கடந்த கண்ணின்
அயிற்கடை, அனங்க சாபம்
நெருங்குறத் தொடுத்த ஏவின்
நிமிர்தலை ஏய்க்கும் என்றால்,
மருங்குஇல் பொற்றிருவே! யார்உன்
மதர்விழி பரவ வல்லார்? (57)

## தேவியின் திருச்செவிகள் (2) :

தோகை!நின் கபோலம் சார்ந்த
துணைநிழற் சுவடும், தோடும்
ஆக,இவ் உருளை நான்கின்
ஆனன இரதம் வாய்த்தோ?
ஏகநற் புடவி வட்டத்து
இருசுடர் ஆழித் திண்தேர்ப்
பாகரைப் பொருது, மாரன்
பழம்பகை தீரப் பெற்றான். (58)

வேரிநாள் மலர்க்குள் வாணி
விலையில் பாடல் அமுதெலாம்
சேர, மாமடந்தை நின்
செவிக்கு உண அருத்தவே,
ஆர மாலை முடி அசைப்ப,
ஆடி எற்று குண் டலம்,
பூரை பூரை என்றசொற்
பொலிந்த ஓசை பெற்றதே! (59)

## தேவியின் மூக்கு :

இமய மன்னன் மரபில் வெற்றி
இடு பதாகை அனையஎன்
அமலை உன்றன் வதன துண்ட
அணி சிறந்த மணியையோ?
விமலம் மன்னு கவிஞர், முத்தை
வெற்பில் வல்லி அலர்வதுஓர்
கமலம் மன்னு குமிழ் அளித்தல்,
கண்டது அல்ல என்பதே! (60)

## தேவியின் இதழ் :

இறைவி நின் இதழ்ச் சிவப்பு
இயற்கை; இத்தொடு இணைசொனால்
நிறைகொள் கொவ்வை; இந்நிறத்தின்
நீழல் பெற்று விம்பமாய்
உறைதல் கொண்டு நாணும்; மற்றுஓர்
உவமை இல்லை; உண்டுஎனா
அறைகடல் துகிர்ப் பழுக்கின்,
அன்று சொல்வன் அளியனே. (61)

## தேவியின் புன்முறுவல் ;

அன்பு முற்றி வடிவாய அம்மை!நினது
ஆனனத்து மதி நகைநிலா
நன்புறத்து அமுதம் ஒழுகும் மாமதுரம்
நறைகொள் சீதளம் அயின்றவாய்
இன்புளிப்பு அலது உவட்டுறுது; இனி
எனத் தெவிட்டிய சகோரம், வான்
முன்பரப்பும் நிலவு உண்ணுமால்; உனது
மூரலுக்கு நிகர் மூரலே. (62)

## தேவியின் திருவாய் (3) :

விள்ள நாஉரை எழுந்தொறும் தலைவர்
வீரமும் புகழும் அழகுமே
தெள்ளு பாடல் மதுரம் பழுத்தனைய
செய்ய கேழ்ஒளி வனப்பினால்,
அள்ளல் மாமலரை விட்டு வாணி,உனது
அருண நாஉறைய, வெள்ளையாய்
உள்ள மேனியும், என் அம்மை நீஅருள
உன்நிறம் பெறுவது ஒத்ததே! (63)

அற்றைஅருட் சிவசேடம் சண்டன்உண,
அதுபொருது ஆவல் தீரக்,
கற்றைமலர்க் குழல்உமை!நின் கருப்பூர
சகலமதிச் சகலம்போல,
உற்றதிருத் தம்பலத்தின் ஒருசகல
மேனும், இனிது உண்டு வாழப்
பெற்றிலரேல் அமரர்எனும் பெயர்பெறவும்
இருந்தனரோ? பிழைப்பில் விண்ணோர்! (64)

பசுத்தமலர்க் கொடி, கருணை பழுத்தனைய
கொம்பே!நின் பரமர் பொற்றாள்
விசைத்தொழிலைக் கலைவாணி, தனிற்பாடிப்
பாடி,அவள் மெலிவ தல்லால்,
அசைத்திலர்பொன் முடி,உனது மதுரமொழிக்கு
அசைத்தனர்என்று, அதற்கு நாணி
இசைத்தொழிலைக் கைவிட்டாள்; எழில்வீணை
உறையிலிட்டாள்; ஏது செய்வாள்? (65)

## தேவியின் திருக்கன்னம் :

மகவுஆசை யால்,இமய மலையரையன்
மலர்க்கைதொட, மனத்துள் அன்பு
புக,ஆசை யால்இறைவன் கரத்துஏந்தப்
பொலிவுறும்நின் சிபுகம் போற்றின்,
முகவாசி அரன்படிமக் கலம்பார்க்க
இட்டமுகிழ்க் காம்பு போலும்!
சகவாழ்வை இகழ்ந்து,இதயம் தனித்தவர்தம்
தவக்கொழுந்து தழைத்த அம்மே! (66)

## தேவியின் திருக்கழுத்து (2):

வயங்குறும்நின் தரளவடம் மான்மதச்சேறு
அளைய,மது மத்தர் மேனி
முயங்குதொறும் எழுபுளக முட்பொதிந்த
பசுங்கழுத்தும் முகமும் கண்டால்,
இயங்குபுனற் கருஞ்சேற்றின் எழும்வலய,
முள்அரைத் தாள்ஈன்ற கஞ்சம்,
பயம்புகுதல் கடன்அன்றோ? மாற்றிலாப்
பசுமைஒளி பழுத்த பொன்னே! (67)

செந்திரு!நின் திருமணத்திற் சேர்ந்தசரம்
மூன்றழுந்தித் திகழ்வது என்கோ!
மந்தர மத்திம தாரம் மூவகை
நாதமும் எல்லை வகுத்தது என்கோ?
கொந்திரையும் துணர்ப்பூகம் கொழுத்தபசுங்
கழுத்தின்வரைக் குறிகள் மூன்றும்,
இந்திரையும் சயமகளும் கலைமாதும்
புகழ்வதல்லால், யான்என் சொல்வேன்? (68)

### தேவியின் திருதோள்கள் :

முன்னம்ஒரு தலை,சினவுஉன் முதல்வரால்
    இழ்ந்தஅயன் முகங்கள் நான்கால்
உன்அழகுக்கு ஏற்றபசுங் கழைமணித்தோள்
    ஒருநான்கும் வழுத்து கின்றான்;
இன்னம்ஒரு சீற்றம்எழுந்து 'அரி தலையை'
    எனினும்,இவள் தடமென் தோளைச்
சொன்ன தலைக்கு அழிவுஇலைஎன்று அதில்துணிந்த
    துணிவன்றோ? சுருதி வாழ்வே! (69)

### தேவியின் திருக்கைகள் :

திருமகள்தன் சீறடியால் துவண்டும்,அதிற்
    செம்பஞ்சால் செங்கேழ் பெற்றும்,
மருமுளரி எழில்படைத்தது 'இதுவோ?நம்
    இயற்கைஎதிர் மலர்வது' என்றே
இருகரமும் நகைத்தநகை ஒளியை,உனது
    எழில்உகிர் என்று இறைஞ்சி, நாளும்
அரும்மறைகள் வழுத்துகின்றது அதிசயமோ?
    பேதைமையோ? அன்போ? அம்மே! (70)

### தேவியின் திருமுலைகள் (4) :

நித்தர்ஒரு பக்கமயில்! நிற்களிறுஉன் வட்டமுலை
    நிற்கும்எழிலில், தனது சீர்
மத்தகம் எனத்தனில் அயிர்த்து, ஒரு கரத்தை
    முடிவைத்துற உறத் தடவுமால்!
முத்தமுலை செப்புவதுஎன்? அக்களிறு பிற்குமரன்
    முற்புதல்வர் துய்த்த அமுதால்
அத்தலைமை பெற்றனர்! அதில்திவலை கிட்டினும், என்
    அற்பஉயிர் முத்தி பெறுமே! (71)

முக்கண் இறைவற்கு மயல்முற்ற, எழில்முற்றும்முலை
    முட்டிய சுரப்பு ஒழுகும்பால்,
மக்கள் இருவர்க்கு அருள, அக்களிறும் இக்குகனும்
    மட்டிளமை முற்று கிலரால்!
அக்கடல் உதித்த அமுதத்தினை எடுத்து, அதில்
    அடைத்து, இருகண் முத்திரையின்வாழ்
செக்கர்மணி மெய்க்கலசம் அத்தனை; உன் வட்டமுலை
    செப்புஅல; மலைப் புதல்வியே! (72)

கொற்ற வாரணமுக மகன், பொரு
    குஞ்சர ஆனன நிருதனார்
இற்ற கோடுஉதிர் ஆர மாலிகை,
    இதழ் மணிப்பிரபை தழையவே,
பெற்ற பாக பிநாக பாணிப்
    பிரதாபமோடு அணை புகழ் எனா
உற்றது ஆயினும், உனது பொற்றனம்
    உரைபடா, நிறை செல்வியே! (73)

தருண மங்கலை! உனது சிந்தை
    தழைந்த பால்அமுது ஊறினால்,
அருண கொங்கையில் அது பெருங்கவி
    அலை நெடுங்கடல் ஆகுமோ?
வருணம் நன்குறு கவுணியன் சிறு
    மதலை அம்புயல் பருகியே,
பொருள் நயம்பெறு கவிதை என்றுஒரு
    புனிதமாரி பொழிந்ததே! (74

### தேவியின் உரோம ரேகை (2) :

மூலமே! நின் மகிழ்நர் கோப
    முதுகனற் பொறாது, வேள்
கோல நாபி மடுவினிற்
    குளிப்ப, அந்த வெம்மையால்,
மேல வாவு தூம ரேகை
    வேர்எழும் கொழுந்தையோ?
நீல ரோம ரேகை என்று,
    நீள்நிலம் குறிப்பதே! (75)

முளரி மாது! உன் முலையினோடு
    முலைநெருக்க, இடையில் வான்
வெளியில் நீலம் ஓடி, உந்தி
    வியன் முழைக்குள் நுழையவே,
தெளியும் நீரில் யமுனை நீவு
    சிறு தரங்கம் அனைய பேர்
ஒளியில் ஞாலம் மருளும்; ஈது
    உரோம ரேகை என்னவே. (76)

### தேவியின் திருவுந்தி :

தூய கங்கை நிலை படைத்த
    சுழி; தனத்து முகையினால்
ஆய துங்க ரோம வல்லி
    ஆல வாலம்; விரகவேள்
தீ அரும்பும் ஓம குண்டம்;
    இறைவர் செங்கண் இடைவிடா
மேய கஞ்ச மடு, உன்உந்தி;
    வேறு உரைத்துஎன்? விமலையே. (77)

### தேவியின் திருஇடை (2) :

தரை மடந்தை பரவும் மங்கை!
    தன தடம் பொறாது, நின்
திரு மருங்குல் அற வளைந்து,
    சிறுகி, மூஇரேகையாய்,
வரை பிளந்து ஓர் இடிகரைக்கு
    வாழ் மரத்தொடு ஒத்ததால்;
உரை கடந்து விடுமுன், மற்றுஓர்
    உறுதி தேட எண்ணுமே! (78)

வம்பைத் தொலைத்து, உதறி இறுகிக் கனத்து இளகி,
    வருபுடை நெருக்கி வளர்மாக்
கும்பக் கடாக் களிற்றினை அனைய உனதுமுலை,
    கொடிது கொடிது என்று வெருவா
அம்பொற் றனிக்கமல இறைபொறாது இடைஎன
    அழுத்துபூண் என முனிவரோடு
உம்பர்க்கும் உளம்மருள ஒளிகெழும் இரேகை, மூன்று
    உலகமோ தெளிவது? உமையே! (79

### தேவியின் திருநிதம்பம் :

கொத்துவிரி அலர்சோலை இமையவெற் பரசன், மெய்க்
    குலமலைப் பக்கம் எனவாழ்
அத்தனை விரிந்த அகலத்தொடு பெரும்பாரம்
    அடைய, உன் நிதம்ப இடையே
எத்தனை பெரும்புவனம் இற்றாலும் அழிவிலை
    இதற்குஎனச் சேமநிதி போல்
வைத்தது பரந்து இடங்கொண்டு உலகைஇடம்தர
    வருத்தவோ! மதுர அமுதே! (80)

### தேவியின் முழந்தாள் .

பொற்கதலி புறங்காட்டும் குறங்கால் வேழப்
    புழைக்கை தடிந்தும், சிவனைப் பணிந்து தேய்ந்த
வற்கடின முழந்தாளிற் கும்பம் சாய்த்தும்,
    மணிமருப்பைக் கனதனத்தால் வளைத்தும், அம்மே
நிற்கடின கோபம் அமராமை கண்டோ?
    நித்தர் அதன் தொக்குஉரித்து அதுஉடுத்தநேயம்;
பிற்கருதி இவள் உறுப்போடு உவமைவீறு
    பெற்றதுஇது என்னும் இந்தப் பெருமைகண்டோ?(81)

### தேவியின் கணைக்கால் :

உம்பர்தொழும் தொறும், மகுடச் சாணை தீட்டி,
    ஒளிரும்நக நுனைக்கணைஓர் ஐந்தும் ஐந்தும்,
செம்பொன்மணிக் கணைக்காலாம் இணைப்பொற் றூணி,
    சேர்த்தன்றோ? சிவன்பகை, வேள் தீரு கின்றான்!
அம்புஒருபத்து அளித்தனைஇன்று, அன்று போல,
    ஐங்கணைதொட்டு அழியின்,அது பழுதுஎன்று அன்றோ?
வம்புஅமரும் கனதனப்பொற் றிருவே! உன்றன்
    மனவிரகின் செயல்ஒருவர் மதிப்பது அன்றே. (82)

### தேவியின் திருத்தாள்கள் (10) :

உளமகிழ் மகிழ்நர் சென்னி
    உறுநதி விளக்க, மாயோன்
கிளர்முடி பதும ராகக்
    கேழ்ஒளி செம்பஞ்சு ஏய்க்கும்;
முளரிநின் பதங்கள் வேத
    முடியுறப் பதித்தது; அவ்வாறு
எளியஎன் தலைமேல் வைக்க
    இரங்குவது என்று? தாயே! (83)

அரியநின் காவில் நீபுக்கு
    அசோகினிற் பாதம் ஏற்ற
உரியநம் பதத்தை ஈதோ
    உறும்? எனப் பொறாது, பெம்மான்
எரியுற மரத்தை நோக்கும்
    இயல்பினைக் கேட்டும், யான்உன்
வரிமலர்ப் பாதம் போற்றும்
    வளம் இனிது இனிது மாதே! (84)

மறு மடந்தையை மொழிய, நின்பத
    மலர் வெகுண்டு, அரன் நுதலில்ஓர்
முறை அறைந்திட, விழியிலும் பட,
    முதுபழம் பகை கருதி, வேள்
இறையை வென்றனன், விழியை வென்றனன்,
    என முழங்கிய குரல் எனாது,
அறை சிலம்புஎழும் அரவம் என்பதுஎன்?
    அருண மங்கல கமலையே (85)

இம நெடுங்கிரி உலவியும், கவின்
எழும்; நிரந்தரம் ழலரும்; மேல்
அமர் பெருந்திரு அருளும்; நின்பத
அருண முண்டகம் அனையது ஓர்
கமலம் என்பது, பனியில் வெந்து, இதழ்
கரியக் கங்குலின் முகுளமாய்,
விமலை யந்திரு மனை எனும் பெயர்
விளைவது, ஒன்றல; முதல்வியே! (86)

பஞ்சு அழுத்தினும் வாடும் நின்பத
பங்கயத்து இணை ஒப்புளஞு,
விஞ்சை கற்றவர் வன்புறக்
கமடத்தை வீணில் வியப்பரா்ம்;
அஞ்சனப் புயல் தங்கை! நின்வரர்
அம்மி மீதிலும் வைப்பராம்;
வஞ்சகக் கொடு நெஞ்சர்! அத்தனை
வல்லர் அல்லர், நினைக்கினே! (87)

அற்றவர்க்கு அருள்செய்யும் அம்மை! நின்
அற்புதப் பதம், அம்பொன்நாடு
உற்றவர்க்கு அருள் பொற்றருத் தர,
ஊடு அறிந்திலம் என்னவே,
முற்று பொற்பர மாதர் கைத்தல
முண்டகம் குவி வெண்நிலா,
நற்றி றத்தொடு நாடி நாடி
நகைக்க வாள்உகிர் என்பரே! (88)

செய்ய பஞ்சு குழம்பு எழும்புனல்,
செல்வி! நின்பதம் நல்கவே
துய்ய பங்கய வாணி, தம்பல
ஊறல் துய்த்தசொல் வாணர்போல்,
மையல் நெஞ்சுறும் ஊமரும் கவி
வாணர் ஆகி மலிந்ததால்,
மெய் அடங்கலும் மூழ்கும் உன்தவி
வீறு நாவில் அடங்குமோ? (89)

நாடிஉனது அற்புத நடைத்தொழில் படிக்கும்
பேடைமட அன்னமொடு பேதநடை கூறும்
ஆடக மணிப்பரி புரத்து அரவம், அம்மே!
ஏடவிழ் மலர்ப்பதம் இரைக்கும்மறை போலும்! (90)

தோகை! நின் மலர்ப்பதச் சுடர்க்குஉடையும் வெய்யோன்
ஆகம் அணி செய்வதுஓர் கஞுடி வடிவாகும்;
மோகமதி தானும் அது வாகி, உன் முகம்சேர்
கோகனதம் என்இதய கோகனதம் என்னும்! (91)

அன்பினர் இரப்பதின் இரட்டி அருள்செய்யும்
நின்பத தரு, துணர் நிறைந்து, ஒளிர்வனப்பா்ம்
இன்பமுறு தேன்முழுகும் என்இதய வண்டின்
தன்புளகம் மெய்க்களி தழைக்க அருள், தாயே! (92)

## தேவியின் திருவுருவ ஓவியம் :

ஓதிஇருள், மூரல்ஒளி, உற்ற குழைவு ஆகம்,
மோதுமுலை, அற்பஇடை, முற்றும்உன் நிதம்பம்,
ஆதிபரன் இன்னருள் திரண்டுஅருணம் ஆகும்
மாது! நின் மலர்ப்பதம் மனத்தெழுதி வைத்தேன்! (93)

## தேவியின் செல்வச் சிறப்பு (2) :

தூயமதி மரகதச் செப்பு ஒளிர்கலையும்,
களங்கமும்நேர் சொல்லும் காலைக்,
காயும் அதிதவள கருப்பூர சகலத்
தொடு, கத்தூரி போலும்;
நீ அருந்த அருந்த அவைகுறைதொறும்,
அவ்விரண்டும் அயன் நிறைத்தல் போலும்!
தேயும்அது வளரும்அது திங்கள்!
எளிதோ உனது செல்வம்? அம்மே! (94)

தேவி! உன் இல்லம் சிவன்உறை
அந்தப்புரம் ஆனுல்,
யாவர்உனைக் கண்டு எய்துவர்?
இமையோர் முதலானோர்,
ஆவல்கொடு எய்த்து, உன் வாயிலில்
அணிமாதி களாலே
மேவிய சித்திப் பேறொடு
மீள்வார் ஆனுரே! (95)

## தினமும் தியானிக்கும் முறை :

மூவர் மகேசன் முடிகொளும்
மஞ்சத்து எழிலாயும்,
மேவிய படிகத் தனதுஒளி
வெளிசூழ் திரையாயும்,
ஓவறு செங்கேழ் விம்பமது
இன்பத்து உருவாயும்,
பாவைநின் அகலா இறையொடு
நின்னைப் பணிவாமே! (96)

## தேவியின் கற்புச் சிறப்பு :

கலைமகளும் பொதுமடந்தை,
கமலையும் மற்று அவளே;
மலைமகள் நீ கற்புடைய
வனிதை எனப்பகரும்
குலமறைகள்; எதிர்கொடுநின்
குரவினையும் அணையா
முலைகுழையப் புணர்வது, நின்
முதல்வர்அலது, இலையால்! (97)

## தேவி வடிவே யாவும் :

வேதியர்கள் அயன்நாவில்
விஞ்சைமகள் என்றும்,
சீதரன்றன் மணிமார்பில்
செழுங்கமலை என்றும்,
நாதர்இடத்து அரிவை என்றும்
நாட்டுவர்; எண் அடங்கா
ஆதிபரன் மூலபரை
யாமளை! உன் மயக்கால்! (98)

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
Retired
HR&CE Administration

## தியானிப்போர் பெறும்நலன் (2)

அம்மே! நின் மெய்ப்பிரிவாம்
அணிமாதி தொழும் அழியா
இம்மேனி, தம் மேனி
எனத் தெளிந்து பாவிப்பார்,
செம்மேனி அரன்வாழ்வும்
சிதைவது எனப் புறக்கணித்து,
வெம்மேனி ஊழிஅனல்
தீபம் இட விளங்குவார்! (99)

தாமாக உனைநினைவோர்
தவம்இறுகத் ,தனம்இறுகி,
மாமோகப் புன்முறுவல்
மனம்கவரக், கடைவிழியால்
காமாதி பலர் உதிப்பக்,
கடம்பு அலர்க்கேழ் உறச், சிவன்
யாம்ஆம் என்று அயிர்ப்ப, மயல்
அளிப்பராம்; அரும்பொருளே! (100)

## இம்மைப் பயன் :

சுந்தரீ! நின் தொண்டர்தமைத்
தோய்வதற்கு நாமகளும்,
இந்திரையும், மலர்அயன்மால்
இடர்உழப்ப, இரதியின்கண்
அந்தமில் பேரழகொடு
கற்பழித்து, நெடுநாள் கழியச்
சிந்தையுறு பாசம் போய்ச்
சிவமயத்தைச் சேர்குவரால்! (101)

## என்பாடல் ஏற்றருள்க (2)

சேம நிதியே! அமுதே!
தேனே! நற் குணக்கடலே!
யாமளையே! அன்பர்மனத்து
இருந்தும் உரைக்கு அடங்காத
கோமளமே! அம்மே! நின்
கோகனதத் தாள்வழுத்தும்
மாமறைபோல், என்பாடல்
வண்தமிழும் கொள்வாயால்! (102)

ஆதவனுக்கு அவன்கிரணத்து அங்கியைக்கொண்டு
ஆலாத்தி சுழற்றல் என்கோ?
சீதமதிக்கு அவன்நிலவின் ஒழுகுசிலைப்
புனல்கொடு, உப சரிப்பது என்கோ?
மோதிய மைக்கடல் வேந்தை அவன்புனலால்
முழுக்காட்டும் முறைமை என்கோ?
நீதருசொற் கவிகொடு, உனைப்பாடி, உனது
அருள்பெறும் என்நீதி; அம்மே! (103)

(சௌந்தரிய லகரி முற்றிற்று)

### நூற்பயன்

வேத நுண்பொருள் ஆதி சுந்தரி
வீறு அடங்கலும் மாயமே!
ஈது அறிந்து விடா சொலும்
கவிராச பண்டிதன் வீரையான்,
நாதர் அம்சகி, தாள்பெறும்
திருநாமம் ஒன்பது நூறுமே,
ஓதின் நன்பல போகமும்,
சிவலோகமும் பெறுவார்களே! (104)

### தமிழாக்கநூற் பாயிரம் (6) :

மொழிந்தமறை நூல்இயற்றும் முகபடாம்
அணிந்து, முது ஞான தானம்
பொழிந்து, தனது இணைமணி என்று இருசுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்;
வழிந்துபெரும் புனல்பரந்து வடவரை இற்று,
உலகுஏழும் ஏழும் ஒக்க
அழிந்திடினும் அழியாத, அபிராமி
பாடல்வ்ளம் அளிக்க என்றே! (105)

இத்தனைநாள் நீஇருக்க, வாய்இருக்க,
இயல்இருக்க, அருள பாடாமல்,
மத்தனை ஆளும் கொடியை இப்போது
என் வழுத்துகின்றவாறு? என்பீரேல்,
பித்தனை யார் ஏவல் கொள்வார்? பித்து ஒழிந்தால்
உரியவர்கள் அடிமை ஓலைக்
கொத்தனை, யார் ஏவல் கொள்ளார்? கொள்ளும்போது
எவனுலே குழப்பல் ஆமே! (106)

யாமளைதன் பெரும்புகழை, ஆதிமறை
நூலின் வடித்து எடுத்த நூலை,
நாமகள் தன்பாடல் இதுஎன்று அரனுர்க்கு
நவில, அவர் நகைசெய்து, அன்றே
பாமகளை அருகழைத்துப் பருப்பதத்திற்
பொறித்திருந்த பரிசு காட்டும்
சேமநிதிப் பாடலை, என் புன்கவியாற்
கொள்வது, அவள் திறமை அன்றே! (107)

அரன்கயிலைப் புறத்து எழுதப்படும் நூலை,
அருந்தவத்துப் புட்ப தந்தன்
பரந்த வடவரை அழுத்த, அதைக்
கவுடபாதர் உளம்பதித்து, முற்றும்
தரம்பெறு சொல் அமிழ்து எனப், பின் சங்கரமா
முனிக்கு அருள, அந்த மேகம்
சுரந்து, உலகில் வாடும் உயிர்ப்பயிர் தழைப்பச்
சொரிந்தது, எனச் சொல்வர் நல்லோர்! (108)

இன்ன தன்மை நூலினைக், கவி
ராச ராச வரோதய
மன்னன், நம் பிரமாத ராயன்
வடித்து அரும்பொருள் கூறவே,
கன்னல் அம்சிலை வேள் எனும்
கவிராச பண்டிதன் வீரையான்,
சொல் நயம்பெறு காவியக்கவி
சொல்ல என்று தொடங்குவான்! (109)

வடமொழி எனும்பழைய விரிகடல் பிறந்து,
இறைவர் மனையிடை இருந்து, சிலைமேல்
இடமொடு தவழ்ந்து, தனது இடுபெயர் சவுந்தரிய
லகரி என நின்று வளர்மாது,
அடல்அரசு முன்பின்உள பலமதப் பிரபந்தம்
எனும் அடுபகை துரந்து, என் மணிநா
நடம்இடு பெருங்கவிதை மதகரியொடும்,
புவியை நகரிவலம் வந்தது இதுவே! (110)

### உரையாசிரியர் பெயர்

பிறைபுனைந்து அருளும் சிவன்தனது உவகைப்
பெருக்குஎன, வடமொழி முனிவன்
அறை சவுந் தரிய லகரியைத் தமிழால்
அருள் கவிராச பண்டிதன்றன்
நிறைமனம் கருதித், தாழைமா நகரில்
நிலைபெற வாழ் கவிஎல்லான்,
இறையளவு எனினும் தவறுஇலாது, உரைதேர்ந்து
எழுதினன் எழில்விளக்கு எனவே! (111)

# திருமுருகனின் தேவியர்

திருமுருகனின் தேவிமார்கள் இருவருள், தெய்வயானை யார்? வள்ளியம்மை யார்? என்பது, நம்மிற் பலருக்குத் தெரிவதில்லை. முருகனின் இடப்பக்கம் இருப்பவர் தெய்வயானையம்மை ; வலப் பக்கம் இருப்பவர் வள்ளியம்மை. பண்டைக் கால முன்னோர்கள், சிற்சில செய்திகளைக் குறிப்பினுலேயே உணரவும் உணர்த்தவும் வல்லவராக விளங்கியிருந்தனர். ஒரு குடும்பத்தில் ஆடவரும் பெண்டிரும் ஆகப் பலர் இருப்பின், யார் யாருக்கு என்னென்ன உறவுரிமை உடையவர் ? என்பதை, நாம் வினவி யறிந்து கொள்ள வேண்டாமலே, நயத்தக்க நாகரிக நிலையில் குறிப்பில் புலப்பட உணர்த்துவர். ஓர் ஆடவனுக்கு இடப்புறத்தில் ஒருத்தி இருந்தால், அவள் அவனுடைய மனைவி என்று குறிப்பாகத் தெரிந்து கொள்ளலாம். சகோதரிகளோ பிறரோ ஆயின், அவர்கள் வலப்பக்கம் இருப்பது மரபு. இம் மரபினுல் உறவுரிமைகளை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். மனைவி இடப்பக்கத்திற்குரியவளாகக் கொள்ளப் பெற்றமை, அப் பக்கத்திலேயே ஆடவனின் இருதயம் அமைந்திருப்பது பற்றியே ஆகும். ''என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே'' என்பது சங்கப் பாடல். உமையம்மையார் சிவபிரானின் இடப் பக்கத்தில் வீற்றிருந்தருளுதல் காணலாம். தெய்வயானையம்மை முறைப்படி மணந்து கொள்ளப் பெற்ற முதல் மனைவியாதலின், அவள் இடப்பாகத்திற்குரியவள் ஆயினுள் எனலாம். வள்ளியம்மை களவு மணத்திற்கு உரியவளாக நூல்கள் கூறுதலின், அவள் வலப் பக்கத்திற்கு உரியவள் ஆவாள். திருவாசகம் திருச்சாழலில், இறைவன் அம்பிகையை உலகறியத் தீ வேட்டமை, கலைநவின்ற பொருள்கள் எல்லாம் கலங்காமையின் பொருட்டே என்று கூறுதலால், இன்னோரனைய உலகியற் செய்திகளும் இறைவனின் திருவுருவ அமைப்புக்களில் நுட்பமாக அமைத்து விளக்கப்படுகின்றன, என்று கொள்ளுதல் பொருந்தும். தெய்வயானை கிரியா சத்தி. வள்ளி இச்சா சத்தி. தெய்வயானையின் நிறம் பொன்மை. வள்ளியின் நிறம் பசுமை. தெய்வயானை ஞானசக்தி என்றும், வள்ளி கிரியா சத்தி என்றும் கூட, நூல்கள் கூறுவதுண்டு. வள்ளியின் திருக்கரத்தில் தாமரை மலர் இருக்கும். தெய்வயானையின் கரத்தில் கழுநீர் மலர் விளங்கும். இக்குறிப்புக்கள், பாம்பன் குமரகுருதாச சுவாமிகளால், ''செக்கர்வேள் செம்மாப்பு'' என்னும் நூலில் விளக்கப் பெற்றுள்ளன.

—ஆசிரியர்.